உதயன்
விலை ரூபா 20.00
www.uthayan.com
சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஆவணி 16 வெள்ளிக்கிழமை (02.09.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 280



12
தரவு சேமிக்கும் கண்ணாடித் தட்டு



14
நான் ஒரு அப்பாவி



25
மீண்டும் நிரூபிக்கும் இலங்கை

# நேற்று இரவு குடாநாடு அல்லோலகல்லோலம்

## மர்ம நபர்களால் எங்கும் பீதி

யாழ்ப்பாணம், செப்.02

**சந்தேகத்துக்கிடமானவர்களின் நடமாட்டம் நேற்று இரவு கட்டுக்கடங்காமல் அதிகரித்தமையால் பெரும் அல்லோலகல்லோலப்பட்டது குடாநாடு. மக்கள் நித்திரையின்றிப் பீதியில் உறைந்தனர்.**

**யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் நேற்று இரவு சந்தேகத்துக்கிடமானவர்களின் நடமாட்டங்கள் அதிகமாகக் காணப்பட்டமையால் மக்கள் மத்தியில் பெரும் பதற்ற நிலை ஏற்பட்டது. இதனால் அவர்கள் விடியும் வரை நித்திரை இன்றி விழித்திருந்தனர் என எமது பிரதேச செய்தியாளர்கள் உறுதிப்படுத்தினார்கள்.**

சில இடங்களில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடியவர்களைத் துரத்திச் சென்ற இளைஞர்களுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே முறுகல் நிலையும் ஏற்பட்டது. இந்த இடங்களில் இளைஞர்களை அச்சுறுத்துவதற்காகப் படையினர் வானத்தை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்ததாகவும் சில இடங்களில் சந்தேகத்துக்கிடமான நபர்களைக் கலைத்துப் பிடிக்க முற்பட்ட இளைஞர் படையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டதாகவும் அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

கடந்த சில நாள்களாக ஆங்காங்கே இடம்பெற்று வந்த சந்தேகத்துக்கிடமானவர்களின் நடமாட்டம் நேற்று இரவு கட்டுக்கடங்காமல் அதிகரித்தது. நகரப் பகுதி முதல் கிராமப்புறங்கள் வரை பரவலாகப் பல இடங்களிலும் இவர்களின் நடமாட்டம் அவதானிக்கப்பட்டதாகவும் இதனால் அந்தப் பகுதிகளில் பதற்றமான நிலை ஏற்பட்டதாகவும் செய்தியாளர்களும் மக்களும் தெரிவித்தனர்.

பதற்றமான நிலை ஏற்பட்டதை அடுத்து அந்தப் பகுதிகளில் இருந்த மக்கள் கூட்டம் கூட்டமாக ஒவ்வொரு வீடுகளில் ஐந்து, ஆறு குடும்பங்களாகச் சேர்ந்து இருந்தனர். பெண்கள் வீடுகளுக்குள் இவ்வாறு இருக்க ஆண்கள் வீடுகளுக்கு வெளியே காவல் கடமையில் ஈடுபட்டிருந்தனர். இதனால் பலருக்கு நேற்றைய இரவு நித்திரை இன்றிக் கழிந்தது.

பக் 04

# மன்னாரில் வர்த்தகர் வெட்டிக் கொலை

மன்னார், செப்.2

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஆண்டான்குளம் வீதி ஆக்காட்டிவெளி கிராமத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு 9.30 மணியளவில் கடை உரிமையாளர் ஒருவர் தனது கடைக்குள்ளேயே வைத்து இனம் தெரியாத நபர்களினால் வெட்டி படுகொலை செய்யப்பட்டுள்ளார். கொலை செய்யப்பட்டவர் ஆக்காட்டிவெளி கிராமத்தில் வசித்து வரும் குடும்பஸ்தரான கனகரத்தினம் மகேந்திரன் (வயது-42) என விடத்தல் தீவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆண்டான்குளம் வீதி ஆக்காட்டிவெளி கிராமத்தில் வசித்து வரும் குடும்பஸ்தவரான கனகரத்தினம் மகேந்திரன் என்பவர் நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் தனது கடையில் இருந்து சுமார் 50 மீற்றர் தூரத்தில் உள்ள தனது வீட்டுக்குச் சென்று இரவு உணவை சாப்பிட்டு விட்டு மீண்டும் இரவு 9.30 மணியளவில் தனது கடையில் படுப்பதற்காக சென்றார்.பின் நேற்று காலை அவர் இரத்த வெள்ளத்தில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று வியாழக்கிழமை காலை 5.30 மணியாகியும் வீடு வராத தன் காரணத்தினால் குறித்த அவரது

பக் 27

# பதற்றத்தை நீக்குவதற்கு நடவடிக்கை ஏதும் இல்லை

## பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் விசனம்

யாழ்ப்பாணம், செப்.02

கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாகக் குடாநாட்டில் சந்தேகத்துக் இடமானவர்களின் நடமாட்டம் மக்கள் மத்தியில் பெரும் பதற்றத்தை உண்டு பண்ணியுள்ளது. இதனைக் கட்டுப்படுத்துவதற்கு இதுவரை உரிய தரப்புக்கள் எவையும் நடவடிக்கை எடுக்கவில்லை. பதற்றத்தைக் கட்டுப்படுத்திச் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டியவர்கள் கூட அதனைச் செய்யாமல் வன்முறையை ஊக்குவிக்கிறார்கள்.

இவ்வாறு யாழ். மாவட்டத்தில் உள்ள பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், சமயத் தலைவர்கள் குற்றஞ்

பக் 27

# குடாநாட்டில் டெங்கு அபாயம் கட்டுப்பாட்டு வாரம் பிரகடனம்

## தடுப்பு நடவடிக்கைகள் முடுக்கி விடப்படும்

யாழ்ப்பாணம், செப்.02

யாழ். குடாநாட்டில் நாளுக்குநாள் தீவிரமடைந்து வரும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் வகையில் எதிர்வரும் 5 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் ஒருவார காலத்தை டெங்குக் கட்டுப்பாட்டு வாரமாக யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

குடாநாட்டில் டெங்குநோயின் தாக்கம் அதிகரித்து வருவதால் அதனைக் கட்டுப்படுத்தும் வகையில் வடமாகாண ஆளுநரின் விசேட உத்தரவுக்கு அமைய முக்கிய கலந்துரையாடல் ஒன்று யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில்

பக் 28

# அரசியல் கைதிகள் விடுதலையில் அரசுக்கு அக்கறை ஏதும் இல்லை

## ஜயலத் எம்.பி. சீற்றம்

கொழும்பு, செப். 02

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் புதிய ஒழுங்குகளை நடைமுறைப்படுத்தியுள்ளதன் மூலம் அரசியல் கைதிகளின் விடுதலையை விரைவுபடுத்துவதில் அரசுக்கு கரிசனை இல்லை என்பதே தெரிகிறதென ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன நேற்றுத் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கிலுள்ள உயர்பாதுகாப்பு வலயங்களைத் தொடர்ந்து வைத்திருக்கவும், தமிழ் அரசியல் கைதிகளை தொடர்ந்து தடுத்து வைக்கவும் வகை செய்வதற்காக நடைமுறைப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் புதிய ஒழுங்குகளை அரசு கடந்த வெள்ளிக்கிழமை முதல் நடைமுறைப்படுத்தியது.

இதுதொடர்பாக கேட்டபோதே ஜயலத் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை

பக் 27

# அவசர காலச் சட்டத்தை அரசு உண்மையில் நீக்கவில்லை

## அடக்குமுறை தொடர்கிறது என்கிறது ஜே.வி.பி.

கொழும்பு, செப். 02

அவசர காலச்சட்டத்தை அரசு உண்மையில் நீக்கவில்லை. பயங்கரவாதச் சட்டம் அமுலில் உள்ளது. அதில் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டு புதிய விடயங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

இவ்வாறு ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் நேற்று குற்றஞ்சாட்டினார்.

ஜே.வி.பியின் ஊடகவியலாளர் மாநாடு நேற்றுக் காலை பத்தரமுல்லையிலுள்ள கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றிய விஜித ஹேரத் எம்.பி. மேலும் கூறியவை வருமாறு:-

அவசரகாலச் சட்டத்தை நீக்குமாறு நாங்கள் சில சிவில் அமைப்புகளுடன் இணைந்து போராட்டம் செய்தோம். அரசு அதற்கு எதிர்ப்புத்

பக் 27

# போர்க்குற்றச்சாட்டுக்களை ஜெனிவாவில் எதிர்க்க முயற்சி

## சிங்களவரை ஒன்று திரள அழைப்பு

கொழும்பு, செப்டெம்பர் 02

ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்படவுள்ள போர்க்குற்றச்சாட்டுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜெனீவாவில் ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன. இலங்கை அரசின் மறைமுக ஆதரவுடன் வெளிநாடுகளில் உள்ள தூதரகங்கள் ஊடாக இதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 18ஆவது கூட்டத் தொடர் எதிர்வரும் 12ஆம் திகதிமுதல் 30ஆம் திகதிவரை ஜெனிவாவில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கை அரசுக்கு கடும் எதிர்ப்புகள் தெரிவிக்கப்படலாமென பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது. இந்தக் கூட்டத்துக்கு எதிர்ப்பைத் தெரிவிக்கும் மாபெரும் பேரணி

பக் 27

# பலாலி விமான நிலைய விஸ்தரிப்புப் பணி துரிதம்

## இந்திய அரசின் உதவியுடன்

கொழும்பு, செப். 02

பலாலி விமானநிலையத்தை விஸ்தரிக்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்றுவருகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்திய அரசின் முழுமையான பங்களிப்பின் கீழ் நடைபெறும் இவ்வேலைத்திட்டத்திற்குப் பகுதியளவு பணம் கிடைக்கப்பெற்றுள்ளது என்றும்-

விரைவில் மேலும் ஒரு தொகை நிதியை இலங்கை அரசிடம் இந்தியா கையளிக்கும் என்றும் நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

பலாலி விமானநிலையத்தில் விஸ்தரிப்பு நடவடிக்கை


பக் 27



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் வானம் மேக மூட்டத்துடன் காணப்படக்கூடிய சாத்தியம்

# மணலாற்றில் சிங்களவர்களைக் குடியேற்ற உதவி அரச அதிபர் அலுவலகம் நிறுவ முயற்சி

## கைவிடுமாறு கோருகிறார் சிவசக்தி ஆனந்தன் எம்.பி.

முல்லைத்தீவு, செப். 2

முல்லைத்தீவு மணலாற்றில் சிங்கள மக்களை குடியேற்றி அங்கு புதிதாக ஒரு உதவி அரச அதிபர் அலுவலகம் ஒன்றினை அரசு அமைப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டுவரும் நிலையில் இந்த நடவடிக்கையினை கைவிடுமாறு வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் அரசிடம் கோரியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

முல்லைத்தீவு மாவட்டத்தில் அமையப் போகும் உதவி அரச அதிபர் பிரிவுக்கான எல்லையை நிர்ணயம் செய்யும் பணியை அனுராதபுரம் மாவட்ட அரச அதிபர் பணிமனை மேற்கொண்டுள்ளதாகத் தெரிகிறது. புதிதாக அமைய இருக்கும் உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு வெலிஓயா பிரதேசம் மட்டும் போதாது. எனவே மேற்கொண்டு சில தமிழ் கிராமங்களும் முல்லைத்தீவின் கரைதுறைப்பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு புதிய அலுவலகத்துடன் சேர்க்கப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக கொக்கிளாய் கிழக்கு மேற்கு கருநாட்டுக்கேணி, கொக்குத் தொடுவாய் கிழக்கு, மேற்கு மத்தி, வடக்கு, நித்தியக்குளம், குமுளமுனை, முந்திரிகைகுளம், தண்ணீர் முறிப்புக்குளம், கடற்கரை எல்லைப் பிரதேசம், தென்னை மரவடி, டொலர்பண்ணை, கென்ற் பண்ணை போன்ற பல பூர்வீக கிராமங்கள் புதிதாக அமையவுள்ள சிங்கள பிரதேச செயலகத்துடன் இணைக்கப்படவுள்ளது.

ஏற்கனவே நெடுங்கேணியில் உள்ள மக்களை வெலிஓயாவுடன் இணைந்து கொள்ளுமாறும் அவர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து தருவதாகவும் அரசாங்கம் விடுத்த வேண்டுகோளை நெடுங்கேணி மக்கள் நிராகரித்த பின்னர் சிங்கள மக்கள் செறிந்து வாழும் வெலி ஓயாவைச் சேர்ந்த ஆறு கிராம சேவையாளர் பிரிவை தனியான உதவி அரச அதிபர் பிரிவாக மாற்றுவதற்காக தமிழர்களின் மேற்கண்ட கிராமங்களும் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் காணிகளும் அனுராதபுரம் மாவட்ட அரச அதிபர் பணிமனையினால் எல்லை நிர்ணயம் செய்யப்பட்டு இணைக்கப்பட்டுள்ளன.

புதிய உதவி அரச அதிபர் பணிமனைக்கான சிங்கள உதவி அரச அதிபரை நியமித்து பிரதேச அபிவிருத்திக்கான நிதியை தாராளமாக வழங்குவதற்கு அரசாங்கம் தயாராக இருப்பதில் இருந்தே சிறிய அளவில் சிங்கள மக்களைக் கொண்டுள்ள புதிய பிரதேச செயலகத்தில் உள்ள தமிழ் மக்களின் காணிகளில் சிங்கள மக்களை குடியேற்றுவதே அரசின் நோக்கம் என்பது தெளிவாகத் தெரிகின்றது. (எ)

# தூக்கில் தொங்கிய குடும்பப் பெண் மரணமானார்

தென்மராட்சி, செப்.2

வீட்டில். தனித்திருந்த மனநோயாளியான குடும்பப் பெண் வீட்டினுள் தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்டு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வேளையில் மரணமானார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வடமராட்சி கிழக்கு உடுத்துறை வடக்கில் இடம்பெற்றது. இதே இடத்தைச் சேர்ந்த செளந்தரராசா செந்தமிழ்ச்செல்வி (வயது 46) என்பவரே மரணமானவராவார்.

வன்னி யுத்தவேளையில் மனோநிலை பாதிக்கப்பட்ட இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார். இவரது மகள் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாலும் மகன் பருத்தித்துறைக்குச் சென்றதாலும் வீட்டில் தனிமையில் இந்தப் பெண் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

தூக்கில் தொங்கிய வேளையில் உறவினர்களால் காப்பாற்றப்பட்டு சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் இவர் மரணமானதாகக் கூறப்பட்டது. இவரது சடலம் சாவகச்சேரி வைத்தியசாலை சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (த-207)

# சொந்தக் கட்சியின் கூட்டத்தை நேற்று குழப்பினார் கௌரிகாந்தன்

## கூட்ட அறிவித்தல் பிந்திக் கிடைத்தமையே காரணமாம்

யாழ்ப்பாணம், செப்.2

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் முதலாவது கூட்டம் ஆளும் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினரான கௌரிகாந்தனால் ஏற்படுத்தப்பட்ட குழப்பத்தை அடுத்து அறிமுககூட்டமாக மாற்றப்பட்டது.

கூட்டத்துக்கான அறிவித்தல் தனக்கு 6 நாள்களுக்கு முன்னரே கிடைத்ததாக தெரிவித்து தனது சொந்தக் கட்சியினால் கூட்டப்பட்ட கூட்டத்தையே குழப்பினார் கௌரிகாந்தன்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் முதலாவது கூட்டம் தலைவர் சு.ஜெபநேசன் தலைமையில் நேற்று மு.ப. 10 மணிக்கு பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமானது.

கூட்டத்தின் ஆரம்பத்தில் ஆளும் கட்சியின் பக்கம் அமர்ந்திருந்த கூட்டமைப்பு உறுப்பினர் கௌரிகாந்தன் கூட்டம் ஆரம்பமாகிச் சிறிது நேரத்தில் எதிர்க்கட்சியின் ஆசனத்தில் சென்று அமர்ந்து கொண்டார்.

அதன் பின்னர் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் தமது திட்டங்கள், பிரதேசத்தின் அபிவிருத்தி என்பவற்றை முன்வைத்து உரையாற்றினார்கள். கூட்டம் முடிவடையும் நேரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற கௌரிகாந்தன் சபையைக் குழப்பும் வகையில் நடந்து கொண்டார்.

தேர்தல் காலத்தின் போது தனது வீட்டுக்கு வந்து மலக்கழிவுகளை வீசியது வலி.தெற்குப் பிரதேச சபையின் 'பவுஸர்' தான் என்றும் இந்தக் கூட்டத்துக்கான அழைப்புக் கடிதத்தில் செயலாளர் கையொப்பம் இடாமல் அவருக்குப் பதிலாக பிரதம எழுதுவினைஞர் கையொப்பம் இட்டுள்ளமையால் இந்தக் கூட்டம் செல்லுபடியற்றது எனவும் கௌரிகாந்தன் தெரிவித்தார்.

அத்துடன் கூட்டம் நடத்தப்படுவதற்கு ஏழுநாள்களுக்கு முன்னர் சபை உறுப்பினர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். ஆனால் ஆறு நாள்களுக்கு முன்புதான் அது தெரியப்படுத்தப்பட்டதாகவும் குற்றம் சாட்டிச் சபை நடவடிக்கையைக் குழப்பினார்.

இது தொடர்பாக குறித்த பிரதேச சபை உறுப்பினர் ஒருவரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, செயலாளர் இல்லாத காரணத்தினால் அவருக்குப் பதிலாக பிரதம எழுதுவினைஞர் கையொப்பம் இட்டிருந்தார். உள்ளூராட்சி மன்ற விதிகளின்படி செயலாளர் இல்லாதவிடத்து பிரதம எழுவினைஞர் கையொப்பம் வைக்க முடியும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இறுதியில் நேற்றைய கூட்டம் அறிமுகக்கூட்டமாக மாற்றப்பட்டதுடன் சபையின் முதலாவது கூட்டம் எதிர்வரும் 7 ஆம் திகதி இடம்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டது.

முதலாவது கூட்டத்தில் கலந்துகொண்ட எதிர்கட்சி உறுப்பினர்கள் பிரதேசத்தின் அபிவிருத்தி தொடர்பாக தமது கருத்துக்களை அமைதியான முறையில் முன்வைத்தனர்.

தேர்தல் காலத்தில் தானே முதன்மை வேட்பாளர் எனக் கூறி கௌரிகாந்தன் பிரசாரத்தில் ஈடுபட்டபோதும் விருப்பு வாக்குகளின் அடிப்படையில் ஜெபநேசனே பிரதேச சபைத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(த-15-115)

# தர்மலிங்கத்தின் நினைவு இன்று

சண்டிலிப்பாய், செப்.2

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் வி.தர்மலிங்கத்தின் 26 ஆவது நினைவு தினம் இன்று வெள்ளிக்கிழமை அனுஷ்டிக்கப்படவிருக்கிறது. இதற்கான சகல ஒழுங்குகளையும் நினைவுக்குழு மேற்கொண்டுள்ளது.

இன்று காலை 7.45 மணிக்கு தாவடியில் அமைந்துள்ள அன்னாரின் நினைவுத் தூபிக்கு மலர் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தப்படும்.

இதைத் தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு தெல்லிப்பழை துர்க்கை அம்மன் அன்னபூரணி மண்டபத்தில் அன்னதானம் வழங்கப்படும்.

அதைத் தொடர்ந்து மாலை 4 மணிக்கு சுன்னாகம் பொது நூல் நிலைய மண்டபத்தில் நினைவஞ்சலிக்கூட்டம் இடம்பெறும்.

இந்த நினைவஞ்சலிக் கூட்டத்தில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான வி.ஆனந்தசங்கரி, த.சித்தார்த்தன், தென்னிந்தியத் திருச்சபைப் பேராயர் வண.எஸ்.தியாகராசா ஆகியோர் உட்படப் பலர் அஞ்சலியுரை நிகழ்த்துவர். (த-115)

# கொழும்பை சிங்கப்பூராக மாற்றுவதே திட்டம்

## ஆளுங்கட்சி மேயர் வேட்பாளர் மிலிந்த

கொழும்பில் சேரிக்குடியிருப்பாளர்களுக்குச் சிறந்த வீடுகளை அமைத்துக் கொடுக்கும் திட்டத்தை அவர்கள் பாராட்டும் வகையில் முன்னெடுப்பேன். சிங்கப்பூரை முன்னுதாரணமாகக் கொண்டு முன்னெடுக்கவுள்ள இத்திட்டம் குறித்து அரசியல் இலாபங்களுக்காக எதிர்க் கட்சிகள் பிழையான கருத்தை விதைக்க வேண்டாம்.

-இவ்வாறு முன்னாள் அமைச்சரும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கொழும்பு மாநகரசபை மேயர் வேட்பாளருமான மிலிந்த மொரகொட நேற்றுத் தெரிவித்தார். கொழும்பு - மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

கொழும்பு மக்களைக் கொழும்பிலிருந்து வெளியேற்றுவது எனது நோக்கமல்ல. சேரிப்புற மக்களுக்குச் சிறந்த வீடுகளைக் கொழும்பு மாவட்டத்துக்குள்ளேயே அதாவது கொழும்பு மாநகரசபைக்கு எல்லைக்குட்பட்ட பகுதிகளிலேயே அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். - என்றார். (த-சி)

# நிகழ்வுகள்

### அறக்கொடை விழா

யாழ்ப்பாணம், செப்.2

ஆவரங்காலில் அமைந்துள்ள சிவசக்தி மணிமண்டபத்தின் எட்டாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அறக்கொடை விழா சிவசக்தி மணிமண்டப செயலாளர் வே.கந்தசாமி தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சிவசக்தி மணிமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவும் சிறப்பு விருந்தினராக செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகனும் கலந்துகொள்ளவுள்ளனர். (த-323)

### சமய அறிவுப்போட்டி

கோப்பாய் பழைய வீதியில் அமைந்துள்ள நாச்சிமார் கோயில் வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கான சமய அறிவுப் போட்டி இடம்பெறவுள்ளது.

இந்தப் போட்டிக்கான விண்ணப்பப்படிவத்தை 'சமய அறிவுப்போட்டி விடைகள்' என கடித உறையின் மேற்பக்கத்தில் குறிப்பிட்டு நாச்சிமார் கோயில் பழைய வீதி, கோப்பாய் எனும் முகவரிக்கு எதிர்வரும் திங்கட்கிழமை முன்னர் அனுப்பி வைக்குமாறு கோப்பாய் வீரபத்திர கோயிலடி வலி.கிழக்கு சைவ சமய அருள் நெறி மன்றம் அறிவித்துள்ளது. (323)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோதல் கலாசாரத்துக்கு வித்திடும் மர்மமனிதனின் விவகாரம்

■ வில்லவன்

ஒரு புறம் கிறீஸ் மனிதன், மர்ம மனிதன் என்ற பயம் பதற்றம். மறுபுறம் திருடர்கள், கொள்ளையர்கள் ஆயுததாரிகளின் அச்சுறுத்தல் அவலங்கள். குடா நாட்டு மக்களின் இயல்பு வாழ்க்கை இதுதான்.

சட்டத்தின் காவலர்கள் எனக் கூறப்படுபவர்கள் குற்றம் செய்பவர்களுக்கு ஒத்துழைக்கும் ஒரு புதிய யுகத்தை கிராம அலுவலர்களும் அரச ஊழியர்களும், பொது மக்களும் கண்கூடாக் காண்கின்ற அதிசயம். அடாவடித்தனத்தின் மத்தியில் யாழ்.குடாநாட்டு மக்கள் தட்டுத் தடுமாறி வாழும் தமது வாழ்க்கையை ஓட்டவேண்டிய நிலையில் உள்ளனர்.

குடா நாட்டில் மர்மமனிதர்களின் செயல்பாடுகள் பரவலாக எல்லா இடங்களிலும் அதிகரித்துக் காணப்படுகின்றன. இந்த நிலையில் பொலிஸாரும் இராணுவத்தினரும் கிராம அலுவலர்களையும் ஏனைய அலுவலர்களையும் தமது இருப்பிடங்களுக்கு அழைத்து சாத்தான் வேதம் ஓதுவது போன்று மர்மமனிதர்கள் அல்லது குற்றவாளிகளைக் கண்டால் அவர்களைப் பிடியுங்கள். தாக்காதீர்கள் அப்படித் தாக்கினால் நாம் சும்மா இருக்கமாட்டோம். இதனைப் பொதுமக்களுக்கும் தெரிவியுங்கள் என்று மறைமுகமான அச்சுறுத்தலைச் செய்கின்றனர்.

நாவாந்துறையில் மக்களுடைய வீடுகளுக்குள் புகுந்த மர்மமனிதன் பொது மக்களினால் விரட்டப்பட்ட வேளை குறிப்பிட்ட நபர் அருகில் இருந்த இராணுவ காவலரணில் புகுந்ததாகத் தெரிவிக்கப்பட்டதையடுத்து அதனைத் தொடர்ந்து பொது மக்களுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே ஏற்பட்ட குழப்பம் ஏற்பட்டது.

இதன்பின்னர் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு ஆண்கள், பெண்கள், நோயாளர், கண்தெரியாத வர்கள், சிறுவர்கள், முதியவர்கள் என்ற வேறுபாடுகள் இன்றித் தாக்கப்பட்ட பின்னர் நீதிமன்றத்தில் முன்னிலை செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இத்துடன் இந்த நடவடிக்கைகள் நிறைவு பெறவில்லை. தொடர்ந்தும் குடா நாட்டின் பல பகுதிகளிலும் இன்று மர்ம மனிதன், கிறீஸ் பூதங்களின் செயற்பாடுகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன. கோண்டாவில் பகுதியில் நேற்று முன்தினம் சந்தேகத்துக்கு இடமான ஒருவர் பலத்த போராட்டத்தின் பின்னர் அந்தப் பகுதி இளைஞர்களினால் பிடிக்கப்பட்டார்.

அவர் பிடிபட்ட சில நிமிட இடைவெளியில் குறிப்பிட்ட இடத்துக்கு விரைந்த இராணுவத்தினர் குறிப்பிட்ட நபரைப் பாதுகாத்ததுடன் எவ்வாறு அந்த நபரை அந்த இடத்தில் இருந்து காப்பாற்றிச் செல்லலாம் என்பதில் துடியாய் இருந்தனர். குறிப்பிட்ட நபரை புகைப்படம் எடுக்கக் கூடப் படையினர் அனுமதிக்கவில்லை.

கோப்பாயில் இருந்து வந்த பொலிஸாரும் அந்ந நபரைக் காப்பாற்றிச் செயல்பட்டார்களே அன்றிப் பொது மக்களுடைய குரலுக்கு மதிப்பளிக்கவில்லை. நிலைமை மோசம் அடைந்த நிலையில் மேலும் குறிப்பிட்ட இடத்துக்கு வந்த இராணுவத்தினர் கொட்டன்களால் அங்கு கூடியிருந்தவர்களை தாக்கினார்கள்.

அந்தளவுக்கு சட்டத்தின் காவலர்களுடைய செயல்பாடுகள் குடாநாட்டில் அமைந்துள்ளன.

இந்த நிலையில் நேரம் சென்று கொண்டு இருந்தது. அந்த சுற்றாடலில் பதற்றமான நிலைமை அதிகரித்துக் கொண்டு சென்றது. பொது மக்கள் குறிப்பிட்ட நபரை வெளியே விடு. எங்களுக்கு அவரை அடையாளம் காட்டு என்று கூறிக் குரல் எழுப்பினார்கள்.

இராணுவ உயர் அதிகாரிகள் கண்கட்டு வித்தை காட்டுவதற்கு கைதேர்ந்தவர்கள் என்பதை ஒரு சில நிமிடத்தில் படை உயர் அதிகாரி ஒருவர் நிரூபித்தார். மக்களுடைய கொந்தளிப்பின் மத்தியில் குறிப்பிட்ட நபர் அடைக்கப்பட்ட அறையைத் திறந்து உள்ளே சென்றார். எந்தவொரு கதையும் இல்லாது குறிப்பிட்ட நபரைக் கைகளினால் தாக்கினார்.

தொடர்ந்து அந்த நபரைத் தானே பொது மக்கள் மத்தியில் இழுத்துவந்து கைகளினால் தாக்கினார். பின்னர் அருகில் கொண்டு செல்வதற்கு தயாராக நின்ற பொலிஸ் வாகனத்தில் ஏற்றினார். இதுதான் நடந்தது.

இளைஞர்கள் தற்போது யாழ்குடாநாட்டை உலுப்பும் மர்மமனிதர்களை எதிர்பதற்கும் பிடிப்பதற்கும் கிராமம் கிராமமாக துணிந்து செயல்படுவதுடன் அதில் வெற்றியும் கண்டுள்ளனர். யார் இந்த மர்ம மனிதர்கள்? என்பதைக் கண்டுகொள்ள அவர்கள் துணிவுடன் களம் இறங்கியுள்ளனர்.

இந்த நடவடிக்கைகளில் ஈடுபடும் இளைஞர்கள் இராணுவத்தினரின் தாக்குதல்கள், எச்சரிக்கைகளுக்கு உள்ளாகும் நிலைமையும் தொடர் கதையாவே இருக்கிறது. நாவாந்துறையில் ஆரம்பமான மர்ம மனிதன் விவகாரம் இன்று குடாநாடு முழுவதும் விரிந்துள்ளது.

இந்த மர்மமனிதனின் விவகாரத்துக்குப் பொலிஸாருக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளதையே இந்தச் சம்பவங்கள் நிரூபிக்கின்றன.

இவ்வாறு பொது மக்களுடன் படையினர் முரண்படுவதும் தாக்குவதும் பொலிஸார் தேவையற்ற காரணங்களைக் கூறி சந்தேகத்துக்கிடமானவர்களை தப்பிக்க விடுவதும் மக்களிடையே பலத்த சந்தேகத்தையும் அவநம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளது.

இதனால் மக்களுக்கு படையினர் மற்றும் பொலிஸார் மீது கோபமும் சினமும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

இன்று மக்கள் வேண்டுவது சமாதானமான நிம்மதியான வாழ்க்கையைத் தான். இதனைக் குழப்ப முனையும் யாரையும் அங்கீகரிக்கவோ அன்றி ஏற்கவோ எந்தவொரு பொதுமகனும் தயாராக இல்லை. இந்த வகையில் பொலிஸாரும் இராணுவத்தினரும் பொது மக்களுடன் இணைந்து அவர்களுடைய குரலுக்கு - கோரிக்கைகக்கு மதிப்பளிக்க வேண்டும் மக்களுடைய பாதுகாப்பு எனக் கூறி அரசியல் இலாபம் தேடாமல் மக்களுக்குச் சேவை செய்ய முன்வர வேண்டும் என்பதே மக்களுடைய ஆதங்கம் ஆகும்.

இந்த மர்ம மனிதனின் நெருக்குவாரம் மேலும் அதிகரித்தால் குடாநாட்டு மக்கள் நிச்சயம் பொறுமை இழந்து விடுவார்கள். இராணுவம் மற்றும் பொலிஸார் மீதரன கோபமும் சினமும் அவர்களுக்கு மேலும் அதிகரித்தால் அதன் விளைவுகள் மோசமாகிவிடும். அதன்பின்னர் மீண்டும் ஒரு மோதல் கலாசாரம் உருவெடுத்துத் தேவையற்ற விபரீதங்கள் ஏற்பட்டுவதும் தவிர்க்க முடியாததாகிவிடும்.

உரிய தரப்புகள் இதனை நன்கு உணர்ந்து மர்ம மனிதர்களை தங்கள் இருப் பிடங்களுக்குத் திருப்ப அழைத்துக் கொள்ள வேண்டும் என்பதையே மக்கள் எதிர்பார்க்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேற்று இரவு குடாநாடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சில இடங்களில் வீடுகளுக்கு இந்த சந்தேகத்துக்கிடமானவர்கள் நுழைய முற்பட்டமையால் வீடுகளில் இருந்தவர்கள் பெரும் கூக்குரல் எழுப்பினார்கள். இவர்கள் கூக்குரல் எழுப்புவதை கேட்டு அயலில் இருந்தவர்களும் கூக்குரலிட்டனர். இதனால் அந்தப் பகுதிகளில் பெரும் அல்லோலகல்லோல நிலை ஏற்பட்டது.

சில பகுதிகளில் இந்தச் சந்தேகத்துக்கிடமானவர்களைப் பிடிப்பதற்கு இளைஞர்கள் மேற்கொண்ட முயற்சிகள் படையினரால் தடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பதற்ற நிலை ஏற்படும் இடங்களுக்கு உடனடியாகச் சென்ற படையினர் வீதிகளில் குவிந்திருந்த மக்களை உடன் வீடுகளுக்குள் செல்லுமாறு கடும் தொனியில் தெரிவித்தனர். அத்துடன் இராணுவத்தினர் சிவில் உடையிலும் சீருடையிலும் கையில் கொட்டன்களைத் தாங்கியவாறு வலம் வந்தனர். இரு இடங்களில் மக்களால் வளைத்துப் பிடிக்கப்பட்ட சந்தேகத்துக்கிடமான நபர்கள் மூவர் அந்தப் பகுதிக்கு வந்த படையினரால் ஏற்றிச் செல்லப்பட்டதாக உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவித்தன.

நேற்று நள்ளிரவு கடந்த பின்னரும் இந்தச் சந்தேகத்துக்கிடமானவர்களின் நடமாட்டம் பல இடங்களிலும் தொடர்ந்ததாக பொதுமக்கள் பலர் உதயனுக்குத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தெரிவித்தனர்.

'கடந்த சில தினங்களை விட நிலைமை இன்று இரவு மிக மோசமாகவுள்ளது. எமது வீட்டுக்கு முன்னால் உள்ள வீடொன்றுக்குள் நுழைய முயன்றவர்களை அந்தப் பகுதியில் நின்ற இளைஞர்கள் துரத்தினார்கள். எனினும் சிறிது நேரத்தில் அங்கு அந்த சீருடையினர் அவர்களை எச்சரித்து வீடுகளுக்குச் செல்லுமாறு கூறினார்கள்' என்றார் வலிகாமம் பகுதியில் உள்ள பாடசாலை அதிபர் ஒருவர்.

குடாநாட்டின் பல பகுதிகளிலும் நேற்று இரவு இடம்பெற்ற சம்பவங்களின் விவரம் வருமாறு:-

**சுழிபுரத்தில் ஒருவர் பிடிபட்டார்**

சுழிபுரம் வறுத்தோலைப் பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய நபர் ஒருவரைக் கலைத்துப் பிடித்து மக்கள் அவரை வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் நேற்று ஒப்படைத்துள்ளனர். அந்த நபர் சித்த சுவாதீனம் அற்றவர் எனப் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்ட போதும் வலிமேற்கு பிரதேசசபையின் தலைவர் அந்த நபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொண்டதை அடுத்து பொலிஸார் குறித்த நபரை நீதிமன்றில் முன்னிலை செய்யவுள்ளதாகத் தெரிவித்தனர்.

சுழிபுரம் வறுத்தோலை பகுதியில் நேற்று மாலை சந்தேகத்துக்கிடமான முறையில் நபர் ஒருவர் நடமாடியுள்ளார். மக்கள் அவரை அணுகி விசாரிக்க முற்பட்டபோது எந்தவித பதிலையும் அவர் தெரிவிக்கவில்லை. தொடர்ந்து அந்த நபரை மக்கள் பின் தொடர்ந்தனர். இதன் போது ஒரு திருமண வீட்டுக்குள் சென்ற அவர் சாப்பாடு தருமாறு சிங்களத்தில் கேட்டிருக்கின்றார்.

பின்னர் அந்த நபரை மக்கள் விசாரிக்க முற்பட்டபோது அவர் தான் அணிந்திருந்த சாரத்தைக் கழற்றி எறிந்துவிட்டுச் சென்றுள்ளார். அவர் மிக இறுக்கமான காற்சட்டை அணிந்திருந்தாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

இறுதியில் அந்த நபரை மடக்கிப் பிடித்த பொதுமக்கள் அவரை வட்டுக்கோட்டைப் பொலிஸாரிடம் கையளித்துள்ளனர். பொலிஸார் குறித்த நபர் சித்த சுவாதீனமற்றவர் எனத் தெரிவித்தனர். பொலிஸ் நிலையத்துக்கு நேரடியாகச் சென்ற வலிமேற்கு பிரதேச சபையின் தலைவர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

மக்களால் பிடித்து ஒப்படைக்கப்படுகின்றவர்கள் அனைவரும் சித்தசுவாதீனம் அற்றவர்களா? இந்த நபரை மக்கள்தான் பிடித்து உங்களிடம் ஒப்படைத்துள்ளனர். நீங்கள் இவரை நீதிமன்றில் முன்னிலைப் படுத்துங்கள் என்று அவர் பிடிவாதமாக நின்றதால் அவரை இன்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்தவுள்ளதாகப் பொலிஸார் கூறியதாக வலிமேற்குப் பிரதேச சபைத் தலைவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

**குருநகரில் பதற்றம்**

நேற்று இரவு குருநகர் அண்ணாசாலையடிப் பகுதியில் சந்தேகத்துக்கிடமாக ஒருவரின் நடமாட்டத்தை அவதானித்த அந்தப்பகுதி மக்கள் அவர்களை சுற்றி வளைத்து மடக்கிப் பிடிக்க முற்பட்டனர். இந்த நேரத்தில் தடிகள், பொல்லுகளுடன் அங்கு கும்பல் கும்பலாக வந்து இறங்கிய இராணுவத்தினர் அங்கு நின்றவர்களை அடித்து வீடுகளுக்குள் விரட்டினார்கள். இதனால் அந்தப்பகுதியில் பதற்றம் ஏற்பட்டது.

இந்தச் சம்பவத்தை அடுத்து அந்தப் பகுதி மயான அமைதியாக நிலவியதுடன் வீடுகளின் கதவுகள், ஜன்னல்கள் என்பனவும் இழுத்து மூடப்பட்டன. அனைத்து வீதிகளிலும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்தனர்.

**சுன்னாகத்தில் முறுகல்**

சுன்னாகம் கலைவாணி சனசமூக நிலையத்துக்கு அருகில் உள்ள வீடொன்றுக்குள் சந்தேகத்துக்கிடமான முறையில் மூவர் நுழைய முயன்றுள்ளனர். இதனை அவதானித்த அந்தப்பகுதி இளைஞர்கள் அந்த நபர்களை விரட்டிச் சென்று சுற்றி வளைத்துப் பிடிக்க முயன்றனர். எனினும் அந்தப்பகுதிக்கு உடனடியாக இராணுவத்தினர் வந்தனர். இதனால் அங்கு முறுகல் நிலை ஏற்பட்டது. அங்கு நின்ற இளைஞர்கள் சிலரைப் படையினர் தாக்கியதுடன் வானத்தை நோக்கி எச்சரிக்கை வேட்டுக்களையும் தீர்த்தனர். இதையடுத்து அந்தப் பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டது. படையினர் குவிக்கப்பட்டனர்.

**மட்டுவிலில் வாகனம்**

மட்டுவில் பகுதியில் நேற்று இரவு 9.15 மணியளவில் வாகனம் ஒன்றில் சந்தேகத்துக்கிடமான முறையில் சுற்றித் திரிந்த நபர்களை அப்பகுதி இளைஞர்கள் கலைத்துச் சென்று மடக்கிப்பிடிக்க முயன்றனர். அங்குள்ள தரவைப் பாதை ஒன்றின் ஊடாக இந்த வாகனம் தப்பிச் செல்ல முற்பட்டது. இளைஞர்கள் அதனைச் சுற்றி வளைத்தனர். உடனடியாக அங்குவந்த படையினர் அதனைத் தாம் பார்த்துக் கொள்வதாகவும் இளைஞர்களைக் கலைந்து செல்லுமாறும் எச்சரித்து அனுப்பினார்கள்.

**கைதடியில்**

கைதடி தச்சன்தோப்புப் பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் நேற்று இரவு 8.15 மணியளவில் நுழைய முயன்ற நபர் ஒருவர் வீட்டுக்காரர் கூக்குரல் எழுப்பியதை அடுத்துத் தப்பி ஓடிவிட்டார். இவரை அங்கு கூடியவர்கள் கலைத்துப் பிடிக்க முயன்றவேளை மின்சாரம் தடைப்பட்டது. இதனால் சந்தேகத்துக்கிடமானவர்கள் தப்பிச் செல்ல மின்சார சபையும் உதவுகிறதா என அங்கு நின்றவர்கள் கடிந்து கொண்டனர்.

**நல்லூரில்**

நல்லூர் மடத்தடிப் பகுதியிலும் நேற்று இரவு சந்தேகத்துக்கிடமான ஒருவரின் நடமாட்டத்தால் பதற்ற நிலை ஏற்பட்டதாக அங்கிருந்து மக்கள் தொலைபேசி மூலம் தெரிவித்தனர்.

இதேபோன்று வட்டுக்கோட்டை, பண்டத்தரிப்பு, இளவாலை, மானிப்பாய், நீர்வேலி, புத்தூர், கொக்குவில், சாவகச்சேரி, கொழும்புத்துறை, சண்டிலிப்பாய், கட்டுடை, அராலி, உரும்பிராய், திருநெல்வேலி, சங்கானை, கோப்பாய், ஆனைக்கோட்டை, இணுவில் பகுதிகளிலும் நேற்று இரவு சந்தேகத்துக்கிடமானவர்களின் நடமாட்டத்தால் அப்பகுதிகளில் பதற்றம் ஏற்பட்டதாகவும் தாம் பெரும் அச்சத்துடன் உள்ளதாகவும், வீதிகளில் படையினரின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாகவும் மக்கள் உதயனுக்குத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தெரிவித்தனர். இந்தத் தகவல்களை உறுதிப்படுத்த முடியவில்லை.

இதேவேளை -

யாழ்ப்பாணம், கோண்டாவில் பிரதேசத்தில் வைத்து நேற்றுமுன்தினம் மாலை பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் கையளிக்கப்பட்ட நபர் கோப்பாய் பொலிஸாரால் நேற்று யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

குறித்த சந்தேக நப்ரின் பெயர் ரி.டி.தனஞ்சே (வயது 20). இவரை விசாரணை செய்த நீதிமன்ற நீதவான் ஏ.ஏ ஆனந்தராஜா 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க உத்தரவு பிறப்பித்ததுடன் மனநோயாளியாக இருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டதை அடுத்து வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்துமாறும் உத்தரவிட்டார்.

இது தொடர்பான மீள் விசாரணைகள் எதிர்வரும் 15ஆம் திகதி நடைபெறவுள்ளது. (த-4-15-38-26-86-121-323)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தமிழர் நிலக் கபளீகரம் ஆரம்பம்

முல்லைத்தீவு மாவட்டத்தில், மணலாறுப் (வெலிஓயா) பகுதியையும் அதனை அண்டிய பகுதிகளையும் இணைத்துப் புதிதாக உதவி அரசாங்க அதிபர் பிரிவு ஒன்றை அமைப்பதில் அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது. ஆனால் அதற்கான பொறுப்பு முல்லைத்தீவு அரசாங்க அதிபரிடம் வழங்கப்படவில்லை; அதற்கு மாறாக அனுராதபுரம் அரச அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

காரணம், மணலாறுப் பகுதியில் இப்போது வசிக்கும் குறைந்த எண்ணிக்கையிலான சிங்கள மக்களுடன் இன்னும் பெரும் எண்ணிக்கையானோரைக் குடியேற்றுவதும் அதனை அண்டிய பிரதேசங்களை - தமிழர் பிரதேசங்களை- இணைத்துக் கொள்வதுமே ஆகும் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

இப்போது, கரைதுறைப்பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்டுள்ள கொக்கிளாய், கருநாட்டுக்கேணி, கொக்குத்தொடுவாயின் கிழக்கு, மேற்கு, மத்தி, வடக்கு மற்றும் குமுளமுனை, முந்திரிகைக்குளம், தண்ணீர்முறிப்புக் குளம், தென்னைமரவாடி, டொலர் பண்ணை, கென்ற்பண்ணை போன்ற பூர்வீகத் தமிழ் கிராமங்களைப் புதிதாக அமையவுள்ள வெலிஓயா உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சேர்த்துக் கொள்ள ஏற்பாடாகி உள்ளது, இந்த விவரங்களையும் நாடாளுமன்ற உறுப்பினர் தாம் வெளியிட்டுள்ள அறிக்கையில் விலாவாரியாக எடுத்துக் காட்டியுள்ளார்.

கொக்கிளாய் இப்போது கரைத்துறைப்பற்று பிரதேச செயலகப் பகுதிக்கு உட்பட்டதாக உள்ளது. அங்கு முன்னர் வாழ்ந்த சிங்கள மக்களை மீளக்குடியமர்த்துவதும் அதன் பொருட்டு அரசு பெரும் பணத்தைச் செலவிடுவதும் ஆட்சேபிக்கவோ கண்டிக்கக்கூடியதோ அல்ல.

ஆனால் குறைந்த எண்ணிக்கையைக் கொண்ட பெரும்பான்மை இன மக்களின் பகுதியைத் தனி உதவி அரசாங்க அதிபர் பிரிவாக மாற்றி, உயர்த்தி, அதனுடன் தமிழர் பகுதிகளை இணைத்து, பெரும்பான்மை இன மக்களைக் குடியேற்றி, அந்த அகன்ற தமிழ் மண்ணை சிங்களப் பெருநிலமாக மாற்றும் கபட நோக்கம் அரசிடம் உண்டு என்பது தெளிந்த நீரோடை போன்று தெரிகின்றது. அதாவது, புதிய உதவி அரசாங்க அதிபர் பிரிவு முல்லைத்தீவு மாவட்டத்தின் முதலாவது சிங்கள மக்கள் உதவி அரசாங்க அதிபர் பிரிவாக மாற்றப்படுவதற்கான சகல ஏற்பாடுகளும் விரைந்து நிறைவேற்றப்படும். அதற்கான சகல வளங்களும் அதிகாரத்தனமும் அரசின் கையில் உண்டு என்பது சொல்லித் தெரிய வேண்டிய ஒன்றல்ல.

மற்றொரு கோணத்தில் பார்த்தால், ஆழமாக நோக்கின், இனப்பரம்பலை மாற்றும் முதலாவது ஊற்றுக் கண்ணாக வெலிஓயா உதவி அரசாங்க அதிபர் பிரிவு அமையும். இனப்பிரச்சினைக்கு அர்த்த புஷ்டியான தீர்வொன்று காணப்படுவதற்கு முன்னர் வடக்குத் தமிழர்களின் *(Contiguous)* தொடர் நிலப்பரப்பு அல்ல என்று நிறுவுதற்கான ஏற்பாடாகவும் இதனைக் கொள்ளலாம்.

தமிழர் தொடர் நிலப்பரப்பாக இருந்த திருகோணமலை மாவட்டத்தைக் கல்லோயா அபிவிருத்தித் திட்டம் என்ற வர்ணப் போர்வையுடன் சிங்களக் குடியேற்றம் மூலம் உடைத்து வழிகாட்டிய டி.எஸ். சேனநாயக்கா காலத்துக்கு - சகாப்தத்துக்கு - வெலிஓயா உதவி அரசாங்க அதிபர் பிரிவை உருவாக்கும் திட்டம் மீள அழைத்துச் செல்கின்றது; நினைவூட்டுகிறது.

நெடுங்கேணிப் பகுதியை வெலிஓயாவுடன் இணைக்கும் திட்டத்துக்கு அரசு முயற்சி செய்ததும், அவ்வாறு இணைத்துக் கொண்டால் சகல வசதிகளையும் செய்து தருவதாகவும் அரசு நப்பாசை காட்டிய போதிலும், அப்பகுதி மக்கள் அதற்கு நசிந்து கொடுக்கவில்லை; ஏமாந்து எடுபடவில்லை. அந்தத் தோல்வியைச் சீரணிக்க முடியாத நிலையில், இப்போது கையில் எடுத்துள்ள திட்டமே தமிழர் பிரதேசங்கள் (சுமார்) பதினைந்தையும் வெலிஓயாவுடன் இணைக்கும் புதிய (சதித்) திட்டம் என்று கொள்வதில் தப்பில்லை.

திம்புப் பேச்சுவார்த்தையிலும், அதன் அடிப்படையிலான ராஜீவ் - ஜே.ஆர். (இந்திய - இலங்கை) ஒப்பந்தத்திலும் வடக்கு - கிழக்குத் தமிழ் மக்களின் பூர்வீகத் தாயகம் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டதை மறுதலித்துச் செயற்பட, தமிழ் மண்ணை கபளீகரம் செய்ய அரசு முடிவு செய்து விட்டது என்பதற்கான குறியீடே வெலிஓயா உதவி அரசாங்க அதிபர் பிரிவுத் திட்டம்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் தனக்கு மிகுந்த அக்கறை உண்டு என்று சர்வதேசத்துக்குக் காதில் பூச் சுற்றிக் கொண்டு, தமிழர் தரப்புடன் (தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன்) பேச்சுவார்த்தை என்று தலையை உயர்த்திக் காட்டிக் கொண்டு, திடீரென அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் மூலம் தீர்வுக்குப் போவோம் என்ற அறிவிப்போடு காலம் கழிக்கிறது அரசு.

ஆனால் கிழக்கில் தமிழர் தொடர் நிலப்பரப்பினை உடைத்துவிடும் கெடுதியை உண்டாக்குவதில் வெற்றி கண்ட 'சாதனையை' தீர்வு ஒன்றை எட்டுவதற்கு முன்னர், வடக்கிலும் நிகழ்த்துவதற்கான கெட்டித்தனத்தில் அரசு ஈடுபட்டுள்ளது.

போர்க்குற்றச்சாட்டுக்கள், மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களைத் தணித்து, தவிர்த்து நிரபராதி என்று நிரூபிப்பதில் தனது சக்தியை வலுவுடன் பயன்படுத்தும் அளவுக்கு, இனப்பிரச்சினைத் தீர்வில் அரசுக்கு அக்கறையும் அர்ப்பணிப்பும் இல்லாமைக்கான காரணத்தை சர்வதேசம் இனியாவது உய்த்து உணர்ந்து கொண்டால் மட்டுமே-

அதன்வழி செயற்படுத்தக்கூடிய மிகக் கனதியான அழுத்தங்களினால் மட்டுமே-

இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு கிடைக்குமா என்பது தங்கியுள்ளது. அவ்வாறில்லாவிடில் உனக்கும் பெப்பே, உன் அப்பனுக்கும் பெப்பே என்ற நிலையே மிஞ்சும்.

### ஆசிரிய கலாசாலை வெற்றிடங்களுக்கான

# நேர்முகப் பரீட்சையை நிறுத்தாவிட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

### இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர்

அச்சுவேலி, செப்.02

ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் மற்றும் அதிபர் பதவிகளுக்கு இன்று மன்னாரில் இரகசியமான முறையில் நடத்தப்படவுள்ள நேர்முகத்தேர்வு உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

இல்லையெனில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர் யோசேப் ஸ்ராலின் தெரிவித்துள்ளார்.

ஆசிரிய கலாசாலை ஆணையாளர் மற்றும் மத்திய கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோரிடம் இது தொடர்பான கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இதுதொடர்பாக மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது:

பதவி வெற்றிடங்களுக்குப் பொருத்தமான முறையில் விளம்பரம் செய்து விண்ணப்பங்கள் கோரப்படாது இரகசியமான முறையில் மன்னாரில் இன்று நேர்முகத் தேர்வு இடம்பெறவுள்ளது.

ஆசிரியர் கலாசாலை விடயத்தில் வடக்கு மாகாண நிர்வாகம் அதிகாரத் துஷ்பிரயோகம் செய்வதையோ அரசியல் தலையீடு செய்வதையோ அனுமதிக்கமுடியாது. ஆசிரிய கலாசாலைகள் மத்திய கல்வி அமைச்சின் கீழ் செயற்படுகின்றன.

மன்னாரில் ஆரம்பிக்கப்படவுள்ள ஆசிரியர் கலாசாலையின் விரிவுரையாளர், பதில் அதிபர் பதவிகளுக்குப் பொருத்தமான முறையில் விளம்பரம் செய்து விண்ணப்பங்கள் கோரப்படாமல் மறைமுகமாக தமது விருப்பத்துக்கு உரியவர்களை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து பதவி வெற்றிடங்களை நிரப்ப வடக்கு மாகாண கல்வி நிர்வாகம் ஏற்பாடு செய்துள்ளது.

இந்தவகையில் இன்று மன்னாரில் நடைபெறவுள்ள நேர்முகப்பரீட்சைகள் உடனடியாக தடுத்து நிறுத்தப்பட்டு உரிய முறையில் விளம்பரம்செய்து விண்ணப்பங்களை கோரி தகுதியானவர்களை நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தவேண்டும்.

எமது இந்தக் கோரிக்கை நியாயமானது என்று உரிய நடவடிக்கையை மேற்கொள்வதாகவும் ஆசிரியர் கலாசாலைகளின் ஆணையாளர் உறுதி அளித்துள்ளார்.

உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாத விடத்து இது தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து நியாயம் கோரப்படும் என்று தெரிவித்தார். (ம)

*(மற்றும் ஒரு செய்தி 11 ஆம் பக்கத்தில்)*

# சட்டத்தைப் பின்பற்றாது செயற்பட்ட 18 மருந்தகங்களுக்கு எதிராக வழக்கு

கொழும்பு,செப்.02

சட்டத்தைப் பின்பற்றாது கொழும்பில் செயற்பட்ட 18 மருந்தகங்களுக்கும் ஒரு அழகு நிலையத்திற்கும் எதிராக அழகு சாதனங்கள் மற்றும் மருந்துகள் கட்டுப்பாட்டு அதிகார சபை நேற்றுமுன்தினம் குற்றத் தாக்கல் செய்துள்ளதென சுகாதார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

மருந்தகங்களுக்கு எதிராக பல முறைப்பாடுகள் கிடைத்ததைத் தொடர்ந்து சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, திடீர் சோதனைகளை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டதாக அமைச்சின் பேச்சாளர் வன்னிநாயக்க தெரிவித்துள்ளார்.

தரக்குறைவான மருந்துகள், வைத்தியரின் சிபாரிசு இன்றி மருந்து விற்றல், பதிவு செய்யப்படாத மருந்துச்சாலைகள், தகுதி இல்லாதவர்களை கலவையாளர்களாகவும் மருந்தாளர்களாகவும் வேலைக்கமர்த்தல், மருந்துக்கான உணவுப் பொருள்களுடன் கலந்து வைத்திருத்தல், சிபாரிசு செய்யப்பட்ட வெப்ப நிலையில் மருந்துகளை பேணாதுவிடல், பதிவு செய்யப்படாத மருந்துகளை விற்றல் என பல தகவல்கள் கிடைத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# சாட்டியில் சமயக் கிரியைகள் செய்வோருக்கு உரிய வசதிகள்

யாழ்ப்பாணம், செப். 02

வேலணைப் பிரதேச சபையின் கீழ் உள்ள சாட்டி வெள்ளைக் கடற்கரையில் சமயக் கிரியைகளை மேற்கொள்ளச் செல்வோருக்கு உரிய வசதி கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட் டுள்ளன என்று வேலணை பிரதேச சபை தெரிவித்துள்ளது.


சாட்டி வெள்ளைக் கடற்கரை இந்துமயான அந்தியேட்டி மட பரிபாலன சபை, இதற்கான வசதிகளைச் செய்து கொடுத்து வருகிறது என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இங்கு கிரியைகளை மேற்கொள்ளச் செல்வோருக்கு வேண்டிய உபகரணங்களையும் இவர்கள் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

# திருவிழாக்களின் போது நல்லுபதேசங்கள்

ஆலயத் திருவிழாக்கள் மக்களுக்கு நல்லறிவு ஊட்டும் செயற்பாடுகளைக் கொண்டிருப்பது சாலச் சிறந்தது. சிலப்பதிகாரத்தில் இடம்பெற்றுள்ள இந்திரவிழா பற்றிய செய்திகள் எமக்குப் படிப்பினையாக அமையக் கூடியன.

*அறவோர் பள்ளியும் அறனோம் படையும்*
*புறநிலைக் கோட்டத்துப் புண்ணியத் தானமும்*
*திறவோர் உரைக்கும் செயல் சிறந்தொருபால்*

அதாவது, அறவோர் பள்ளிகளிலும் அறத்தைப் போற்றும் அறச்சாலைகளிலும் மதில் புறத்தே உள்ள புண்ணிய இடங்களிலும் அறத்தின் கூறுபாடு உணர்ந்தோர் அறம் போதிக்கும் செயலை மேற்கொண்டனர் எனச் சிலப்பதிகாரம் பேசுகின்றது. இந்திர விழாவின்போது சமய உபதேசம் இடம்பெற்ற செய்தியைச் சிலப்பதிகாரத்தின் மூலம் அறிகிறோம்.




திருவிழாக்களின் போது, இறை சிந்தையை ஆன்மிக ஆற்றுப்படுத்தலை ஏற்படுத்தவல்ல தெய்வீகப் போதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்து ஆலயக் குருமார் மற்றும் இத்துறை சார் தேர்ச்சியுடைய பெரியோர்கள் இந்தபணியை முன்னெடுக்க வேண்டும். அறிவுசார் ஆன்மீகக் கல்வி முன்னெடுக்கப்படுவதில் ஓர் ஒருங்கிணைப்பு ஏற்படுத்தப்பட்டு வழிப்படுத்தப்படவேண்டியது காலத்தின் கட்டாயம் ஆகும். இத்தகு செயற்பாடுகளுக்கு நல்லை ஆதீனம் போன்ற நிறுவனங்கள் வழிகாட்ட முடியும்.

*ச. லலீசன், விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
02 செப்ரெம்பர் 2011 வெள்ளிக்கிழமை

# நேரம் தவறிய சேவைகளால் பயணிகள் நெருக்கடி நிலையில்

## நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.2

யாழ்ப்பாணத்தில் இருந்து இளவாலை, குப்பிளான், மல்லாகம், தெல்லிப்பழை ஆகிய பகுதிகளுக்கு போக்குவரத்தில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ்கள் குறித்த நேரத்தில் சேவையில் ஈடுபடாது நேரம் தவறி சேவையை மேற்கொள்வதால் பயணிகள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதனால் மாணவர்களும், அலுவலர்களும், பொதுமக்களும் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

காலை 7.30 மணிக்கும் மாலை 5.45 மணிக்கும் இந்தப் பாதையூடான சேவை இடம்பெறுவது வழமை.

காலை, மாலை நேரங்களில் குறித்த நேரத்துக்கு முன்னர் அல்லது பின்னரே இந்தச் சேவை இடம்பெறுகிறது.

இது மட்டுமன்றி சில சமயங்களில் இந்தச் சேவை இடம்பெறாமலும் போய்விடுகின்றது.

குறித்த நேரத்தில் சேவையை மேற்கொள்ளாமையால் பொது மக்கள் தனியார் பஸ்களில் பயணிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

அரச பேருந்தில் பயணிப்பதற்கான மாதாந்த பருவகாலச்சீட்டுக்கள் எடுத்தும் தனியார் பஸ்களில் பயணத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது என்று விசனம் தெரிவிக்கின்றனர்.

பருவகாலச் சீட்டில் பேருந்து வழி இலக்கமும் இடத்தின் பெயரும் குறிப்பிட்டிருக்கும்.

இந்த நிலையில் வேறு பேருந்துகளில் பயணிகளை ஏற்ற மறுக்கும் நிலைமையும் காணப்படுகின்றது.


இதனால் பயணிகள் பெரும் நெருக்கடி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுக்குப் பல தடவைகள் சுட்டிக்காட்டிய போதும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்று மக்கள் கூறுகின்றனர்.

இதனால் தமது கடமைகளை குறித்த நேரத்துக்கு மேற்கொள்ள முடியாமல் உள்ளது என்றும் கூறுகின்றனர்.

இந்த வழியூடான போக்குவரத்துச் சீரான முறையில் இடம் பெறச் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (ம-311)

# மண்ணித்தலை செபஸ்தியார் ஆலயத்துக்குப் புதிய தேர்



யாழ்ப்பாணம், செப்.02

மண்ணித்தலை செபஸ்தியார் ஆலயத்துக்கு என்று வடிவமைக்கப்பட்ட புதிய தேர் யாழ்ப்பாணத்திலிருந்து லொறி மூலம் ஏ-9 பாதையூடாக மண்ணித்தலை செபஸ்தியார் ஆலயத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டுள்ளது.

இந்தப் புதிய தேர் அமைப்பதற்கான நிதியுதவியைப் பாஷையூரைச் சேர்ந்த வல்லரசு குழுவினர் வழங்கியுள்ளனர்.

யுத்தம் காரணமாக பழைமை வாய்ந்த சித்திரத் தேர் அழிவடைந்த நிலையில் ஆலயத்துக்குப் புதிய தேரை அமைப்பதற்கு வல்லரசு குழுவினர் நிதியில் தேரை வடிவமைத்து வழங்கியுள்ளனர். (ம-23)

# தினமும் ஓர் அமைச்சர் திறந்துவைக்கும் கண்காட்சி

யாழ்ப்பாணம், செப்.02

இயற்கையுடன் இணைந்த நிலைபேறான விவசாயத்தை நோக்கி என்னும் தொனிப் பொருளிலான விவசாயக் கண்காட்சி எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து வெள்ளிக்கிழமைவரை இடம்பெறவுள்ளது.

இந்தக் கண்காட்சிக்கு தினமும் ஓர் அமைச்சர் வருகை தரவுள்ளார்.

யாழ்.மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் இடம் பெறவுள்ள இந்தக் கண்காட்சியில் முதல் நாள் நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் இரண்டாம் நாள் நிகழ்வில் விவசாய அமைச்சர் மஹிந்த யாப்பா அபயவர் தனாவும் மூன்றாம் நாள் நிகழ்வில் நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவும் கலந்துகொள்வர்.

நான்காம்நாள் நிகழ்வில் கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர் நிஷாட்பதியுதீனும் ஐந்தாவது நாள் நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவும் கலந்து கொள்வர்.

தினமும் மாலை 4 மணிக்கு இந்த அமைச்சர்கள் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (ம-7)

# ஆபாசப் படம் வைத்திருந்தவருக்கு அபராதம்

வலி.வடக்கு, செப். 02

கையடக்க தொலைபேசியில் ஆபாசப் படங்கள் வைத்திருந்த இளைஞர் ஒருவருக்கு 2 ஆயிரத்து ஐநூறு ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

மல்லாகம் நீதவான் நீதிமன்றில் சுன்னாகம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது குறிப்பிட்ட இளைஞர் நீதிமன்றில் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

இதனையடுத்து இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடக் கூடாது எனவும் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-86)

# பிரதேச சபையின் அனுமதிபெறப்படாது பாதுகாப்பு அமைச்சின் நிதியில் கட்டடம்

## தெல்லிப்பழை மகாஜனாவில் அமைப்பு

யாழ்ப்பாணம்,செப்.02.

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் பாதுகாப்பு அமைச்சால் அமைக்கப்படு வரும் மூன்று மாடிக் கட்டடம் வலி. வடக்கு பிரதேச சபையின் அனுமதியின்றி அமைக்கப்பட்டு வருதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் பாதுகாப்பு அமைச்சின் நிதியுதவியில் 24 மில்லியன் ரூபா செலவில் 3 மாடிக் கட்டடம் அமைக்கப்பட்டு வருகின்றது. இந்தப் பணிகளைப் படை யினரே மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தக் கட்டடம் அமைப்பதற்காக பிரதேச சபையின் அனுமதி பெறப்படவில்லை. தற் போது வலி.வடக்கு பிரதேச சபையால் கட்டடம் அமைப்பதற்கான அனுமதியைப் பெறுமாறு பாடசாலை அதிபருக்கு கடிதம் அனுப்புப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சிடமிருந்து மேற்படி கட்டடம் அமைப்பதற்கான வரைபடம் இன்னும் பாடசாலைக்கு கிடைக்காமையால் இந்த அனுமதி பெறுவதற்கு தாமதமடைவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அமைக்கப்படும் கட்டடம் பிரதேச சபையின் பிரமாணங்களுக்கு அமைவாக அமைக்கப்படாவிட்டால் சட்ட விரோத கட்டடமாக கருதப்பட்டு அதனை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் அமைக்கப்பட்டு வரும் மேற்படி கட்டடத்தை கடந்த மாதம் 25 ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் நேரடியாகச் சென்று பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-15)

# வடகடல் நிறுவனத்துக்கு புதிய முகாமையாளர்



யாழ்ப்பாணம், செப். 2

வட கடல் நிறுவனத்தின் உதவிப் பொது முகாமையாளராக கடமையாற்றி வந்த பிரான்சிஸ் கேதீஸ்வரன் நேற்று முதல் அந்த நிறுவனத்தின் பொது முகாமையாளராக நியமிக்கப்பட்டார்.

இவரது பதவி ஏற்பு நிகழ்வு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வடகடல் நிறுவனத்தில் அந்த நிறுவனத்தின் தலைவர் ஆபரந்தாமன் தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் வடகடல் நிறுவனத் தலைவர் பிரான்சிஸ் கேதீஸ்வரனுக்கு நியமனக் கடிதத்தை வழங்கினார்.

தற்காலிகமாக வடகடல் நிறுவனத்தில் பணியாற்றிய வந்த நான்கு ஊழியர் களுக்கும் வடகடல் நிறுவனத் தலைவரால் நிரந்தர நியமனக் கடிதங்களும் இதில் வழங்கப்பட்டன.

கடந்த 10 வருடங்களாக வடகடல் நிறுவன உதவிப் பொது முகாமையாளராகவும், கணக்காளராகவும் பிரான்சிஸ் கேதீஸ்வரன் கடமையாற்றியுள்ளார். இவர் நேற்று முதல் வடகடல் நிறுவன பொது முகாமையாளராக கடமையாற்றவுள்ளார்.

இதேவேளை, வள்ளம்புவ, அம்பாந்தோட்டை ஆகிய பகுதிகளில் உள்ள வலைத் தொழிற்சாலைகளும் வடகடல் நிறுவனத்தின்கீழ் கொண்டுவரப்பட்டு அதில் பணியாற்றும் 250 ஊழியர்களும் தற்போது வடகடல் நிறுவனத்தில் பணியாற்றும் 69 ஊழியர்களுக்குமான நிர்வாக நடவடிக்கைகளை புதிய முகாமையாளர் கவனிப்பார் என்று வடகடல் நிறுவனம் அறிவித்துள்ளது. (ம-319)

# மர்ம மனிதன் அச்சத்தால் உறைந்துபோன நவாலி மக்கள்

யாழ்ப்பாணம், செப்.2

நவாலி புலவர் வீதியிலும் - நவாலி களையோடை கண்ணகை அம்மன் வீதியிலும் கிறீஸ் மனிதன் நடமாட்டம் இருந்தது என்ற அச்சத்தால் நேற்று முன்தினம் இரவு அந்தப் பகுதிகளில் பெரும் பதட்டமான சூழல் ஏற்பட்டிருந்தது.

மாலை 6 மணி முதல் மக்கள் நடமாட்டமின்றி உள்ளதுடன் சிறுவர்கள், குழந்தைகள் அச்ச உணர்வு, பயப்பீதியால் உறைந்து போயிருந்தனர்.

நவாலி வடக்கு, புலவர் வீதியின் உள் வீதிகளில் உள்ள வீடுகளுக்கு மர்ம மனிதன் சென்றுள்ளதாகவும் மக்கள் விழிப்புடன் இருந்ததால் மர்ம மனிதன் விலகி விட்டதாகக் கூறப்பட்டது.

இதேவேளை, மர்ம மனிதனின் நடமாட்டத்தை கண்காணிக்க இளைஞர்கள் குழுக்களாக விழித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-302)

# காரைநகரின் அபிவிருத்திக்கு சபை உறுப்பினர்கள் முன்வரவேண்டும்

## உறுப்பினர் பாலச்சந்திரன் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.2

காரைநகர்ப் பிரதேசத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய அபிவிருத்திப் பணிகளுக்கு பிரதேச சபை உறுப்பினர்கள் முன்வந்து செயற்படவேண்டும்.

ஏனெனில் இந்தப் பிரதேசத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய அபிவிருத்திகள் அதிகமாக உள்ளன.

இவ்வாறு தெரிவித்தார் காரைநகர் பிரதேச சபை உறுப்பினர் க.பாலச்சந்திரன்.

காரைநகர் பிரதேச சபையின் முதலாவது அமர்வுக் கூட்டம் அண்மையில் பிரதேச சபை மண்டபத்தில் நடை பெற்றது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது தெரிவித்ததாவது:

காரைநகர் பிரதேசத்தின் அபிவிருத்திப் பணிகளுக்காக தம்மை அர்ப்பணித்தவர்களை இந்த நாளில் நினைவு கூர்வது அவசியமான ஒன்று. அதன் வழியில் காரைநகர் பிரதேசத்தின் அபிவிருத்திப் பணிகளுக்கு துரித முறைகளில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவேண்டும்.

அத்துடன் காரைநகரின் வேம்பிராயில் இருந்து துறைமுகம் வரையான வீதி மிகவும் சேதமடைந்து மக்கள் பாவனைக்கு சீரற்றதாகக் காணப்படுகின்றது.

இதனைப் போல் பல்வேறு வீதிகள் இந்தப் பிரதேசத்தில் திருத்தப்படவேண்டிய தேவையுள்ளது.

இதற்கு சபை உறுப்பினர்கள் ஒன்றிணைந்து செயற்பட்டால், காரைநகர் பிரதேசத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள முடியும்.- என்றார். (ம- 250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார அபிவிருத்தி அமைச்சு வடக்கில் திட்டங்களை தொடர்கிறது

## எதுவும் நிறுத்தப்படவில்லை என்கிறார் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்

யாழ்ப்பாணம், செப்.2

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வடக்கின் வசந்தம் திட்டத்தின்கீழ் வடமாகாண உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகளை வலுப்படுத்தும் திட்டங்கள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

இதில் எந்த விதத் திட்டமும் இடைநிறுத்தப்படவில்லை என்று யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எம். ஜெகூ தெரிவித்துள்ளார். இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தலைமையில் பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறு தொழில் அமைச்சர், வடமாகாண ஆளுநர் ஆகியோர் ஆரம்பித்து வைத்த உள்ளூராட்சிக்கு சொந்த மான வீதிகள் புனரமைப்பு பணி கள் இடைவிடாது தொடர்ந்தும் நடைபெற்றுவருகின்றன.

உள்ளூராட்சிக்கு சொந்தமான 15 பிரதேச சபைகளான, யாழ். மாநகரசபை, தச்சந்தோப்பு, சிப்பித்தறை, நல்லூர், வலிகாமம் கிழக்கு, வடமராட்சி தெற்கு மேற்கு, வலிகாமம் வடக்கு, வலிகாமம் தெற்கு, வலிகாமம் மேற்கு, வலிகாமம் தெற்கு மேற்கு, சாவகச்சேரி நகரசபை, சாவகச்சேரி பிரதேச சபை, நெடுந்தீவு, காரைநகர் , ஊர்காவற்றுறை, வேலணை பருத்தித்துறை ஆகிய பிரதேச சபைகளில் உள்ள உள்ளூராட்சிக்கு சொந்தமான வீதிகளில் 34 வீதிகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

புனரமைப்புப்பணிகளில் 10 வீதமான பங்கு மக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதனால் பொது மக்களும் தீவிரமாக இப் புனரமைப்புப் பணிகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

இந்த வேலைத் திட்டங்களைக் கண்காணிப்பதற்காக குழு ஒன்று நியமிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2011 ஆம் ஆண்டுக்கான வேலைத்திட்டத்தின் கீழ் வீதிகள், கட்டடங்கள் அமைக்கும் பணிகள் முன்னேற்றகரமாக நடைபெறுகின்றன.

இந்த வருட இறுதிக்குள் இந்தப் பணிகள் யாவும் நிறைவேற்றப்பட்டு மக்களின் பாவனைக்காக விடப்படும் என்று தெரிவித்தார். (ம-311)

# வாக்காளர் இடாப்பு படிவங்கள் 80 வீதம் மீளப்பெறப்பட்டன

## உதவித் தேர்தல் ஆணையாளர்

யாழ்ப்பாணம், செப்.02

2011 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பு பதிவுக்காக மக்களிடம் விநியோகிக்கப்பட்ட 'பிசி' படிவங்களை கிராமசேவையாளர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகளில் 80 சதவீதம்வரை பூர்த்தியடைந்துள்ளது.

இவ்வாறு யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ஆ.க.கருணாநிதி தெரிவித்தார்.

2011 ஆம் ஆண்டு வாக்காளர் பதிவு நடவடிக்கைகள் தொடர்பாகக் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தவிடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்.மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலிருந்தும் தற்போது 'பிசி' படிவங்கள் மாவட்டச் செயலக தேர்தல் திணைக்களத்தால் பெறப்படுகின்றன. இந்தப் பணிகள் இந்த மாத நடுப்பகுதியுடன் பெரும்பாலும் முடிவடையும்.

இது வரையில் வாக்காளர்களாகப் பதிவு செய்யாதவர்கள் தேர்தல் திணைக்களத்தால் அறிவிக்கப்படும் முறைப்பாட்டுக் காலத்தில் தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும். அதே போன்று 2010 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பில் பெயர் இல்லாதவர்களும் இந்த முறைப்பாட்டுக் காலத்தில் 'உரிமைக் கோரிக்கை' விண்ணப்படிவத்தை நிரப்பி சமர்ப்பிப்பதன் மூலம் தமது பெயர்களை பதிவு செய்து கொள்ள முடியும்.- என்றார். (ம-15)

# காரைநகரில் கடற்படை முகாம் விஸ்தரிப்பு காணி நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், செப்.02

காரைநகரில் கடற்படை முகாம் விஸ்தரிப்புக்காக சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கான நஷ்டஈட்டுக் கொடுப்பனவுகள் எதிர்வரும் 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வழங்கப்படவுள்ளன அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

காரைநகர் தியாகராஜா மகா வித்தியாலயத்தில் செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இதில் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, காணி மற்றும் அபிவிருத்தி பிரதிய மைச்சர் சிறிபாலகமலத், வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திர சிறி, காணி மற்றும் அபி விருத்தி அமைச்சின் செயலர் அசோகாபீரிஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-15)

திறன் வெளிப்பாடு...



சேவைக்காக: மாற்றுவலுவுள்ளோர் தின நிகழ்வுகள் அண்மையில் திருநெல்வேலியில் அமைந்துள்ள சத்தியசாயி சேவா நிலையத்தில் இடம்பெற்றன. இதில் கலந்துகொண்டவர்களிடையே சைக்கிள் ஓட்ட நிகழ்வு இடம்பெறுகின்றது . (ம)

# சமாதானம் வேண்டி விசேட வழிபாடு

நாட்டில் சாந்தி, சமாதானம், அமைதி வேண்டி இன்று நவாலி களையோடை கண்ணகை அம்மன் ஆலயத்தில்விசேடபூசைவழிபாடும் பொங்கல் நிகழ்வும் இடம்பெறும்.

ஆலய பிரதம குரு கந்தையா நாகேந்திரம் தலைமையில் விசேட பூசை வழிபாடு இடம் பெறும். இதேவேளை நவாலிகளையோடை இயற்கை பிட்டிஅம் மனுக்கும் விசேட பூசை வழிபாடும் இடம் பெறும். (ம-302)

# சிவில் பாதுகாப்புக் கூட்டங்களில் கூட்டமைப்பு உறுப்பினர்கள் இல்லை

## அரச தரப்பு உறுப்பினர்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், செப்.2

யாழ்.மாவட்டத்தில் சிவில் பாதுகாப்புக் குழுக்களை அமைப்பது தொடர்பான கூட்டங்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதேச சபை உறுப்பினர்கள் அழைக்கப்படவில்லை எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

சிவில் பாதுகாப்புக் குழுக்களை அமைக்கும் செயற்பாடுகளில் யாழ். மாவட்டப் பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

சிவில் பாதுகாப்புக் குழுக்களை அமைப்பதற்கான கூட்டங்கள் கடந்த சில தினங்களுக்கு முன்னர் பரவலாக நடைபெற்றன. இந்தக் கூட்டங்களில் கலந்து கொள்ளுமாறு அரச தரப்பைச் சேர்ந்த உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்களுக்குக் கடிதங்கள் அனுப்பப்பட்டன. எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களுக்கு இந்தக் கடிதங்கள் அனுப்பப்படவில்லை. கூட்டமைப்பின் பிரதேச சபைத் தலைவர்கள் கூட இதற்கு அழைக்கப்படவில்லை.

சிவில் பாதுகாப்புக் குழுக்களை அமைப்பது தொடர்பாகப் பாதுகாப்பு அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள சுற்று நிருபத்தில் பிரதேச சபைத் தலைவர்கள், உறுப்பினர்கள் ஆகியோருக்கு முக்கிய இடம் அளிக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் பொலிஸார் இவ்வாறு பக்கச்சார்பாக நடந்து கொள்கின்றமை குறித்துப் பொலிஸ்மா அதிபரின் கவனத்துக்குக் கொண்டுவரவுள்ளதாக கூட்டமைப்பின் பிரதேச சபை உறுப்பினர்கள் தெரிவித்தனர். (த-86)

# டெங்கு நுளம்பு பரவும் சூழ்நிலைகளுடன் யாழ். நகரில் கழிவு வாய்க்கால்கள்

யாழ்ப்பாணம்,செப்.2

யாழ். குடாநாட்டில் டெங்கு நோயின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், டெங்கு நுளம்பு பரவக்கூடிய சூழ்நிலைகளுடன் யாழ். நகரில் உள்ள கழிவு நீர் வாய்க்கால்கள் காணப்படுவதாக பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த மாதத்தில் மட்டும் 19 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இவர்களில் 11 பேர் யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்டவர்கள்.

யாழ். நகரில் காணப்படும் கழிவு நீர் வாய்க்கால்களில் சில நீர் தேங்கிய நிலையில் இருக்கின்றன. அத்துடன் யாழ். போதனா வைத்தியசாலை வளாகத்திலுள்ளகழிவு வாய்க்கால்களும்இவ்வாறான நிலையிலேயே உள்ளன. கூரைப் பீலிகளிலும் குப்பைகள் காணப்படுவதால் நீர் வழிந்தோடக்கூடிய சூழ்நிலை இல்லை.

பயன்படுத்தாத நிலையில் கட்டடங்கள் காணப்படுகின்றமையும் மற்றும் உடைந்த இரும்புக் கட்டில்கள் இரும்புக் குழாய்கள் என்பன வைத்தியசாலை வளாகத்தில் உள்ளமையும் நுளம்புகளின் பெருக்கத்துக்கு ஏதுவாக அமைகின்றன. யாழ். நகருக்குப் பெருமளவான் மக்கள் குடாநாட்டின் பல பிரதேசங் களிலிருந்தும் வந்து செல்கின்றனர்.

இதனால் ஏராளமானோருக்கு டெங்கு நோய் பரவுவதற்கு வாய்ப்பிருப்பதாகவும் சுட்டிக் காட்டப்படுகிறது.

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வெளிப்புறமாக உள்ள சுற்றுச் சூழல் மற்றும் நகரின் பிரதான கழிவு நீர் வாய்க்கால்கள் என்பனவும் உரிய முறையில் துப்புரவு செய்யப்படாமல் உள்ளதால் கழிவு நீர் தேங்கிக் காணப்படுகின்றது.

டெங்கு நோயின் தாக்கம் தற்போது அதிகரித்து வரும் நிலையில் இவ்வாறு டெங்கு பரவுவதற்கு ஏதுவாக காணப்படும் இடங்களை துப்புரவு செய்யுமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ம-15)

# வலி.வடக்கில் அனுமதிக்கப்பட்ட இடங்களில் குடியமர 4,750 குடும்பங்கள் விண்ணப்பம்

யாழ்ப்பாணம், செப்.02

வலி.வடக்கில் மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களில் மீளக் குடியமர்வதற்காக 4 ஆயிரத்து 750 குடும்பங்கள் விண்ணப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வருடம் நவம்பர் மாதம் வலி.வடக்கில் 3 கிராம சேவகர்கள் பிரிவில் மக்கள் மீளக்குடியமர்வதற்காக முதலில் அனுமதிக்கப்பட்டனர். அதன் பின்னர் இந்த வருடம் மே மாதம் மேலும் 6 கிராம சேவையாளர்கள் பிரிவில் முழுமையாகவும் 5 கிராம சேவையாளர்கள் பிரிவில் பகுதியாகவும் மக்கள் மீளக் குடியமர அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

அனுமதிக்கப்பட்ட கிராம சேவகர் பிரிவுகளில் மீளக்குடியமர்வதற்காக 4 ஆயிரத்து 750 குடும்பங்கள் வரையில் விண்ணப்பித்துள்ளன. மேலும் இது வரை ஆயிரத்து 278 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 439 பேர் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்துள்ளனர்.

இதே வேளை, அதிகளவானோர் மீளக்குடியமர விண்ணப்பித்துள்ள போதும் தமது வீடுகள் இல்லாமையாலேயே மீளக் குடியமர்வதற்கு பின்னடித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.


அத்துடன் அந்தப் பிரதேசங்களில் மீளக் குடியமர்ந்த மக்களுக்கு உரியமுறையில் அடிப்படை வசதிகளும் கிடைக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலயங்களின் திருக்காட்சிகள்....



யாழ். கோட்டை முனீஸ்வரன் கோயிலின் தேர்த்திருவிழாவில் சுவாமி வீதி வலம் வருகிறார்.



வரலாற்றுச் சிறப்புமிக்க நவாலி ஸ்ரீ கதிர்காம முருகன் ஆலயத்தில் மஹாகும்பாபிஷேகத்தின் பின்பு விசேட பூசை ஆலய பிரதம குரு சிவஸ்ரீ மா.பத்மநாதன் தலைமையில் இடம்பெறுகின்றது. மக்கள் வழிபாட்டில் ஈடுபட்டுள்ளனர். (302)

### மரண தண்டனையை ரத்து செய்யுங்கள்!

# இந்திய ஜனாதிபதிக்கு கனேடிய தமிழர் பேரவை வேண்டுகோள்

ராஜீவ் காந்தி கொலை வழக்கின் குற்றவாளிகளான பேரறிவாளன், முருகுந்தன், சாந்தன் ஆகியோருடைய மரண தண்டனையை முற்றுமுழுதாக ரத்துச் செய்யவேண்டும் என்று இந்திய ஜனாதிபதி பிரதீபா பட்டீலுக்கு கனேடிய தமிழர் பேரவை கடிதமூலம் வேண்டு கோள் விடுத்துள்ளது.

இதுதொடர்பாக அந்த வேண்டுகோளில் மேலும் தெரிவித்ததாவது:

மேற்படி மூவருக்கும் விதிக்கப்பட்ட மரண தண்டனையை எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு நிறைவேற்றுமாறு நிர்ணயிக்கப்பட்டதும் பின்னர் கடந்த செவ்வாய்க் கிழமை சென்னை உயர் நீதிமன்றம் இந்தத் தண்டனைக்கு 2 மாத கால தடை உத்தரவு வழங்கியதும் தெரிந்த விடயமே.

இந்த இடைக்கால தடை உத்தரவின் பிரகாரம், குற்றவாளிகளின் கருணை மனுவை ஏன் இந்திய ஜனாதிபதிபதினொரு ஆண்டுகாலமாக தீர்மானம் எதுவும் எடுக்காமல் தடுத்து வைத்திருந்தார் என்று அடுத்த எட்டு வாரங்களுக்குள் சென்னை உயர் நீதிமன்றத்துக்கு அறிவிக்க வேண்டும்.

இதனையடுத்து, மேற்படி மரண தண்டனையை முற்றுமுழுதாக ரத்து செய்யவேண்டும்.

மரணதண்டனைக்கெதிரான கனடா நாட்டின் கொள்கையையும், ஐக்கிய நாடுகள் சபை அங்கத்தினர் மற்றும் சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆழமான எதிர்ப்பையும் மேற்கோள் காட்டியுள்ள இந்தக்கடிதம், இந்தியாவின் பாரம்பரியம்கூட மரண தண்டனைக்கு எதிரானதென்று ஆதாரங்களுடன் விளக்கியுள்ளது.

இந்திய நாட்டில் இறுதியாக விதிக்கப்பட்ட மரண தண்டனை ஏழு வருடங்களுக்கு முன்னரேயே மேற்கொள்ளப்பட்டது என்பது இங்கு குறிப்பிடத் தக்கதாகும். (வ)

# கடன் அட்டை மோசடியில் ஈடுபட்டதாக கைதானவர்கள் புலி உறுப்பினர்களா?

உலக அளவில் கடன் அட்டை மோசடியில் ஈடுபட்ட இரண்டு விடுதலைப் புலிச்சந்தேக நபர்களை கைது செய்துள்ளதாக பெங்களூர் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

மலேசியாவிலிருந்து இணையத் தின் ஊடாக கடன் அட்டை மோசடித் தரவுகள் பெறப்பட்டுள்ளன என்று கூறப்படுகிறது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் விடுதலைப் புலிகளுடன்தொடர்புடையவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்களிடம் இருந்து இரண்டு கோடி இந்திய ரூபா பெறுமதியான சொத்துக்கள் மீட்கப்பட்டுள்ளன.

கடன் அட்டை மோசடியுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் மலேசியாவில் இருப்பதாகவும், இந்தியாவில் ஆறு முக்கியஸ்தர்கள் தலைமறைவாகி இருப்பதாகவும் குறிப்பிடப்படுகிறது.

39 வயதான ஷியாம் மற்றும் 25 வயதான வாசீம் பாஸா ஆகியோர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளுக்கு தாம் பணம் வழங்கியதாக சந்தேக நபர் ஒருவர் ஒப்புக்கொண்டுள்ளார். (வ)


உ
சிவமயம்

## கொக்குவில் மேற்கு ஆரவாரப்புலம் கள்ளப்பிரான் வயல் காணிகளில் குடியிருப்பவர்களுக்கான அறிவித்தல்

யாழ்ப்பாணம், சைவபரிபாலன சபை நிர்வாகத்திலுள்ள சிதம்பரம் அம்பலவாண சுவாமி புண்ணிய நாச்சிமட தர்மத்திற்குச் சொந்தமான கொக்குவில் மேற்கு ஆரவாரப் புலம் கள்ளப்பிரான் வயல் காணிகளில் குடியிருப்பவர்களுக்கு அவற்றை விற்பனை செய்ய யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றின் அனுமதி பெறப்பட்டுள்ளது. காணித் துண்டுகளைக் கொள்வனவு செய்ய விரும்புவோர் சபையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சைவபரிபாலன சபை,
66, கஸ்தூரி வீதி, நீராவியடி,
யாழ்ப்பாணம்.
T. P. : 021 3202191, 021 2227678



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர்
நாகலிங்கம் சண்முகம்
(நெடுந்தீவு 12 ஆம் வட்டாரம்)



மலர்வு: 14.04.1922
உதிர்வு 03.08.2011

கண்ணீரிட்டழுதிட்டோம் கடலாய்
விண்ணெட்ட ஓலமிட்டோம் விசையாய்
என்னென்று சொல்லியாற எமக்குள்
நீங்கள்
எடுத்திட்ட பிறவிதனை இயம்பும்
முன்னர்
கூவியழுதிட்ட போதும் கூற்றுவன் கை
பிடியெடுத்த பொக்கிசத்தை போட்டதில்லை
விடிகாலைப் பொழுது முதல் ஐயா உங்கள்
வடிவழகும் வண்ணமொழிப் பேச்சும் - வந்து மோத
அழுதழுது அஞ்சலித்தோம் மாதமொன்றாய் - நீங்கள்
பதுங்கி நின்று பகிடி விடும் பாசாங்காமோ....?

இன்று 02.09.2011 வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணியளவில் எமது இல்லத்தில் இடம்பெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வீரபத்திரர் வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

தகவல்
குடும்பத்தினர்.

(7483)



## மரண அறிவித்தல்



### திருமதி சந்திரபோஸ் புஸ்பமாலா

அரியாலை, மாம்பழம் சந்தியை பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சந்திரபோஸ் புஸ்பமாலா 30.08.2011 செவ்வாய்க்கிழமை ஜேர்மனியில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - யோகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நடராசா-தனலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும் சந்திரபோஸ் (ஜேர்மனி) அவர்களின் அன்பு மனைவியும், சௌமியாவின் (ஜேர்மனி) அன்புத் தாயும் ஜீவா, ஜிக்கிநிமால், தயாநிதி, கீதா ஆகியோரின் அன்பு அண்ணியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.09.2011) வெள்ளிக்கிழமை ஜேர்மனி நேரப்படி காலை 9மணியளவில் ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சுகுமார் கீதா (மைத்துனி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியளம் கேட்டீர்களா?

## ஓடிப்போனவனுக்கு 9ஆம் இடத்தில் இராசா; பிடிபட்டவனுக்கு அட்டமத்தில் சனி!

ஓடிப் போனவனுக்கு ஒன்பதாம் இடத்தில் இராசா, பிடிபட்டவனுக்கு அட்டமத்துச் சனி என்றொரு பழமொழி உள்ளது. இப்போது கிறீஸ் பூதம், மர்ம மனிதன் என்று பேசப்படுவதில் இந்தப் பழமொழி நன்கு பொருந்தி வருகிறது. ஒவ்வொரு நாளும் அட்டமத்துச் சனி வருவதுபோல மர்ம ஆசாமிகள் பிடிபடும் சம்பவங்கள் கை கூடிவருகின்றன. ஆனால் சட்டத்தை வில்லாய் வளைக்கும் சூட்சுமம் தெரிந்த நமது பொலிஸார் அவர்களை விடுவிக்கும் அல்லது தப்பியோட வைக்கும் அல்லது மனநோயாளியென இனங்காணும் என்ற உண்மையும் மக்களுக்கு விளங்கியுள்ளது.

ஏவுகிறவனுக்கு வாய்ச்சொல். செய்பிறவனுக்கு தலைச்சுமை என்ற கதையாக மர்மமனிதர்களாக உலா வருவோர் படும்பாடு பெரும்பாடு. ஊரெல்லாம் சனம் கலைக்க தலைதெறிக்க ஓடி வழியில் தெய்வங்கள் வந்து பிணையெடுத்து விடாவிட்டால் பிடிபட வேண்டியதுதான். பிடிபட்டாலும் நான் யார்? எதற்காக வந்தேன்? யார் என்னை வழிநடத்தியது? என்பதை அவர்களால் சொல்ல முடியாது. சொல்லிவிட்டால் அதன்பின் அவர்கள் எப்படியாகுவரோ? தெரியாது.

மனிதர்களின் மனத்தில் அச்சம் எப்போதும் குடிகொண்டுள்ளது என்ற உளவியல் உண்மை அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு நன்கு தெரியும். இறையச்சம் என்பதே தொன்று தொட்டு மனிதர்களிடம் இருந்து வந்துள்ளது. அதனால்தான் நாகரிகங்கள் தோன்றிய காலத்தில் இறைவனே ஆட்சியாளர்களிடம் வாளையும் செங்கோலையும் அளித்து நாட்டை ஆளச் செய்ததாகக் கூறப்பட்டுள்ளது. அரசனைப் பகைப்பதோ, பழிப்பதோ தெய்வத்தை நிந்தைப் படுத்துவதாகும். எனவே, அரசனைப் பகைப்பவர் தெய்வ ஆணையால் தண்டிக்கப்பட்டனர்.

பிற்காலத்தில் அதிகாரங்களைக் குவித்து வைத்து அரசர்கள் கடுமையான தண்டனைகளை வழங்கினர். மத அமைப்புக்கள் அரசனின் அதிகார நிலைநிறுத்தலுக்கான போதனா கூடங்களாகச் செயற்பட்டன. அரசர்களைத் தெய்வத்தின் மறுவடிவங்களாகக் கூறி மக்கள் கருத்தேற்றம் செய்யப்பட்டனர். அதிகாரம் தன்னை நிலைநிறுத்த எதையும் செய்யும் என்பதை மிலேல் புக்கோ என்ற தத்துவவியலாளர் பல ஆதாரங்களுடன் வெளிப்படுத்தி உள்ளார். அதிகார நிலை நிறுத்தலுக்கான கருவிகளாக இலக்கியங்களும், நீதிநூல்களும் இயற்றப்பட்டன என்பது அவரது வாதமாகும்.

இயல்பாகவே பயந்த உள அமைப்புடைய மனிதன் பாதுகாப்புத் தேவையை அதிகமதிகம் உணர்ந்ததனால்தான் கூட்டங் கூட்டமாக வாழத் தலைப்பட்டான். எனவே, அவனது பாதுகாப்பு உணர்வுக்குச் சவால் விடப்பட்டால் அவன் குழம்பி விடுவான். மிரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பது போல் நடக்காத ஒன்றை நடந்ததாகக் காட்டித் தானும் குழம்பி மற்றவர்களையும் குழப்பி விடுவான். இது வதந்தி எனும் தீயாக பரவ, இரண்டு கண்வைத்து, இரண்டு காது வைத்து, ஒரு வாயையும், மூக்கையும், உடலையும் வைத்து புதியதொரு குழந்தையைப் பிரசவித்து விடுவார்கள்.

இங்கும் பல இடங்களில் அதுதான் நடந்துள்ளது. கிறீஸ் மனிதனோ, மர்ம மனிதனோ வந்ததைவிட வந்தானாம் என்ற பார்க்காத கதையே பலரிடம் இருந்துள்ளது. உளவியல் ரீதியாக அச்சமடைந்த சமூகம் பலவீனமான சமூகமாகி விடும் என்பது ஆட்சியாளர் அறியாததல்ல. 2009 மேக்கு முன்னர் எங்கு குண்டு வெடிக்குமோ? எங்கு தாக்குதல் நடக்குமோ என்ற அச்சம் தென்னிலங்கையில் இருந்ததற்கு ஒப்பானதே இப்போதுள்ள அச்சமும்.

அச்சத்தின் பிடியில் சிக்கி அழிவதற்கு சமூகங்கள் முனைகையில் அவற்றை ஆற்றுப்படுத்தி, தன்னம்பிக்கை ஊட்ட வேண்டிய பெரும் பொறுப்பு சமூகத் தலைவர்கள் எனக் கூறிக் கொள்வோருக்கு உண்டு. ஆனால் சமூகத் தலைவர்களாக நம் மத்தியில் உலா வருபவர்களுக்கு ஏகப்பட்ட சோலிகள்.தமது இலக்குகளே அவர்களுக்கு முக்கியமானவை.

எனவே, அவர்களால் மக்களுக்கு நம்பிக்கையூட்டுவது சாத்தியமில்லை. அதற்கான நேரமும் இதுவல்ல என்பது அவர்களது வாதமாக இருக்கக் கூடும். மக்களுக்காகப் பிரார்த்தனை செய்வதானால் கொழும்பிலிருந்து தேசிய சமாதானப் பேரவைதான் இங்கு வந்து மக்களுக்கு நம்பிக்கையளிக்க வேண்டியிருக்கிறது.

பத்திரிகையாளர் பாதிக்கப்பட்டால் இங்குள்ள பத்திரிகையாளர் அமைப்புக்கள் வாய் கட்டிப் பார்த்திருக்க, கொழும்பிலிருந்து வந்த ஊடக அமைப்புக்களே ஆர்ப்பாட்டம் செய்து குரல் கொடுக்க வேண்டியுள்ள நிலை.

ஆனால் யாரையும் எதிர்பார்க்காது மக்கள் 'இது மனிதர்களது வேலை' என்பதை உணர்ந்தாலே பாதிப் பிரச்சினை தீர்ந்து விடும்.

விழிச்சான் குஞ்சு.

# ஆணையாளரின் பதவிக்காலம் 3 மாதங்களுக்கு வரையறை

## சிறைச்சாலை அமைச்சு தகவல்

கொழும்பு, செப். 2

எதிர்வரும் காலங்களில் சிறைச்சாலை ஆணையாளர் நாயகமாக பதவியைப் பொறுப்பேற்றுக் கொள்வோரின் பதவிக் காலம் மூன்று மாதங்களுக்கு வரையறுக்கப்படும் என்று அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.


செயற்றிறனற்ற மற்றும் மோசடிகளில் ஈடுபடும் சிறைச்சாலை ஆணையாளர்களுக்கு கூடுதலான காலம் பதவியில் நீடிக்க அனுமதி அளிக்கப்படக் கூடாது என சிறைச்சாலை மற்றும் புனர்வாழ்வு அமைச்சு தெரிவித்துள்ளது. பதவிக்காலம் தொடர்பான யோசனைத் திட்டமொன்றை சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சு அமைச்சரவையில் முன்வைக்கவுள்ளது.

கடந்த காலங்களில் சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்தின் பதவிக்காலம் ஒரு ஆண்டாக அமைந்திருந்தது.

உரிய முறையில் கடமையாற்றினால் பதவிக் காலத்தை மூன்று மாதங்களின் பின்னர் நீடிக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் புதிதாக நியமிக்கப்பட்ட சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் பீ.டபிள்யூ. கொடிப்பிலியின் பதவிக்காலம் மூன்று மாதங்களுக்கு வரையறுக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, சிறைச்சாலைகளில் பல்வேறு ஊழல் மோசடிகள் இடம்பெற்று வருவதாக அண்மைக்காலமாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)



தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் வீட்டுத் திட்டத்தின் கீழ் பனிச்சங்குளத்தில் 50 வீடுகள் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சர் விமல் வீரவன்ச, மீள்குடியேற்ற அமைச்சர் குணரத்தின வீரக்கோன் உட்பட பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

## கொக்கட்டிச்சோலையில் ஆயுதங்கள் மீட்பு

மட்டக்களப்பு,செப்.2

மட்டக்களப்பு, கொக்கட்டிச் சோலை பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போது, விடுதலைப்புலிகளின் பழைய முகாம் அமைந்திருந்த பகுதியில் இருந்து ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

ரி56 ரக துப்பாக்கிகள், 30 தோட்டாக்கள், தொடர்பாடல் கருவிகளுக்காகப் பயன்படுத்தப்படும் அன்ரனா போன்றவற்றை மீட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. விசேட அதிரடிப்படையின் களுவாஞ்சிகுடி கட்டளை அதிகாரி மாரப்பனவுக்குக் கிடைத்த தகவல் ஒன்றை அடுத்தே மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போது இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன. (ச)

## வாகனம் மோதியதில் ஒருவர் மரணம்

கொழும்பு,செப்.2

அமைச்சர் ஒருவரின் பாதுகாவலர்கள் பயணித்த வாகனம் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் ஓய்வுபெற்ற பொறியிலாளர் ஒருவரையும் அவரது மனைவியையும் கொழும்பு பொரல்லை சர்பன்டையின் வீதியில் மோதியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விபத்தில், ஓய்வுபெற்ற பொறியிலாளர் உயிரிழந்துள்ளதுடன் அவரது மனைவி படுகாயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த வாகனத்தின் சாரதி தப்பிச் செல்ல முயன்றபோது பொரல்லை பொலிஸார் கைது செய்துள்ளனர். இந்த வாக னம் அமைச்சர் எஸ்.பி. திஸ்ஸ நாயக்காவுக்கு சொந்தமானது என்று தெரிவிக்கப்படுகின்றது.

## நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

### சரத்பொன்சேகா கூறுகிறார்

கொழும்பு,செப்.2

நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

தோளில் ஏற்பட்டுள்ள உபாதைக்கு சிகிச்சை பெற்றுக்கொள்வதற்காக தனியார் வைத்தியசாலைக்கு சென்றிருந்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஊழல் மோசடிகளில் ஈடுபடும் அரசியல்வாதிகள் மக்களை ஒடுக்குமுறைக்கு உட்படுவதனை தடுக்க வேண்டும். அரசியல்வாதிகள் அதிகாரத்தை கையில் எடுக்கும் நடவடிக்கையை மக்கள் நிராகரிக்கவேண்டும்என்று தெரிவித்துள்ளார்.



இந்தநிலையில் அரச அதிகாரிகளின் நடவடிக்கைகளில் அரசியல்வாதிகள் தலையீடு செய்யக்கூடாது. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளைப் போன்று இலங்கையிலும் ஜனநாயக நெறிமுறைகளை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மேலும் தெரிவித்துள்ளார். (ச)

## பாடசாலையில் பொருள்கள் திருட்டு

பேருவளை, செப்.2

பண்டாரகம அளுபோமுல்ல எஸ்.மஹிந்த வித்தியாலயத்தின் கணினிப் பிரிவு உடைக்கப்பட்டு கணினி மற்றும் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான உபகரணத் தொகுதிகள் திருடப்பட்டுள்ளன.

கணினிப் பிரிவில் ஜன்னல் உடைக்கப்பட்டு உபகரணங்கள் திருடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மர்ம மனிதர்கள் விவகாரம்; நாடாளுமன்றத்தில் விவாதம்

கொழும்பு,.செப். 02

மர்ம மனிதர்களின் விவகாரம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் எதிர்வரும் 8 ஆம் திகதி வியாழக்கிழமை ஒரு மணிநேர விவாதம் இடம்பெறவுள்ளது.

இதற்கான ஒத்திவைப்புப் பிரேரணையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி முன்வைத்துள்ளார். இதற்கான அனுமதியை சபாநாயகரும் வழங்கியுள்ளார்.

கடந்த சில வாரங்களாக யாழ்ப்பாணம், நாவாந்துறை உட்பட வடக்கு, கிழக்குப் பகுதிகளில் மர்ம மனிதர்களின் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

இதுகுறித்து உரிய விவாதம் நடத்தப்படவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் விநாயமூர்த்தி பிரேரணையை சபாநாயகரிடம் கையளித்தார்.(ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
02 செப்ரெம்பர் 2011 வெள்ளிக்கிழமை

# வன்னித் தொண்டர் ஆசிரியர்கள் தமக்கு நியமனம் வழங்கக்கோரி ஜனாதிபதிக்கு மகஜர்

கிளிநொச்சி,செப்.2

வன்னித் தொண்டர் ஆசிரியர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரி வன்னித் தொண்டர் ஆசிரியர் ஒன்றியத்தின் மூலம் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ஊடாக ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றைக் கடந்த வாரம் அனுப்பி உள்ளார்கள்.

மேற்படி மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய் வவுனியா வடக்கு, மடு, வடமராட்சி கிழக்கு ஆகிய வலயக் கல்வி அலுவலகங்களுக்குக் கீழ் உள்ள பாடசாலைகளில் பத்து வருடங்களுக்கும் மேலாக எந்தவிதமான உதவுத் தொகைக் கொடுப்பனவுகளும் இன்றி நிரந்தர ஆசிரியர் நியமனம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடனும் நம்பிக்கையுடனும் தொண்டர் ஆசிரியர்களாகச் சேவையாற்றி வரும் எமது நிலை பற்றி எவருமே கருத்திற்கொள் ளாதிருப்பது எமக்குப் பெரும் வேதனையையும் ஏமாற்றத்தையும் தருகின்றது.

எமது பகுதிப் பாடசாலைகளில் பெருமளவு ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுவதால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுகிறது. இதனால் தான் வலயக் கல்விப் பணிப்பாளர்களது அனுமதியுடன் தொண்டர் ஆசிரியர்களாக நாம் சேர்த்துக் கொள்ளப்பட்டதுடன் தகைமை உள்ள எமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்றும் கூறப்பட்டது. இதனை நம்பித்தான் நாம் வேறு வேலை எதற்குமே முயற்சிக்காது கடந்த 10 வருடங்களுக்கும் மேலாக தொண்டர் ஆசிரியர்களாகச் சேவையாற்றி வருகின்றோம்.

கடந்த 2009 ஆம் ஆண்டு வடக்கு மாகாணத்தில் உள்ள தொண்டர் ஆசிரியர்களுக்கு உதவி ஆசிரியர் நியமனம் அரசால் வழங்கப்பட்ட போதும் கொடிய யுத்தத்தால் சொத்துக்களை, உறவுகளை இழந்து பாதிக்கப்பட்டு நிற்கும் வன்னிப் பகுதியைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்களாகிய எமக்கு மட்டுமே இதுவரை நியமனம் எதுவும் வழங்கப்படாது புறக்கணித்து ஒதுக்கிவிடப்பட்டவர்களாகத் தொடர்ந்தும் துன்பப்பட்டபடியே சேவையாற்றி வருகின்றோம்.

எமது நிலையைக் கருத்திற்கொண்டு வடக்கு மாகாணத்தின் ஏனைய பகுதித் தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கியது போல வன்னிப் பகுதித் தொண்டர் ஆசிரியர்களாகிய எமக்கும் ஆசிரியர் நியமனம் வழங்க ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம் என்றுள்ளது.

கல்வி அமைச்சர் பந்துலகுணவர்த்தன, பாரம்பரிய மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஆர். சம்பந்தன் மற்றும் உறுப்பினர்களான எஸ்.சிறீதரன், சிவசக்தி ஆனந்தன் ஆகியோருக்கும் இந்த மகஜரில் பிரதிகளை அனுப்பி வைத்துள்ளனர்.

(எ-426)

# வன்னியில் மக்கள் காணிகளை முகாமாக்கும் முயற்சி முன்னெடுப்பு

மன்னார், செப்.2

யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்து மீண்டும் வன்னிப் பிரதேசத்தில் மக்கள் மீள்குடியமர்வு செய்யப்பட்டுள்ள நிலையில் அவர்களுடைய பல காணிகளை அதியுயர் பாதுகாப்பு வலயம் எனத் தெரிவித்து இராணுவ முகாமாக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகக் காணிகளை இழந்த குடும்பங்கள் தெரிவிக்கின்றன.

மன்னார் மாவட்டம் மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட சன்னார், ஈச்சலவக்கை, பெரியமடு ஆகிய கிராமங்களிலேயே மக்களின் காணிகள் பல பாதுகாப்பு வலயமாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தவிடயம் தொடர்பாக அந்தப் பகுதி மக்கள் கருத்துத் தெரிவிக்கையில்:

முகாம்களில் இருந்த நாங்கள் மீளக்குடியர்வு என்ற பெயரில் எங்களின் சொந்தக் கிராமத்துக்கு அழைத்து வரப்பட்டோம்.

தற்போது அடர்ந்த காடுகளாகக் காணப்படும் எங்களது காணிகளில் அதியுயர் பாதுகாப்பு வலயம் காணப்படுவதாகவும் பல இடங்களில் கண்ணிவெடிகள் அகற்றப்படவில்லை எனத் தெரிவித்தும் காணிகளுக்குள் செல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

இதனால் தாம் பல அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்து வருவதாகவும் குறிப்பாக மலசல கூட வசதியில்லாமல் காடுகளையே பயன்படுத்துவதாகவும் தெரிவிக்கின்றனர்.

மேற்படி காடுகள் பாதுகாப்பு வலயமாக மாற்றிய பின் இராணுவச் சீருடையில் உள்ள சிங்கள மக்கள் காணி பிடிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இன்னும் சில மாதங்களில் அங்கு உள்ள வெற்றுக்காணிகள், காடுகள் போன்றவற்றில் இராணுவத்தின் உதவியுடன் சிங்கள மக்கள் மீள்குடியமர்வு செய்யப்படுவார்கள் என்றும் அதற்காகவே இராணுவம் மீள்குடியமர்வு உதவிகளைச் செய்து வருவதாகவும் அந்த மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

(எ-601)

## ஓமந்தை ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் மகாகும்பாபிஷேகம் ||ஆம் திகதி

ஓமந்தை அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் 11 ஆம் திகதி காலை 7 மணி முதல் 8மணி வரையான காலப்பகுதியில் சிவப் பிரம்ம ஸ்ரீ ஆறுமுக கணேசக் குருக்கள் தலைமையில் இடம்பெறவுள்ளது.

அடுத்த மாதம் 8 ஆம் திகதி கும்பாபிஷேகத்துக்கான ஆரம்பக் கிரியைகள் தொடங்கவுள்ளதுடன் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு 9, 10 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

ஆலயத்துக்கு வரும் பக்தர்கள் சுவாமிக்குத் தேவையான பூ மற்றும் பால்,பழங்கள், எண்ணெய் என்பவற்றை வழங்கி அருளினைப் பெறுமாறு ஆலய பரிபாலனசபை கேட்டுள்ளது.

(எ-422)

## வரவேற்பு...



வன்னிப் பிரதேசமான வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இந்தமுறை பல்கலைக்கழகங்களுக்குப் புதிதாக அனுமதி பெற்ற 468 மாணவர்களை வரவேற்கும் வைபவம் வவுனியாவில் நேற்று நடைபெற்றது. வவுனியா மாவட்ட செயலகமும் அனைத்துப் பல்கலைக்கழக நிர்வாகமும் இணைந்து வவுனியா மாவட்ட செயலக வாயிலிலிருந்து பிரதான வீதிவழியாக மாணவர்கள் நகரசபை கலாசார மண்டபத்துக்கு அழைத்துவரப்பட்டனர்.

## பூநகரி ஐயனார் திருக்குட முழுக்கு நாளை

பூநகரி, செப்.2

பூநகரி பல்லவராயன் கட்டு சம்புவெளி ஐயனார் திருக்கோயிலின் புனராவர்த்தன திருக்குடமுழுக்கு நன்நீராட்டு விழா நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இன்று நடைபெறும் எண்ணெய்க்காப்புக்கும் நாளை நடைபெறும் திருக்குடமுழுக்கு நன்நீராட்டு விழாக்களில் பங்குபற்றியும் பால், இளநீர், பூ, தயிர், மாலை என்பவற்றைக் கொடுத்தும் ஆலயத் தொண்டுகளைச் செய்தும் அனைவரும் ஐயனின் திருவருளைப் பெற்றுக் கொள்ளுமாறு ஆலய பரிபாலன சபையினர் கேட்டுள்ளனர்.

பரந்தன் குமரபுரம் முருகன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ ஜெகதீஸ்வரக் குருக்கள் இந்தத் திருவிழாவில் பிரதம குருவாக கலந்துகொள்வார்.

(எ)

# இரணைமடுக் குளத்தின் உட்கட்டுமான வேலைகள் 2015இல் பூர்த்தி

## நீர்ப்பாசனப் பிரதிப் பணிப்பாளர் உறுதி

யாழ்ப்பாணம், செப்.2

இரணைமடுக்குள அபிவிருத்தி மற்றும் கொள்ளளவை அதிகரித்தலுக்கான உட்கட்டுமான அபிவிருத்திக்கு 10.63 மில்லியன் அமெரிக்கன் டொலர் ஒதுக்கப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதத்துக்கு முன்னர் சகல உட்கட்டுமான வேலைகளையும் காலம் தாழ்த்தாது உறுதியாக முடித்துத் தருவோம். நம்பிக்கை கொள்ளுங்கள்.

இவ்வாறு கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் எந்திரி என்.சுதாகரன் உறுதிமொழி வழங்கினார்.

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் தலைமையில் யாழ். கிளிநொச்சி குடிதண்ணீர் திட்ட முன்னேற்றக் கூட்டம் கடந்த 29 ஆம் திகதி கிளிநொச்சியில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்ட நீர்ப்பாசன திணைக்கள பிரதிபணிப்பாளர் சுதாகரன் மேலும் கூறுகையில்:

2016 இல் கிளிநொச்சியில் இருந்து யாழ்.குடாநாட்டுக்கு குடிதண்ணீர் கொண்டு செல்லப்படவேண்டும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பணித்துள்ளார்.

அதற்கேற்ப நாம் துரிதமாகச் செயற்பட்டு 2015 ஒகஸ்ட் மாத முடிவிற்குள் நீர்ப்பாசன திணைக்களத்தின் வேலைகளை முடிவுறுத்தித் தருவோம்.

மேலும் கிளிநொச்சி மாவட்டச் சுகாதாரத் திட்டத்துக்கும் உதவ ஆசிய அபிவிருத்தி வங்கி கூடுதல் நிதியை ஒதுக்கித் தர வேண்டும் என்றார்.

கிளிநொச்சி மாட்ட அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் கூறுகையில்:

கிளிநொச்சி மாவட்டம் பரந்த பெரிய பிரதேசம். இன்று கண்டாவளை, பளை பூநகரி ஆகிய பிரதேசங்கள் குடிதண்ணீருக்காக மிக கஷ்டங்களை எதிர்நோக்குகின்றன.

இரணைமடுக்குள அபி விருத்தியின் பின்னர் கிளிநொச்சி மாவட்டத்துக்கு தண்ணீர் கிடைக்க இன்னும் 4 வருடங்கள் தேவை.

இதற்கு முன்னர் தேசிய நீர் வழங்கல்வடிகால் அமைப்புச்சபை மூலம் பௌவுஸர்கள் மூலம் குடிதண்ணீர் வழங்கி பிரச்சினையைத் தீர்க்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் யாழ்-கிளிநொச்சி குடிதண்ணீர் திட்டம் ஏற்கனவே ஒப்பந்தம் மூலம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

எனவே மக்களுக்கு தற் போது நாம் குடிதண்ணீருக்கு எவ்வாறு உடன் உதவலாம் எனச் சிந்தியுங்கள். குறிப்பாகக் கண்டாவளை, பளை, பூநகரி மக்களின் தேவை நிறைவேற்றப்பட வேண்டும் என்றார்.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட யாழ்.-கிளிநொச்சி குடிதண்ணீர் விநியோக திட்டப் பணிப்பாளர் எந்திரி தி.பாரதிதாசன் தெரிவிக்கையில்,

இரணைமடுக் குளத்தில் இருந்து தினமும் 27 ஆயிரம் கனமீற்றர் நீர்மட்டுமே எடுக்கவுள்ளோம். இதனை விட நாம் கூடுதலான நீரைப் பெற மாட்டோம்.

தற்போது வெளிநாட்டு வல்லுநர்களை நியமிப்பதற்கான நடவடிக்கை எடுத்துள்ளோம். அதற்கான அங்கீகாரத்துக்குச் சமர்ப்பித் துள்ளோம்.

எதிர்காலத்தில் சாதாரண மக்களின் கருத்துக்களோடு வெளிநாட்டு வல்லுநர்களின் ஆலோசனைகளுடன் திட்டம் முன்னகர்த்தப்படும் என்றார்.

மேற்படி கூட்டத்தில் எந்திரி ஆர்.ரவிச்சந்திரன், எந்திரி எஸ். ஸ்ரெயிலிதரன், எந்திரி ஆர்.சூவிந்தன், மேலதிக அரச அதிபர் எஸ்.சிறினிவாசன், உதவி அரச அதிபர், பிரதேச சபை செயலாளர்கள், கிளிநொச்சி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கே.உதயராஜா, விவசாய அமைப்பு தலைவர் எஸ்.மனோகரன் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

(க-302)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மன்னார் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் செயற்பாடுகள் திங்களன்று ஆரம்பமாகின்றன

## விரிவுரையாளர் தெரிவுக்கான நேர்முகப் பரீட்சை இன்று

மன்னார், செப்.2

மன்னாரில் எதிர்வரும் 5 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் கற்றல் செயற்பாடுகள் ஆரம்பிக்கவுள்ளன. மன்னாரில் அமைந்துள்ள ஆங்கில கற்கைகள் பீட கட்டடத் தொகுதியில் ஆசிரிய கலாசாலை செயற்படவுள்ளது.

தமிழ், சமூகக்கல்வி ஆகிய பாடத் துறைகளுக்கான ஆசிரியர் பயிற்சி முதற்கட்டமாக ஆரம்பிக்கப்படவுள்ளன. கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் பயிற்சி பெற்றுவந்த இரண்டு பாடத்துறைகளையும் சேர்ந்த 41 பயிற்சி ஆசிரியர்கள் மன்னார் ஆசிரியர் கலாசாலையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

மன்னார், புத்தளம் மாவட்டங்களைச்சேர்ந்த பயிற்சி ஆசிரியர்களின் வசதியைக் கருத் தில் கொண்டு ஆசிரியர்கள் கல்வி விசேட அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மன்னார் ஆசிரியக் கலாசாலையின் செயற்பாடுகள் ஆரம்பமாகின்றன.

மன்னாரில் ஆசிரியர் கலாசாலை ஒன்றை புதிதாக நிறுவுவதற்கான ஏற்பாடுகளை கல்வி அமைச்சு முன்னரே மேற்கொண்டிருந்தது.

புதிய மன்னார் ஆசிரிய கலாசாலை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் மேற்பார்வையின் கீழ் இணைந்த கலாசாலை என்ற வகையில் ஆரம்பத்தில் செயற்படவுள்ளது.

எதிர்காலத்தில் தனித்துவமான ஆசிரிய கலாசாலையாகச் செயற்படவுள்ளது. ஆசிரிய மாணவர்களின் வசதியைக் கருத் தில் கொண்டு ஆரம்பிக்கப்படவுள்ள மன்னார் ஆசிரிய கலாசாலைக்கு கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் தற்பொழுது பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கும் இரண்டு பாடத்துறைகளைச் சேர்ந்த 41 மாணவர்கள் இணைக்கப்பட்டுள்ளனர் என கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் அதிபர் க.கணபதிப்பிள்ளை தெரிவித்தார்.

அத்துடன் மன்னார் ஆசிரிய கலாசாலைக்கான விரிவுரையாளர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் இன்று வெள்ளிக்கிழமை மன்னாரில் நடைபெறவுள்ளன.

கல்வி அமைச்சின் ஆசிரியர் கல்விப் பிரிவும் வடக்கு மாகாண கல்வித்திணைக்கள உயர் அதிகாரிகளும் கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபரும் நேர்முகப் பரீட்சையை நடத்துவதற்கு மன்னாருக்கு செல்லவுள்ளனர்.

ஆசிரியர் கலாசாலைக்கான பாடத்துறை ரீதியிலான விரிவுரையாளர்களும், கலாசாலைப் பதில் அதிபரும் நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படவுள்ளனர். (க-11)

# 14 பாடசாலை மாணவர்களுக்கு வங்கிப் புத்தகம் கையளிப்பு

## உள்ளூராட்சி ஆணையாளர் ஏற்பாட்டில்

கிளிநொச்சி, செப்.2

வறிய மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்தும் நோக்குடன் முதற்கட்டமாக 14 பாடசாலை மாணவர்களுக்கு 500 ரூபா வீதம் வங்கியில் வைப்பில் இட்டு புத்தகம் வழங்கியுள்ளார் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் சிவசுப்பிரமணியம் அச்சுதன்.

கிளிநொச்சி மகாதேவா சைவச்சிறார் இல்லத்தில் வாழும் 3 மாணவர்களுக்கும், 11 மாணவிகளுக்குமாக மொத்தம் 14 மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்தவே இவ்வாறு வங்கி மூலம் நிதியுதவி அளித்துள்ளனர்.

இதேவேளை ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான 3 ஆயிரம் பயிற்சிப் புத்தகங்களையும் கையளித்துள்ளார்.

இதில் ஆண்டு 1 முதல் 13 வரையிலான ஆங்கிலம், தமிழ், கணிதம், விஞ்ஞானம், வரலாறு மற்றும் பயிற்சிப் புத்தகங்களும் ஆங்கிலத்தில் உள்ள பல்வேறு விதமான புத்தகங்கள் உள்ளடங்கலாக வழங்கியுள்ளார். (எ-302)

# பரந்தன் வீதியில் பெரும் குழிகள்; பயணிகள் சிரமம்

கிளிநொச்சி, செப்.2

பரந்தன் சந்தியில் நடுவீதியில் உள்ள குழிகளால் பயணிகள் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பரந்தன் சந்தியில் ஏ-9 வீதியில் வந்து முல்லைத்தீவு ஏ-35 வீதிக்குத் திரும்பும் பகுதியில் பரந்தன் எரிபொருள் நிலையத்துக்கு முன்னால் உள்ள வீதியே குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.

இதனால் வாகனங்களில் வந்து ஏ-35 வீதிக்குத் திரும்பும் பயணிகள் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர். வீதியில் காணப்படும் குழிகள் காரணமாகச் சிலர் வாகனங்களைத் தாறுமாறாகச் செலுத்திச் செல்வதையும் காணமுடிகின்றது (க-426)

# ஒட்டுசுட்டானில் மக்கள் நிகழ்வுகள்

மல்லாவி, செப்.2

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கரிப்பட்டை முறிப்புக் கிராமத்தில் மக்கள் நலன்சார் நிகழ்வுகள் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் அந்தப் பகுதி இராணுவப் பொறுப்பதிகாரியின் நெறிப்படுத்தலின் கீழ் கரிப்பட்டை முறிப்பு அ.த.க. பாடசாலையில் பல ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட சிறுவர் விளையாட்டு முற்றம் திறந்து வைக்கப்பட்டது. இதனைத் துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் த.மேகநாதன் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். பின்னர் வறுமைக்கோட்டின் கீழுள்ள 15 குடும்பங்களுக்குத் தலா இரண்டு நல்லின ஆடுகள் வழங்கப்பட்டன. அத்துடன் தென்னங்கன்றுகள் அங்கு கூடிநின்ற எல்லோருக்கும் தலா ஒன்று வீதம் வழங்கப்பட்டன. இவற்றை பாடசாலை அதிபர், துணுக்காய்க் கல்வி வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர்களாகிய கு.விஜயபாலா, எஸ்.ஜெயபாலன், ஒட்டுசுட்டான் கோட்டக் கல்விப் பணிப்பாளர் தா.பங்கையற்செல்வன் ஆகியோர் பயனாளிகளுக்கு வழங்கினர்.

அத்துடன், நடமாடும் மருத்துவ முகாமொன்றும் இங்கு நடைபெற்றது. இதில் கண்சிகிச்சைகள் விசேடமாக வழங்கப் பட்டன.

பொதுமக்கள் இதில் பெருமளவில் பங்குபற்றிப் பயன் பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (க-425)



போரால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மகாதேவா சைவச்சிறார் இல்ல சிறுவர்களை வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி நேரில் பார்வையிட வந்தபோது மகாதேவா ஆச்சிரம கணேசானந்த மகாதேவா சுவாமிகள் பொன்னாடை போர்த்தி வரவேற்கிறார். அருகில் மகாதேவா சைவச்சிறார் இல்லத் தலைவர் தி.இராசநாயகம். (302)

# கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தின் பெருந்திருவிழா நாளை ஆரம்பம்

கிளிநொச்சி,செப்.2

கிளிநொச்சி கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்த பெருந்திருவிழா நாளை சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 11 ஆம் திகதி 9 மணிக்குத் தேர்த்திருவிழாவும், மறுநாள் முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறவுள்ளன. தேவஸ்தான பிரதமகுருவான சிவஸ்ரீ. கு.இரத்தினேஸ்வரக் குருக்கள் உட்பட பல குருக்கள் இதில் கலந்து கொள்வர். திருவிழாக் காலத்தில் தினமும் மாலை வேளைகளில் திருநெறிக் கழக அனுசரணையுடன் சொற்பொழிவுகளும் இடம்பெறவுள்ளன.

திருவிழாக் காலங்களில் அடிய வர்கள் பூசைக்குத் தேவையான பூ, பூமாலைகள், பால், தயிர், இளநீர் போன்ற அபிஷேகப் பொருள்களையும் வழங்கி முருகப் பெருமானின் திருவருளினைப் பெறுமாறு ஆலயப் பரிபாலன சபையினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (எ-426)

# மீள்குடியமர்ந்து 14 மாதமாகியும் நிரந்தர வீடுகள் வழங்கப்படவில்லை

அக்கராயன், செப்.2

துணுக்காய் ஆரோக்கியபுரம் கிராம மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டு 14 மாதங்கள் கடந்த நிலையிலும் இவர்களுக்கு நிரந்தர வீடுகள் அமைக்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கிராமத்தில் 83 குடும்பங்கள் மீள்குடியமர்ந்த நிலையில் ஐ.ஓ.எம் மூலம் 6 மாதங்கள் தாக்கு பிடிக்கக் கூடிய 44 தற்காலிக வீடுகள் அமைக்கப்பட்டன. ஆனால் ஒரு நிரந்தர வீடு கூட அமைக்கப்படவில்லை. இதன் காரணமாக தற்காலிக வீடுகளில் நெருக்கடிகளுடன் மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

1977 மற்றும் 1983 களில் தென்னிலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரங்களில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்காக உருவாக்கப்பட்ட கிராமம் ஆரோகியபுரம் என்பது குறிப்பிடத்தக்கது. (க-410)

# பாடசாலைக்குப் புதிய கட்டடம்

கிளிநொச்சி மாவட்டம் அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்துக்குப் புதிய கட்டடமொன்று அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யுனிசெவ் நிறுவனம் இதற்கான நிதியுதவியை வழங்கவுள்ளது. சுமார் 22 லட்சம் ரூபா செலவில் இந்தக் கட்டடம் அமையவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (க-410)

# பஸ்நிலைய அடிக்கல் நடும் நிகழ்வில் நகரசபை புறக்கணிக்கப்பட்டதாக விசனம்

யாழ்ப்பாணம்,செப்.2

தேசியபோக்குவரத்து ஆணைக்குழுவின் அனுசரணையுடன் வவுனியா நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் பல மில்லியன் ரூபா பெறுமதியில் புதிதாக அமைக்கப்படவுள்ள பஸ்நிலைய அடிக்கல் நடும் வைபவத்துக்கு வவுனியா நகர சபையின் மக்கள் பிரதிநிதிகளுக்கோ, நிர்வாகத்துக்கோ அழைப்பு விடுக்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது அரசாங்கத்தினதும் அதன் பிரதிநிதிகளினதும் திட்டமிட்ட பழிவாங்கும் செயலென வவுனியா நகரசபை உப தலைவர் எம்.எம். ரதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்; இந்த பஸ் நிலைய அடிக்கல் நடும் வைபவம் நேற்று முற்பகல் ஏ-9 வீதியில் விவசாயப் பண்ணைக்கு அருகில் நடைபெற்றது. தனியார் போக்குவரத்து அமைச்சர் சீ.பி. ரத்நாயக்க இந்த நிகழ்வில் கலந்து கொண்டு அடிக்கல் நட்டார். இது தொடர்பாக எமக்கு எந்தவித அழைப்பும் விடுக்கப்படவில்லை. இது தொடர்பாக ஏற்பாட்டுக் குழுவினருடன் தொடர்பு கொண்டு கேட்ட போது "மேலிடத்து ஓடர்" எனப் பதிலளித்துள்ளனர்.

வவுனியா நகர சபைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட சபை. எனவே வவுனியா நகர சபையினரே இந்த நகர மக்களின் பிரதிநிதிகள். அடிக்கல் நடும் வைபவம் தொடர்பாக அரசாங்கம் முறைப்படி எமக்கு அழைப்பு விடுக்கவில்லை. இது எமக்கு மிகுந்த ஏமாற்றத்தையும் அதிர்ச்சியையும் தருகின்றது. வவுனியா நகரத்தில் நடைபெறும் எந்த அபிவிருத்தியாகினும் சரி அது நகர சபையின் அனுமதியுடன் நடைபெற வேண்டும் என உள்ளூராட்சிமன்ற சட்ட விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வவுனியா நகரை நவீனப்படுத்தும் திட்டத்துக்கான அங்குரார்ப்பண நிகழ்வு நடைபெற்ற போது நகர அபிவிருத்தி அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவும் நகரசபைத் தலைவரும் கையொப்பம் இட்டனர். இதன் ஒரு கட்டமே நேற்றைய வைபவம். இதில் திட்டமிடப்பட்ட வகையில் புறக்கணிப்பு நடந்ததா எனச் சந்தேகம் ஏற்படுகின்றது.

இது தொடர்பாக கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனிடம் தெரிவித்துள்ளோம். நாடாளுமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

எதிர் காலத்தில் இவ்வாறான சம்பவம் நடைபெறாமல் இருப்பதை உரியவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மீண்டும் மீண்டும் பயன்படுத்தக் கூடிய 'எலக்ரோனிக் தாள்' தயாராகியுள்ளது

எழுத்துகளை அழித்து மீண்டும் மீண்டும் பயன்படுத்தக்கூடிய 'தாளை தைவான் நாட்டு விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். 'ஐ2ஆர் ஈ-பேப்பர் என்ற இந்த பேப்பரில், 'பேக்ஸ் இயந்திரத்தில் பயன்படுத்தப்படக் கூடியதைப் போன்ற 'தெர்மல் பிரிண்டர் கொண்டு அச்சிடப்படுகிறது. குறிப்பிட்ட காலத்துக்குப் பின்னர், அச்சிடப்பட்ட விடயம் தேவைப் படாதபோது, அதற்குரிய இயந்திரத்தில் எழுத்துகளை அழித்து மீண்டும் பயன்படுத்தலாம். இவ்வாறு ஒரு தாளை மீண்டும் மீண்டும் 260 முறை பயன்படுத்தலாம் என்கின்றனர் விஞ்ஞானிகள்.

இந்தத் தாளை உருவாக்கியிருக்கும் தைவான் நாட்டு தொழிலகத் தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவன ஆராய்ச்சியாளர்கள், போஸ்டர்கள், அறிவிப்புகள் போன்றவற்றுக்குப் பயன்படுத்துவதற்கு இது மிகவும் ஏற்றது என்று கூறுகின்றனர். தற்போதைய அச்சிடும் முறையைப் போல இல்லாமல் இந்தத் தாளில் குறைவான செலவில் அச்சிடலாம் என்றும் உறுதி தெரிவிக்கின்றனர். இந்தத் தாள் மிகவும் மென்மையானது, எடை குறைவானது, திரும்பத் திரும்ப அச்சிடக்கூடியது. இது ஓர் உண்மையான ஈ- பேப்பர் என்று மேற்கண்ட ஆராய்ச்சி நிறுவனத்தின் துணைத் தலைவர் ஜான் சென் கூறுகிறார்.

இந்தத் தனித்தன்மையான தாளில், 'கொலஸ்டேரிக் லிக்விட் கிரிஸ்டல்' என்ற வேதிப்பொருள், ஒருவகை பிளாஸ்டிக் படலத்துடன் பூசப்பட்டுள்ளது. இதுதான் இந்தத் தாளை மீண்டும் மீண்டும் பயன்படுத்த உதவியாக உள்ளது. தற்போது காகித உற்பத்திக்கு என்று உலகெங்கும் ஆயிரக்கணக்கான மரங்களை வெட்ட வேண்டியுள்ளது. அந்த வகையில் சுற்றுச்சூழலுக்கு உகந்த இந்தத்தாள், பெரும் வரவேற்புப் பெறும் என்று இதன் கண்டு பிடிப்பாளர்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.



# தரவுகளைச் சேமிக்கும் கண்ணாடித் தட்டு

கோப்புக்களைச் சேமித்து வைக்கப் பயன்படுத்தப்பட்ட சாதனங்கள் தொழில்நுட்பம் வளர வளர மாற்றமடைந்து கொண்டு வருகின்றது. இந்த வரிசையில் கணினிப் பயனாளர்களுக்கு புத்தம் புதிய சேமிப்புச் சாதனம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. கண்ணாடித்தட்டினால் ஆன சிறிய இறுவட்டு போன்று காணப்படும் இந்த புதிய சாதனத்தை விரைவில் நீங்களும் பயன்படுத்த முடியும். இந்த புதியசாதனம் சவுத்தாம்ப்டன் பல்கலைக்கழகத்தின் ஆராய்சியாளர்களால் உருவாக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக அவர்கள் கூறுகையில்: இந்த புதிய சேமிப்புத் தட்டில் 50 GB வரை தரவுகளை சேமித்துக்கொள்ள முடியும். அலுவலகங்களில் பெரிய அளவிலான கோப்புகளைச் சேமிப்பவர்களுக்கு இது பெரிதும் உதவியாக இருக்கும். மற்றும் உறுதியான இந்த கண்ணாடித் தட்டில் தரவுகளை அழித்து சேமித்து வைக்க முடியும் எனவும் தெரிவித்தார்கள். இது மிகவும் உறுதியான ஒன்று எனவும் வரைவில் சந்தைக்கு வரும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ஒவ்வொரு 60 விநாடிக்கும் இணைய உலகில் நடப்பவைகள்

முதன் முதலில் ராணுவத்தின் பயன்பாட்டிற்காகக் கண்டு பிடிக்கப்பட்ட இணையம், அதன் அபரிமிதமான வளர்ச்சியால் தற்பொழுது சிறிய கிராமங்களில் கூட இந்த வசதியை பயன் படுத்துகின்றனர்.

சிறியவர் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் தற்பொழுது இணையம் என்பது இன்றியமையாத ஒன்றாகி விட்டது.

அது கல்விக்காக இருக்கலாம் அல்லது தொழில் சம்பந்தமாக இருக்கலாம் அல்லது சமூக தளங்களில் நண்பர்களுடன் அரட்டை அடிக்க எனப் பலவாறு பயன்படுகிறது. இவ்வாறு பல வழிகளில் இணையம் என்பது தவிர்க்க முடியாததாகிவிட்டது.

இவ்வாறு பலருக்கு உதவ பல தளங்கள் இணையத்தில் உள்ளது. இந்த இணைய உலகில் ஒவ்வொரு 60 வினாடிகளுக்கும் இடையே நடைபெறும் சுவாரஸ்யமான தகவல்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. 168 மில்லியன் மின்னஞ்சல்கள் மற்றவர்களுக்கு அனுப்பப்படுகிறது.
2. 1500+ புதிய பதிவுகள் வெளியிடப்படுகின்றன. மற்றும் 60+ புதிய பிளாக்குகள் ஆரம்பிக்கப்படுகின்றன.
3. 694,445 தேடல்கள் கூகுள் தேடியந்திரத்தில் நிகழ்கின்றன.
4. 70+ புதிய டொமைன் பெயர்கள் பதிவு செய்யப்படுகின்றன.
5. 695,000+ புதிய அப்டேட்கள் பேஸ்புக்கில் பகிரப்படுகின்றன. மற்றும் 510,040 புதிய பயனாளர்களின் கருத்துக்கள் பேஸ்புக்கில் போடப்படுகிறது.
6. 98,000 புதிய Tweets ட்விட்டரில் பகிரப்படுகிறது மற்றும் 320+ புதிய அக்கௌன்ட்டுகள் ட்விட்டரில் பதிவு செய்யப்படுகிறது.
7. யூடியூபில் 600+ புதிய வீடியோக்கள் பகிரப்படுகிறது மற்றும் 25+ மணி நேரம் வாசகர்களால் செலவழிக்கப்படுகிறது.
8. 1700+ பயர்பொக்ஸ் உலவி தரவிறக்கம் செய்யப்படுகிறது.
9. ஸ்கைப்பில் 370,000 நிமிடங்கள் பேசப்படுகிறது.




# இணையத்தளங்களை கண்காணிக்க புதிய முறை

இன்ணயத்தை திரும்பிப் பார்க்க உதவும் வேபேக் இயந்திரம் பற்றி நீங்கள் அறிந்திருக்கலாம். இணையத்தளங்களின் கடந்த கால தோற்றங்களைச் சேமித்து வைக்கும் இந்தத் தளத்தை இணையத்தின் கால் இயந்திரம் என்றும் சொல்கின்றனர்.

ஓர் இணையத்தளம் குறிப்பிட்ட காலத்திற்கு முன் எப்படி இருந்தது என்று அறிய விரும்பினால் இந்த இயந்திரத்தின் மூலம் காலத்தின் பின்னோக்கி சென்று அந்தத் தளத்தின் அப்போதைய தோற்றத்தைப் பார்க்க முடியும். இந்தத் தளத்தை எத்தனை பேருக்குத் தெரியும் என்று தெரியவில்லை. ஆனால் புதிதாக அறிமுகமாகியிருக்கும் ஸ்கிரீன்ஷாட் தளத்தை தினமும் பார்க்கும் போது இந்தத் தளம்தான் நினைவுக்கு வருகிறது.

ஸ்கிரீன்ஷாட் இணையத்தளம் தினமும் குறிப்பிட்ட இணையத்தளங்களின் தோற்றத்தை பின் தொடர உதவுகிறது. அதாவது அந்தத் தளத்தை தினந்தோறும் கண்காணிக்க வழி செய்கிறது.

எந்தத் தளத்தை பின் தொடர விருப்பமோ அந்தத் தளத்தின் முகவரியை சமர்ப்பித்தால் இந்தத் தளமானது அந்த தளத்தின் தோற்றத்தை தினந்தோறும் படம் பிடித்துக் காட்டுகிறது. இணையத் தளத் தோற்றத்தை அப்படியே படம் பிடித்து திரைத்தொகுப்பாகப் பார்க்கலாம் அல்லாவா, அதே போலவே தளங்களின் திரைத்தொகுப்பாக சேமித்து வைக்கிறது இந்தத்தளம்.

இதன் மூலம் எந்த ஓர் இணையத் தளத்தில் ஏற்படும் மாற்றத்தையும் கண்காணித்துக் கொண்டே இருக்கலாம். இந்த சேவையை பலவிதங்களில் பயன் படுத்தலாம். சொந்தமாக இணையத் தளம் வைத்திருப்பவர்கள் தமது தளங்களின் பரிணாம வளர்ச்சியை இதன் மூலம் பின் தொடரலாம். இணையத் தள வடிவமைப்பாளர்களும் தாம் உருவாக்கிய தளங்களின் செயற்பாட்டை அறிய இதனைப் பயன்படுத்தலாம். வர்த்தக நிறுவனங்கள் போட்டி நிறுவனங்களின் தளங்கள் மீது ஒரு கண் வைத்திருக்கவும் இதனை பயன்படுத்தலாம். இணையவாசிகளும் தமது அபிஷேமான தளங்களின் தோற்றத்தை தினமும் கண்காணிக்கலாம். ஆனால் கட்டண சேவை என்பதை மட்டும் நினைவில் கொள்ள வேண்டும். பின்வரும் இணையத்தள முகவரிக்குச் செல்வதன் மூலம் இந்த வசதியை பெறலாம். **http://dailyscreenshot.com/**

# அண்ட்ராய்டு இயங்குதளத்துக்கான சிறந்த இணைய உலாவி

கையடக்கத்தொலைபேசிப் பாவனையில் அண்மைக் காலமாக பிரபலமாகி வரும் இயங்குதளம் அண்ட்ராய்டு ஆகும்.

தற்போது அண்ட்ராய்டுக்கு ஏற்ற மிகச் சிறந்த இணைய உலாவி Dolphin Browser HD என்பதாகும். அண்ட்ராய்டு இயங்குதளத்தில் உருவான டிவைஸ்களுக்கு மாற்றீடான இணைய உலாவி இதுவாகும். அனைத்து டிவைஸ்களிலும் இயங்கக் கூடியது.

இதன் வசதிகள் Tabbed browsing, Multitouch and double&tap zoom. Import bookmarks from your current browser. Organize bookmarks into folders என 50 இற்கும் அதிகமான அட் ஒன்கள் கொண்ட நூல்நிலையம் உள்ளது.

இணையத்தளமொன்றின் ஐபோன் அல்லது டெஸ்க்டொப் வேர்சனுக்கு ஏற்றவாறு மாற்ற உதவும் user agents வசதியும் உள்ளது. உங்கள் விருப்பத்திற்கு ஏற்றால் போல் உலாவியை கான்விகர் செய்து கொள்ளவும் முடியும். பின்வரும் இணையத்தள முகவரி https://market.android.com/details?id=mobi.mgeek.TunnyBrowser என்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் சட்டத்தைக் கையிலெடுத்ததால் துர்ப்பாக்கிய சம்பவங்கள் அரங்கேறியுள்ளன

## பொறுப்பதிகாரி அசித்த தொட்டகொடவத்த தெரிவிப்பு

மஸ்கெலியா, செப். 2

பொதுமக்கள் சட்டத்தைக் கையில் எடுத்துக்கொண்டதால் பல துர்ப்பாக்கிய சம்ப வங்கள் இடம்பெற்றுள்ளன. பொலிஸார் அவர்களது கடமையை மக்களுக்காகச் செய்ய எத்தனித்தபோது, விலைமதிப்புள்ள மனித உயிர்கள் பல பறிக்கப்பட்டுள்ளன. கடந்த வாரங்களில் நடந்த இவ்வாறான விடயங்கள் கவலைக்குரியனவாகும்.

-இவ்வாறு மஸ்கெலிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அசித்த தொட்டகொடவத்த தெரிவித்துள்ளார். பெருந்தோட்ட மக்களின் பாதுகாப்புச் சம்பந்தமாக தோட்டங்களில் பாதுகாப்புக் குழுக்களை மீண்டும் உருவாக்கும் நிலையில் நேற்று முன்தினம் மஸ்கெலிய புரவுன் சீக் தோட்டப் பிரிவில் தோட்ட மக்களுடன் கலந்துரையாடியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:-

போதைப்பொருள், மதுபானம் போன்றவை அருந்துவதால் தோட்டங்களில் குடும்பத் தகராறுகள் ஏற்படுகின்றன. குறிப்பாக, தந்தை, தாய், பிள்ளைகள் ஆகியோரிடையே இவ்வாறான சூழ்நிலை உருவாகிறது. மது அருந்துவதால் பல வகையான துரதிஷ்ட விடயங்கள் நடைபெறுகின்றன.

மதுபோதையில் இடம்பெறும் நிகழ்வுகளே அதிகம் எமது பொலிஸ் நிலையங்களில் பதிவாகின்றன. எனவே, எமது பொலிஸ் நிலையம் ஊடாக எம்மால் முடிந்தளவு அவற்றைக் கட்டுப்படுத்த முயற்சித்து வருகின்றோம். தற்போது நாட்டில் அனைவரிடமும் கையடக்கத் தொலை பேசியுள்ளது. அது தேவைக்கதிகமாகக் கூடிவிட்டது. பெருந்தோட்டப் பகுதியிலும், கிராமப் பகுதியிலும் கூட தொலைபேசிகளைப் பாடசாலைக்குச் செல்லும் குழந்தைகளுக்கு வாங்கிக் கொடுப்பதால் பாடசாலை மாணவர்கள் சீரழிந்துள்ளனர்.

எனவே, மாணவர்களின் கல்வியில் அக்கறை கொண்டு, அவர்களது படிப்பு முடித்த பின்னர் அவர்களுக்கு கைத்தொலை பேசிகளைப் பெற்றுக் கொடுங்கள் – என்றார். (ச)


# அதிகாரியை அம்பால் குத்திய ஆதிவாசிக்கு சரீரப் பிணை

கண்டி, செப்.2

கண்டி ஆதார வைத்தியசாலையின் பாதுகாப்பு உத்தியோகத்தரை அம்பால் குத்திக் காயப்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். கண்டி நீதிமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை ஆஜர் செய்யப்பட்ட உருகு வரிகே ரத்னாயக்க என்னும் ஆதிவாசியை 25 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்குமாறு கண்டி பிரதம நீதிவான் யூ.எஸ்.பீ.க ரளியத்த உத்தரவிட்டுள்ளார். ஆதிவாசியிடம் இருந்து கைப்பற்றிய அம்பையும், ஈட்டியையும் 10 ஆயிரம் ரூபா பிணையில் அவரிடம் ஒப்படைக்குமாறும் ஒக்ரோபர் மாதம் 24ஆம் திகதி அவரை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் நீதிவான் உத் தரவிட்டுள்ளார்.

கண்டி தலைமையகப் பொலிஸ் பொறுப்பதிகாரி யூ.பீ.பலி ஹவதனவின் தலைமையில் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (ச-5)

## தலைமைத்துவ விருது...



மனநோய் இயல் மருத்துவத்தில் சிறப்பாக பணியாற்றியுள்ளமைக்கான ஆசிய தலைமைத்துவ விருது கல்முனை மனநோய் இயல் மருத்துவ அலகுக்கு கிடைத்துள்ளது. மெல்போனில் இடம்பெற்ற விருது வழங்கும் நிகழ்வில் கல்முனை அலகின் சார்பில் டாக்டர் ஜுடி ஜெயக்குமார் விருதினை பெற்றுக் கொண்டார். அவருடன் ஆலோசகர் டாக்டர் ஜயன் மற்றும் டாக்டர் கம்பீரா ஆகியவர்களும் இணைந்திருந்தனர். விருதினை பேராசிரியர் பரமேஸ்வர தேவா வழங்கினார். (ப)

# சட்டவிரோத மின் பாவனை; வர்த்தகருக்கு அபராதம்

பேருவளை, செப். 2

வர்த்தக நிலையமொன்றுக்கு சட்ட விரோதமான முறையில் மின்சாரம் பெற்ற நபர் ஒருவருக்கு ஹொரணை நீதிவான் மஹிந்த ரணசிங்க 10ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளார். இலங்கை மின்சார சபைக்கு ஏற்பட்ட சேதமாக ரூபா 80 ஆயிரத்து 781.90 சதத்தை நட்ட ஈடாகச் செலுத்தும்படியும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

ஹொரணை குடா உடுவ பகுதியைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவருக்கே இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டது. (ச)

# ஐஸ்கிறீம் உட்கொண்டோர் வைத்தியசாலையில் அனுமதி

அம்பாறை,ஓக.2

அம்பாறை, அட்டாளைச்சேனைப் பிரதேசத்தில் ஐஸ்கிறீம் உட்கொண்ட சுமார் 30 பேர் திடீரென சுகவீனமடைந்த நிலையில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் வயிற்றோட்டம், வாந்திபேதி, காய்ச்சல் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் எம்.எம்.தாஸீம் தெரிவித்துள்ளார்.

இவர்கள் அட்டாளைச்சேனை வைத்திய சாலை மற்றும் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்கள் வானில் வந்த ஐஸ்கிறீமை வாங்கி உட் கொண்டதாகவும் இதன் பின்னர் திடீரென்று சுக வீனடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து ஐஸ்கிறீம் உற்பத்திச் தொழிற்சாலைக்கு விரைந்தஅட்டாளைச்சேனை சுகாதாரஅதிகாரிகள் அந்தத் தொழிற்சாலைக்கு சீல் வைத்துள்ளனர். (ச)

# ஹக்கல தாவரவியல் பூங்காவுக்கு ஒரு வாரத்தில் 16ஆயிரம் பேர் வருகை

கொழும்பு, செப்.2

ஹக்கல தாவரவியல் பூங்காவுக்கு கடந்தவார இறுதியில் 16ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த எண்ணிக்கை சாதாரண நாள்களில் வருகை தரும் பயணிகளின் எண்ணிக்கையின் ஆறு மடங்காகும் என்று பூங்காவின் நிர்வாகபீடம் தெரிவித்துள்ளது.

பாரம்பரிய தேசிய சொத்தாகக் கணிக்கப்படும் இந்தப் பூங்காவை பாதுகாப்பதற்காக அதற்குள் பொலித்தீன், பிளாஸ்டிக் ஆகிய பொருள்களை எடுத்துச் செல்ல முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# குருநாகல் வைத்தியசாலையில் 5 குழந்தைகள் மரணம்

கொழும்பு, செப். 2

குருநாகல் போதனா வைத்தியசாலையின் குழந்தைகள் விடுதியில் பெக்ரீரியா நோய்த் தாக்கத்தால் ஐந்து குழந்தைகள் மரணமாகியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக குழந்தைகள் விடுதி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது என்று குருநாகல் வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் திருமதி சோமா ராஜமந்திரி தெரிவித்துள்ளார்.

குழந்தைகளின் இரத்தம் பரிசோதிக்கப்பட்டபோது அதில் பக்ரீரியாக் கிருமிகள் கண்டுபிடிக்கப்பட்டன. அதனைக் கட்டுப்படுத்த தடுப்பு மருந்து ஏற்றப்பட்டது. எனினும், அவர்களைக் காப்பாற்ற முடியவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை 28 ஆம் இலக்க விடுதியில் இருந்த குழந்தைகள் வேறொரு விடுதிக்கு மாற்றப்பட்ட பின்னரே இந்த விடுதி மூடப்பட்டது.

புதிதாகச் சேர்க்கப்படும் குழந்தைகள் கொழும்பு லேடி றிச்வே வைத்தியசாலைக்கும், கண்டி போதனா வைத்தியசாலைக்கும் அனுப்பப்படுகிறார்கள்.

பக்ரீரியாத் தொற்று ஏற்பட்ட விடுதி விரைவில் சுத்திகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-5)

# அனுமதிப் பத்திரமின்றி சந்தன மரம் கொண்டு சென்றவருக்கு அபராதம்

தெல்தெனிய, செப். 2

அனுமதிப் பத்திரமின்றி 127 கிலோ கிராம் எடையுள்ள சந்தன மரக்குற்றிகளைக் கொண்டு சென்ற குற்றத்தை ஒப்புக்கொண்ட நபரொருவருக்கு தெல்தெனிய நீதிவான் 20ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன், கைப்பற்றப்பட்ட சந்தனக்குற்றிகளை அரசுடமையாக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

இந்த வழக்குத் தாக்கல் தெல் தெனிய பொலிஸாரால் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# வேலையற்ற பட்டதாரிகள் நியமனம் பெறுவதில் தொடர்ந்தும் ஏமாற்றம்

## செயலாளர் ஹிசைன் முபாறக் கூறுகிறார்

அம்பாறை,செப்.2

"நாட்டிலுள்ள வேலையற்ற பட்டதாரிகள், நியமனம் தொடர்பில் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டே வருகின்றனர். இதனால் விரக்தியின் விளிம்பிலேயே பட்டதாரிகள் உள்ளனர்".

இவ்வாறு தொழில்ரீதியாகத் தகுதிவாய்ந்த இலங்கை உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா பட்டதாரிகளின் தொழிற் சங்கச் செயலாளர் எம்.ஹிசைன் முபாறக் தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை மக்கள் ஜன நாயகக் கட்சியின் அனுசரணையுடன், இலங்கை உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா பட்டதாரிகளின் தொழிற் சங்கம் ஊடகவியலாளர் மாநாடு ஒன்றை நடத்தியது. சாய்ந்தமருது ப்ரைடைஸ் மண்டபத்தில் நடைபெற்ற இந்த ஊடகவியலாளர் மாநாட்டின் நோக்கம் குறித்து விளக்கி உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

'வடக்கு, கிழக்கிலுள்ள வேலையற்றபட்டதாரிகள் பெரும் துன்ப துயரங்களுக்கு மத்தியில் உயர் கல்வி பயின்று பட்டம் பெற்றபின் இன்றும் பெற்றோருக்கு சுமையாகவே இருக்க வேண்டிய பரிதாப நிலைமை தொடர்ந்த வண்ணமேயுள்ளது.

பட்டதாரிகள் நியமனம் தொடர்பில் காலம் காலமாக வாக்குறுதிகளும், அறிவிப்புக்களும் விடுக்கப்பட்டு வருகின்ற போதிலும் அவைவெறும் வார்த்தை ஜாலங்களாகவே அமைந்துள்ளன.

ஆயிரக்கணக்கில் நியமனம் கிடைக்குமெனப் பட்டதாரிகள் ஏங்கிக் கொண்டிருக்க, கண் துடைப்பாக அரசு நூற்றுக்கணக்கான சிறு தொகையினருக்கு மட்டும் நியமனம் வழங்குகின்றது.

இதேவேளை பல தடவைகள் சில பதவிகளுக்கென நியமனம் வழங்குவதற்கு பட்டதாரிகளிடமிருந்து நியமனங்கள் கோரப்பட்டும் பின்னர் அவை கிடப்பில் போடப்பட்டவையாகவேயுள்ளன.

கடந்த மே மாதம் 15 ஆயிரம் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப் போவதாக அமைச்சரவைத் தீர்மானம் அறிவிக்கப்பட்டிருந்தும் இன்றுவரை அதற்கான விண்ணப்பங்கள் கோரப்படவில்லை.

15 ஆயிரம் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கும் அமைச்சரவைத் தீர்மானத்தின் படி தாமதமின்றி நியமனம் வழங்குவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட வேண்டும்.

இந்த விடயத்தில் கவனம் எடுக்காவிட்டால் குறுகிய காலத்துள் வேலையற்ற பட்டதாரிகளாகிய நாம் சாத்வீகப் போராட்டங்களில் குதிக்கத் தீர்மானித்துள்ளோம்.என- என்றார். (ச-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
சொந்த பந்தங்கள் உங்களின் வீடு தேடி வரலாம். கடன் பிரச்சினை ஒன்றை மாற்றி அமைப்பீர்கள். போட்டி, பந்தயங்களில் வெற்றி காணலாம். வாகன யோகத்திற்கு வாய்ப்பு உண்டு. மனதில் உற்சாகம் குடிகொள்ளும் நாள். நீண்ட நாள்களாகச் செல்ல நினைத்த இடங்களுக்குச் செல்லலாம். உதிரி வருமானங்களைப் பெறலாம். ஆனந்தமான நாள்.

**இடபம்:**
பொது விடயங்களில் தலையிட்டு புகழ் சேர்ப்பீர்கள். குறைந்த செலவில் முடியும் என நினைத்த காரியம் ஒன்றுக்கு அதிகமாகச் செலவாகலாம். சிறிய பிரச்சினை ஒன்றை நினைத்து பெரிய அளவில் கவலைப்படுவீர்கள். தடுமாற்றங்கள், குழப்பங்கள் ஏற்படலாம். நீங்கள் செல்லும் இடத்தில் உறவினர் அல்லது நண்பர் ஒருவரைப் பார்க்கலாம்.

**மிதுனம்:**
ஆசைகள் அதிகரிக்கும் நாள். வெளியூர்களில் இருந்து வியக்க வைக்கும் செய்திகளைக் கேட்கலாம். குடும்ப உறுப்பினர் கேட்ட பொருள் ஒன்றை பல இடங்களுக்கு அலைந்து திரிந்து வாங்கிக் கொடுப்பீர்கள். தொழில் ரீதியாகவோ அல்லது வேறு வேலையாகவோ சிறு

**கடகம்:**
வீண் வம்பு, விவகாரங்கள் முடிவுக்கு வரும். வெளியுலகத் தொடர்புகளை விரிவுபடுத்திக் கொள்வீர்கள். அயலாரின் மனம் கோணாமல் நடந்து கொள்வீர்கள். பொது வாழ்வில் உள்ளோருக்கு செல்வாக்குக் கூடும். ஓய்வாக இருக்காமல் காலை முதல் மாலை வரை ஏதாவது வேலைகளைச் செய்து கொண்டிருப்பீர்கள்.

**சிங்கம்:**
எதிர்பாராத பணவரவுகள் வந்தாலும், அதற்கு முன்னரே செலவுகள் காத்திருக்கும் நாள். நீண்ட நாள் தள்ளி வைத்த வேலை ஒன்றை இன்று சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். பிரியமான உறவினர் ஒருவரைத் திடீரெனச் சந்திக்க நேரிடலாம். சிலரிடம் வீண் வம்பு பேசி அவர்களை வெறுப்பேற்றுவீர்கள்.

**கன்னி:**
திட்டமிட்ட காரியங்கள் மட்டுமின்றி, திட்டமிடாத காரியங்களும் நடக்கும் நாள். உறவினர்கள் மத்தியில் உங்களின் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். கையில் பணப்புழக்கம் கூடும். தந்தை வழியில் மனக்கசப்புகள் வராமல் இருக்க விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். பெண்களால் சந்தோஷமான அனுபவம் பெறலாம்.

**துலாம்:**
காரியங்கள் தடையின்றி நடக்க வேண்டும் என கடவுள் வழிபாட்டை மேற்கொள்வீர்கள். புதியவர்கள் சிலர் உங்களை தேடி வரலாம். பழைய வாகனங்களை மாற்றி புதிய வாகனங்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். உடல் சோர்வு, அசதியால் உற்சாகம் குறையும். ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆள்படலாம். சுபச் செலவுகள் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:**
சுறுசுறுப்பு, உற்சாகமாகச் செயற்படுவீர்கள். சந்தோஷம் தரும் செய்தி ஒன்றைக் கேட்கலாம். சிலர் உங்களை நம்பி பணப்பொறுப்புகளை ஒப்படைக்கலாம். கலகலப்பாகப் பேசி மற்றவர்களை மகிழ்விப்பீர்கள். சண்டை போட்ட சிலரிடம் சமாதானமாகச் செல்வீர்கள். நண்பர்கள் சிலர் உங்களுக்காகச் செலவு செய்யலாம். நாவன்மை அதிகரிக்கும்.

**தனுசு:**
கடனாகக் கொடுத்த பணம் திரும்பி வரும். தொழில் ரீதியான விடயங்களில் நெருக்கடிகள் இருக்கலாம். எதிர்பாராத செலவுகள் இருந்தாலும் அதை நிறைவேற்ற புதிய பணவரவுகள் வந்து சேரும். புதிய முயற்சிகளில் ஈடுபட்டு வெற்றி காணலாம். தம்பதியர் இடையே ஏற்பட்ட மனஸ்தாபம் விலகி பாசம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும்.

**மகரம்:**
சிலர் உங்களின் கருத்துக்கு எதிர்க்கருத்துக்கள் சொல்லி எரிச்சல் உண்டாக்கலாம். சொந்த விடயம் ஒன்றை உங்கள் நலனில் அக்கறை கொண்ட ஒருவரிடம் சொல்லி யோசனை கேட்பீர்கள். உங்களுக்குத் தீங்கு செய்த ஒருவரிடம், அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் நடந்து கொள்வீர்கள்.

**கும்பம்:**
தொடங்கிய சில வேலைகளை இடையில் விட்டு விட நேரிடலாம். உடல் ஆரோக்கியக் குறைவுகளால் உற்சாகம் குறையலாம். ஓய்வு எடுக்க நினைத்தாலும் அது முடியாத அளவுக்கு யாராவது வந்து தொந்தரவு கொடுக்கலாம். மற்றவர்கள் செய்த தவறுகளுக்கு நீங்கள் பொறுப்பேற்க நேரிடலாம். பேராசைகளால் தண்டச் செலவுகள் நேரும்.

**மீனம்:**
உயர்வான வாழ்க்கைக்கு அடித்தளம் அமைப்பீர்கள். உறவினர்களின் மனம் கோணாமல் நடந்து கொள்ள முற்படுவீர்கள். நடக்குமோ நடக்காதோ என, நினைத்த காரியம் ஒன்று திடீரென நடந்து விடலாம். முக்கியமான நண்பர் ஒருவரை அவரின் வீட்டிற்கே சென்று சந்திப்பீர்கள். சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பு கிட்டும்.

---

# நான் ... அப்பா...

## சொல்கிறவர் அமைச்ச...

பாரம்பரிய கைத்தொழில் மறும் சி...
அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ தேவ...
ஆங்கிலப் பத்திரிகைக்கு வழங்கிய பே...
பகிர்வு, உதயன் செய்தி ஆசிரியா மீதான...
பற்றி கருத்துக்களைத் தெரிவித்து...
ஊடகங்களுக்கு தமிழ் அமைச்சர் ஒ...
கருத்துக்களை தமிழ் மக்கள் அறிந்து கொ...
பேட்டியின் மொழியாக்கம் இங்கு...



**ரேணுபிரேம்**

**ஊடகங்களில் இருந்தே ஆரம்பிப்போம். யாழ்ப்பாணத்தில் பத்திரிகையாளர்கள் பயத்துடனேயே வாழ்கிறார்கள். உங்கள் வழியில் குறுக்கிடும் எவரையும் விட்டுவைக்காத ஒரு பயங்கரமான ஆள் நீங்கள் என்று யாழ்ப்பாணத்தில் பத்திரிகையாளர்கள் பலர் கருதுகிறார்கள்...**

இந்தக் குற்றச்சாட்டுக்களில் ஒன்றும் நிரூபிக்கப்படவில்லை. அவை உண்மையாக இருந்தால் யாழ்ப்பாணத்தில் எந்தவொரு பத்திரிகையும் இருக்கப் போவதில்லை. புலிகள் இருந்தபோது அவர்கள் ஊடகங்களை ஒடுக்கினார்கள். ஆனால், நாங்கள் அதை எப்போதும் செய்ததில்லை. இனிமேலும் செய்யமாட்டோம்.

தேர்தல் முடிந்த கையோடு, உதயன் பத்திரிகையின் செய்தி ஆசிரியர் தாக்கப்பட்டார். எந்தவித விசாரணைகளும் இன்றியே குற்றச்சாட்டுக்கள் எம் மீது சுமத்தப்பட்டன. ஆனால் அந்தத் தாக்குதலுக்கு ஒரு பின்னணி இருக்கிறது. தாக்கப்படுவதற்கு முன்னர் அந்தச் செய்தி ஆசிரியருக்கு முகாமைத்துவத்துடன் பிரச்சினை இருந்திருக்கிறது. அதனால் அவரை ஒரு அறையில் பூட்டி வைத்திருந்திருக்கிறார்கள். உதயன் பத்திரிகை நிறுவனத்தில் இதுபோன்ற சம்பவங்கள் அடிக்கடி நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன.

அந்தத் தாக்குதலுடன் தொடர்புடைய இரு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவையெல்லாம் உதயனின் உள்வீட்டுப் பிரச்சினைகள், இப்போது வெளியே வந்திருக்கின்றன.

அவர்கள் (உதயன்) எங்களை விமர்சிப்பதால் நாங்கள் அவர்களைக் கொல்கிறோம் என்று எங்களை விமர்சிப்பவர்கள் கூறுகிறார்கள். அது பொய். யாழ்ப்பாணத்தில் பாதுகாப்பாக இருந்து கொண்டே அவர்கள் எங்களைத் தொடர்ந்தும் விமர்சிக்கிறார்கள். கருத்துக்களைக் கருத்துக்களால் எதிர்கொள்வதே எமது கொள்கை.

நாடாளுமன்றத் தேர்தலில் நான்தான் யாழ். மாவட்டத்தில் அதிகூடிய விருப்பு வாக்குகள் பெற்று வெற்றி பெற்றேன். அதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் என்னைப் பார்த்துப் பயப்படுகிறார்கள். நான் அவர்களில் இருந்து வேறுபட்ட நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறேன். தேசிய அரசியல் நீரோட்டத்தில் நான் இணைந்தேன்; அரசுடனும் இணைந்திருக்கிறேன். இருப்பினும் நான் ஓர் அப்பாவி. புலிகளிடம் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்காகவே கடந்த காலங்களில் மட்டுமே நாம் ஆயுதங்களை வைத்திருந்தோம்.

**வெளியே போனால் ஈபிடிபியினர் கொன்றுவிடுவார்கள் என்ற அச்சம் காரணமாக, உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் கானமயில்நாதனும் செய்தி ஆசிரியர் குகநாதனும் 6 ஆண்டுகளாக பத்திரிகை அலுவலகத்துக்குள்ளேயே வாழ்கிறார்களே...**

அது உண்மை என்று நான் நினைக்கவில்லை. அப்படி என்றால் உதயனின் நிர்வாக இயக்குநரான ஈ.சரவணபவன் எப்படி எல்லா இடங்களுக்கும் திரிகிறார்? அவர்தான் எங்களுடைய முதல் எதிரி என்று நீங்கள் சொல்லக்கூடும், அப்படி இருக்கும்போது எந்தத் தடைகளும் இன்றி அவரால் எப்படி எல்லா இடமும் செல்ல முடிகிறது?

எனவே அவர்கள் சொல்வதில் உண்மையில்லை. நாங்கள் கருத்துக்களைக் கருத்துக்களால்தான் எதிர்கொள்கிறோம்; துப்பாக்கிச் சன்னங்களால் அல்ல. புலிகளை வளர்த்தெடுத்தவர்கள்தான் அதைச் செய்கிறார்கள். ஒரு விவாதத்துக்கு நான் கேட்கிறேன், நான் ஆபத்தானவனாக இருந்தால், அவர்கள் எம்மை விமர்சிப்பதை நிறுத்த என்னால் முடியும். ஆரம்பத்தில் இருந்தே என்னைக் கொல்வதற்கு அவர்கள் முயன்று வருகிறார்கள். என்னைக் கொல்வதை நியாயப்படுத்துவதற்காக எனக்கு எதிராகக் கேவலமான அவதூறுகளைப் (character assassination) பரப்பி வருகிறார்கள். ஆனால் என்னைக் கொலை செய்வதில் தோற்றுவிட்டார்கள். அதனால் இப்போது எனது மதிப்பைக் கெடுக்கும் வேலைகளில் இறங்கியிருக்கிறார்கள்.

**ஜனாதிபதி விடுத்த அழைப்பை ஏற்று, நாட்டை மீளக்கட்டியெழுப்பும் நோக்கோடு வந்த அறிவாளியான பேராசிரியர் ரட்ணஜீவன் கூல் திடீரென நாட்டைவிட்டு வெளியேறி உள்ளார்...**

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் தேர்தல் நடப்பதற்கு முன்னர் அவர் (கூல்) என்னைப் பற்றி மிக உயர்வாகப் பேசி வந்தார். துணைவேந்தராக அவர் வரவில்லை என்றதும் என்னை விமர்சிக்கிறார்.

**ஆனால், நீங்கள் யாழ்ப்பாணத்தில் குற்றவியல் வழக்கு ஒன்றை அவருக்கு எதிராகத் தாக்கல் செய்ததன் காரணமாகவே அவர் நாட்டைவிட்டு ஓடினார் என்று அறிக்கைகள் கூறுகின்றனவே?**

நான் எந்தக் குற்றவியல் வழக்கும் பதிவு செய்யவில்லை. அதைப் பற்றி எனது சட்டத்தரணியிடம் நீங்கள் கேட்கலாம். அவர் எனது பெயரையும் புகழையும் கேவலப்படுத்துகிறார். அதனால் நான் முறையிட்டேன். ஊகாவற்றுறையில் நான் ஏன் முறையிட்டேன் என்றால், 2002இல் அங்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அமைதியின்மையை ஏற்படுத்தினர்; நான் இராணுவத்துக்குப் பெண்களைக் கூட்டிக் கொடுத்தேன் என்று அவர் கூறினர். அதனால் இந்தத் தடவை அங்கு முறையிட்டேன். அதனால் பொலிஸார் அவரிடம் (கூல்) வாக்குமூலம் பெற்றனர். நீதிமன்றத்தில் தோன்றி ஆதாரங்களைத் தரும்படி நீதிபதி அவரிடம் கேட்டார்.

இப்போது அவர் நாட்டைவிட்டு வெளியேறிவிட்டார். நீதிபதியை விமர்ச்சிக்கிறார். வெளிநாட்டுக்குச் செல்வதற்கான ஒரு காரணமாக அவர் இதனைப் பயன்படுத்துகிறார். கடந்த தடவையும் அவர் இந்த மாதிரியே செய்தார். புலிகள் அவரை துணைவேந்தராக்க அனுமதிக்க மாட்டார்கள் என்று தெரிந்திருந்தும் அவர் விண்ணப்பித்தார். ஆனால் ''இல்லை, துணைவேந்தராக நீங்கள் வரவேண்டாம்'' என்று தமிழ்ச் செல்வன் சொல்லிவிட்டார். அப்படியே அவர் துணைவேந்தராக வந்திருந்தால் புலிகள் அவரைக் கொன்றிருப்பார்கள். புலிகளின் நிலைப்பாடு சரியோ தவறோ, அது வேறு விடயம் ஆனால் அமெரிக்காவுக்குப் போவதற்கான சந்தர்ப்பமாக அவர் அதனைப் பயன்படுத்திக் கொண்டார். அதுதான் அவரது பண்பு.

**துணைவேந்தராக்குவதாக ஜனாதிபதி அவருக்கு வாக்குக் கொடுத்திருந்தார். ஆனால், நீங்கள் எதிர்த்ததால் பின்னர் அதனை அவர் கைவிட்டார் என்று சொல்லப்படுகிறது....**

இல்லை. நான் எதிர்க்கவில்லை. கடந்த முறை (2006) நான் அவரை சிபாரிசு செய்தேன். இப்போது இங்கே ஜனநாயகம் இருக்கிறது. அதனால் யாழ். பல்கலைக்கழகப் பேரவையில் நான் தலையிடவில்லை. அதனால் வசந்தி முதலாவதாக வந்தார், கூல் கடைசியாக வந்தார். ஜனாதிபதி வசந்தியை துணைவேந்தராக நியமித்தார்.

கடந்த தடவை, துணைவேந்தர் தெரிவுப் பட்டியலில் 3ஆவதாக வந்த கூலை நான் சிபாரிசு செய்தேன். ஏனெனில், புலிப் பயங்கரவாதம் அங்கிருந்ததால் நல்ல மனிதர்களைத் தெரிவு செய்வதற்கு அங்கிருந்தவர்கள் அச்சப்பட்டார்கள். ஆனால், இந்தத் தடவை கூல் என்னிடம் வந்து தன்னைச் சிபாரிசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...் ஓர் ...பாவி

## ...அமைச்சர் டக்ளஸ்

...ல் மற்றும் சிறு தொழில் முயற்சி ...டக்ளஸ் தேவானந்தா 'லக்பிம' ... வழங்கிய பேட்டியில் அதிகாரப் ...சிரியர் மீதான தாக்குதல் என்பன ...் தெரிவித்துள்ளார். சிங்கள ...அமைச்சர் ஒருவர் தெரிவிக்கும் ...ர் அறிந்து கொள்வதற்காக அந்தப் ...ாக்கம் இங்கு தரப்படுகிறது.

செய்யும்படி பல தடவைகள் வேண்டினார். நான் அவரிடம் சொன்னேன், அதனை பேரவையே பார்த்துக் கொள்ளட்டும், நான் அதில் என்னை ஈடுபடுத்திக் கொள்ளப்போவதில்லை என்று...

**யாழ். பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர் பதவிகளையும் அங்கிருக்கும் முக்கிய பதவிகளையும் உங்கள் ஆதரவாளர்கள் மட்டுமே வகிக்க முடிகிறது என்ற குற்றச்சாட்டு உள்ளதே...**

(குறிப்பு: இம்முறை யாழ்.பல்கலைக்கழகப் பேரவைக்குத் தெரிவான 13 உறுப்பினர்கள் டக்ளஸ் தேவானந்தாவின் அடிவருடிகள் என்று பேராசிரியர் கூல் சண்டே லீடர் பத்திரிகையில் எழுதிய தனது கட்டுரையில் குறிப்பிட்டிருந்தார்.)

அது பிழை. எல்லாப் பல்கலைக்கழங்களிலும் என்ன நடைமுறை கடைப்பிடிக்கப்படுகிறதோ அதுவே இங்கும் பின்பற்றப்படுகிறது. உங்கள் பகுதிகளில் என்ன செய்கிறார்கள்?

**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவே பேரவை உறுப்பினர்களை நியமிக்கிறது.**

**அப்படித்தான் யாழ்ப்பாணத்திலும் நடக்கிறது.**

**ஆனால், நீங்கள் கொடுத்த பட்டியலில் இருந்தவர்களைத்தான் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நியமித்தது என்ற குற்றச்சாட்டு உள்ளதே...**

எல்லோரும்தான் பெயர்ப் பட்டியல் கொடுத்தார்கள். நானும் கொடுத்தேன், மாவை சேனாதிராசா, மனோ கணேசன் மற்றும் பலர் என்று எல்லோரும் தான் கொடுத்தார்கள். அதன் பின்னர் யாரை நியமிப்பது என்பது மானியங்கள் ஆணைக்குழுவைப் பொறுத்த பணி.

**நீங்கள் அதிகாரப் பகிர்வு பற்றிக் குறிப்பிட்டவர். இப்போது இருப்பது உங்களுடைய அரசு. ஆனால் போர் இரண்டு வருடங்களுக்கு முன்னர் முடிந்து விட்டபோதும் உங்கள் அரசு இது வரையில் ஒன்றுமே செய்யவில்லையே..?**

அதனால்தான் 6 மாத கால வரையறையுடன் நாங்கள் ஒரு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை நியமித்துள்ளோம். முன்னர் நியமிக்கப்பட்ட தெரிவுக் குழுக்களுக்கு காலவரையறைகள் இல்லை. தெரிவுக் குழு என்ற யோசனையை நான்தான் முன்வைத்தேன்.

**நாங்கள் அறிந்த வரையில் இந்தத் தெரிவுக்குழு அதிகாரங்களைப் பங்கீடு செய்வதைப் பற்றி விவாதிக்கப்போவதில்லை என்று தெரிகிறது. தேசிய நல்லிணக்கத்தை எப்படி ஏற்படுத்துவது என்பது தொடர்பிலேயே இந்தத் தெரிவுக்குழு ஆராயும் என்று சொல்லப்படுகிறதே...**

இல்லை. இந்தத் தெரிவுக்குழு அரசியல் தீர்வு பற்றி ஆராயும்.

**ஆனால், இது ஒரு காலம் கடத்தும் உத்தி என்ற நம்பிக்கை அனேகமானவர்களிடம் குறிப்பாக எதிர்க்கட்சிகளிடம் இருக்கிறதே...**

அதுதான் எதிர்க்கட்சியினரின் அரசியல். இல்லையா...

**இருந்தாலும், அனைத்துக் கட்சிக் குழு அறிக்கை, மங்கள முனசிங்க ஆணைக்குழு அறிக்கை மற்றும் இதற்கு முன்னர் நியமிக்கப்பட்ட குழுக்களின் அறிக்கைகள் என்பவற்றுக்கு என்ன நடந்தது? ஏன் அவற்றில் ஒன்று அரசில் தீர்வுக்கான அடிப்படையாக அமைய முடியாது?**

அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு அரசாங்கங்களுக்கு உரியவை. ஒவ்வொரு அரசுகளும் தமக்கென பிரத்தியேக கொள்கைகளை வைத்துள்ளன. வேறு வேறு வழிவகைகளைக் கையாள்கின்றன.

**ஆனால், அனைத்துக் கட்சிக் குழு இந்த அரசால் இந்த ஜனாதிபதியால்தானே நியமிக்கப்பட்டது?**

அப்போது புலிகள் இருந்தார்களே! இப்போது புலிகள் போய்விட்டார்கள். அதனால் இது வேறுபட்ட ஒரு சூழ்நிலை. புலிகள் இருந்தால் அவர்கள் தீர்வு எட்டப்படுவதற்கு அனுமதிக்கமாட்டார்கள். இப்போது இந்த அரசு உறுதியானது, அது தீர்வு ஒன்றைத் தருவதற்கு இடம்தாருங்களேன்...

***13ஆவது திருத்தம் ஏற்கனவே அரசமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஆனால், அது முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லையே...***

அது ஒரு பிரச்சினைதான். ஆனால் எத்தகைய இடைவெளிகள், பிரச்சினைகள் இருந்தாலும் அவற்றையெல்லாம் தெரிவுக்குழுவின் மூலமாகத் தீர்த்துக் கொள்ளலாம்.

**அதிகாரப் பகிர்வு தொடர்பில் உங்கள் சிந்தனையில் உண்மையில் என்ன இருக்கிறது?**

13 ஆவது திருத்தமும் அதற்கு மேலும். அரசில் பல கட்சிகள் இருக்கின்றன; அவற்றுக்கிடையில் பல கருத்து முரண்பாடுகள் இருக்கலாம். நாம் ஒன்றாக அமர்ந்திருந்து அவற்றை எல்லாம் பேசித் தீர்க்க வேண்டும்.

*13ம் மேலதிகமும் என்கிறீர்களே அவை என்ன?*

அது பற்றியும் நாங்கள் கதைக்கத்தான் வேண்டும்.

*பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களா?*

இது ஒரு பிரச்சினைதான். இதில் அரசின் கருத்துக்கு மாறுபட்ட பார்வையை நான் கொண்டிருக்கலாம். நான் பொலிஸ் அதிகாரங்களைக் கோரலாம், ஆனால் ஜனாதிபதி அதைத் தர மறுக்கலாம். எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் ஜனாதிபதியுடன் நாங்கள் கலந்தாலோசிக்கலாம். என்ன தேவையோ அவற்றை அவர் உள்ளடக்கிக் கொள்வார். தெரிவுக் குழு எந்த ஒரு தீர்வையாவது ஏற்றுக் கொண்டால் அதை நடைமுறைப்படுத்துவதில் தனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என்று அவர் கூறுகின்றார்.

**உங்கள் அரசில் சில கடும்போக்கு சிங்கள பௌத்த கட்சிகள் இருக்கின்றன. அவர்களுடன் ஒரு தீர்வுக்கு வருவது சாத்தியம் என்று நீங்கள் கருதுகிறீர்களா?**

இதுவரைக்கும் எந்தப் பிரச்சினையும் இல்லை. நாங்கள் சேர்ந்தே வேலை செய்கிறோம்.

**வடக்கில் நடந்த உள்ளூராட்சித் தேர்தலில் அதி கூடிய வாக்குகளை வென்றிருக்கக்கூடிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, யாழ்ப்பாணத்தின் அபிவிருத்திப் பணிகளில் ஓரங்கட்டப்படுகிறதே...**

அவர்கள் எதிர்த்தரப்பில் இருக்கிறார்கள். பொதுவாக எதிர்த் தரப்பில் இருப்பவர்கள் அரசின் எல்லாத் திட்டங்களையும் எதிர்ப்பார்கள் என்கிற ஒரு மரபு இலங்கையில் இருக்கிறது. நாங்கள் என்னதான் நல்லது செய்தாலும் அவர்கள் விமர்சிப்பார்கள்.

யாழ்ப்பாணத்துக் கடைசி மன்னனின் சிலையைப் புனரமைப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிக்கு அவர்கள் எப்படி எதிர்வினையாற்றினார்கள் என்பதையே உதாரணமாக எடுத்துக் கொள்ளுங்கள். யாழ். மாநகர சபை அதனைப் புனரமைக்க விரும்பியது. நாங்கள் அந்தச் சிலையை முழுமையாக அழித்துவிட்டு புத்தர் சிலையுடன் சேர்த்து அதனை வைக்கப்போகிறோம் என்று கூட்டமைப்புக் கூறியது. இப்போது நாங்கள் அதனைப் புனரமைத்துவிட்டோம்; அது அழகாகவும் இருக்கிறது. அவர்களின் தேவையெல்லாம் பிரச்சினைகள் தீர்ந்துவிடக்கூடாது என்பதே.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தால் கிடைத்த சந்தர்ப்பத்தை யார் கெடுத்தது? இந்திய அரசா? அல்லது இலங்கை அரசா? இல்லை; அதனை நாசமாக்கியது இலங்கையின் தமிழ் அரசியல் தலைமைதான். புலிகள் அதனை நிராகரித்தார்கள்; ஈ.பி.ஆர்.எல்.எவ்

(26 ஆம் பக்கம் பார்க்க)

# விதியின் பயன்



நாம் எது நடக்கவேண்டும்' என்று ஆசைப்படுகிறேமோ. ஆனால் எது நடப்பதில்லை. நாம் 'இது நடக்கக்கூடாது' என்று ஆசைப்படுகிறோம். ஆனால் அது நடந்து விடுகிறது. இதற்கு எதைக் காரணமாகச் சொல் வது? அதைத்தான் சிலர் விதி என்று சொல்கிறார்கள்.

ஒரு சமயம் வைகுண்டத்தில் நாராயணனும் மகாலட்சுமியும் உயர்ந்த ஆன்மீகத் தத்துவங்களைப் பற்றிப் பேசிக்கொண்டு இருந்தனர். பூலோகத்தில் நடப்ப தெல்லாம் அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

அந்தச் சமயத்தில் பூலோகத்தில் ஒரு பிச்சைக்காரன் பிச்சை எடுத்துக்கொண்டிருந்தான். சாப்பாடு கிடைத்ததும் ஒரு தனி இடத்தில் அமர்ந்து கடவுளை நினைத்து, ''நாராயணா! நாராயணா!'' என்று சொல்லி அந்த உணவை இறைவனுக்கு நிவேதனம் செய்துவிட்டுச் சாப்பிட ஆரம்பித்தான்.

இதை வைகுண்டத்திலிருந்த மகாலட்சுமி பார்த்துவிட்டு நாராயணனிடம், ''அதோ பார்த்தீர்களா? உங்களுடைய பக்தன் தினமும் பிச்சையெடுத்துவரும் உணவை முதலில் உங்களுக்கு அர்ப்பணம் செய்துவிட்டுத்தான் சாப்பிடுகிறான். அப்படிப்பட்ட உங்களுடைய பக்தனை நீங்கள் பிச்சையெடுக்கும் நிலையில் வைத்திருக்கிறீர்களே? உங்களுக்கே இது நன்றாயிருக்கிறதா? அவனுக்குக் கொஞ்சம் வசதியை வழங்கக் கூடாதா?'' என்று கேட்டான்.

நாராயணன் புன்சிரிப்புடன், ''இவன் முற்பிறவியில் செல்வந்த னாகத்தான் இருந்தான். அப்படி இருந்தும் இவன் யாருக்கும் எதுவும் கொடுத்து உதவவில்லை. ஏழைகளுக்குத் தான தர்மம் எதுவும் செய்யவில்லை. இதனால்தான் இப்பிறவியில் இப்படிக் கஷ்டப்படுகிறான்.'' அது அவனது விதியின் பயன் என்று கூறி விளக்கினார்.

ஆனால் அவர் சொன்னத்த மகாலட்சுமி ஏற்றுக்கொள்ளவில்லை. ''நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? விதியாவது ஒன்றாவது; நாம் நினைத்தால் முடியாதது என்று ஒன்று இருக்கிறதா? இப்போது நான் அவனுக்கு உதவி செய்யப்போகிறேன்'' என்றார்.

''நீ என்ன செய்யப் போகிறாய்?'' என்று கேட்டார் நாராயணன்.

''அவனுக்கு கொஞ்சம் செல்வம் கொடுத்து அவனைக் கஷ்டத்திலிருந்து விடுவிக்கப் போகிறேன்'' என்றாள் மகாலட்சுமி. ''சரி! உன் விருப்பம், செய்து பார்'' என்றார் நாராயணர்.

உடனே மகாலட்சுமி, பூலோகத்தில் அந்தப் பிச்சைக்காரன் நடந்து வந்துகொண்டிருந்த வழியில் ஒரு பணமுடிப்பைப் போட்டாள். அதை அவன் எடுத்துக்கொள்ளட்டும் என்று நினைத் தாள் அவள். ஆனால் அந்நேரத்தில் அந்த பிச்சைக்காரன் என்ன செய்தான் தெரியுமா?

பார்வையில்லாதவர்கள் தெருவில் எப்படி நடந்து போகிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஓர் எண்ணம் அவனுக்கு அப்போது வந்தது. ஆதலால் அவன் பார்வையில்லாதவர்கள் மாதிரி கண்கள் இரண்டையும் நன்றாக மூடிக்கொண்டு தட்டுத் தடுமாறி நடக்க ஆரம்பித்தான்.

இரண்டு கண்களும் மூடி இருந்ததால் வழியில் இருந்த பணமுடிப்பு அவன் பார்வையில் படவில்லை. ஆகவே பாதையில் பணமுடிப்பு இருந்ததைக் கவனிக்காமலே அதைத் தாண்டிச் சென்றுவிட்டான்.

அதன் பிறகு கண்ணைத் திறந்தான். 'ஆகா... கண்ணில்லாதவன் மாதிரியே நடந்து விட்டோமே!' என்ற சந்தோஷத்திலேயே அவன் போய்விட்டான். அவன் பின்னால் ஒருவன் சாவகாசமாக வந்துகொண்டிருந்தான். அவன் கண்ணில் அந்தப் பணமுடிப்பு பட்டது. அதை எடுத்துக்கொண்டு அவன் சந்தோஷமாக நடக்க ஆரம்பித்தான்.

நடந்ததையெல்லாம் வைகுண்டத்திலிருந்த நாராயணனும் மகாலட்சுமியும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ''என்ன நடந்தது பார்த்தாயா? அந்தப் பக்தனைப் பணக்காரனாக்க வேண்டும் என்று துடித்தாயே... உன்னால் முடிந்ததா?'' என்று பகவான் கேட்டார்.

அதற்கு பின்தான் மகாலட்சுமியும், ''உண்மை தான் பிரபு; விதிப்படிதான் எல்லாம் நடக்கும் என்பதை இப்போது நான் ஒப்புக் கொள்கிறேன்!'' என்றாள்.

இந்தக் கதையை அறிவு பூர்வமாகக் கொஞ்சம் சிந்தித்துப் பார்ப்போம். 'ஒரு பக்தனைப் பணக்காரனாக்க வேண்டும்' என்று கடவுள் நினைத்தால் கூட அது முடியாது என்ற ஓர் உண்மை இந்தக் கதையில் அடங்கியிருக்கிறது. அப்படியானால் விதி யார் கையில் இருக்கிறது? மனிதனின் கையில்தான் உள்ளது.

அவன் நல்ல விதமாக நடந்து கொண்டால் விதியும் அவனுக்குச் சாதகமாக இருக்கும். அப்படி இல்லாவிட்டால் இந்தப் பிச்சைக்காரன் விடயத்தில் நடந்ததுபோல், கண் திறந்திருக்கவேண்டிய நேரத்தில் கண்ணை மூடியிருக்கவேண்டிய நிலை வந்துவிடும்.

கோ.சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பளை இரட்டைக்கரை அம்பாள் ஆலய கும்பாபிசேகம் இன்று இடம் பெறவுள்ளது. இதனை முன்னிட்டு ஆலய கோபுர கலசங்கள் வீதியுலாவாக நேற்று எடுத்து வரப்பட்டன.

# மக்களின் வாழ்வை சீர்குலைக்க ஒருசிலர் செயற்பட்டு வருகின்றனர்

## யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்

தென்மராட்சி,செப்.2

யாழ்.மாவட்ட மக்கள் கடந்த 25 வருடங்களுக்கு மேலாக பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து வந்தனர். கடந்த இரண்டு வருட காலமாக தமது வாழ்வாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பப் பாடுபட்டு வருகிறார்கள்.

இந்த நிலையில் இந்த மக்களின் வாழ்வாதாரத்தை சீர்குலைக்க ஒரு சிலர் செயற்பட்டு வருகின்றனர்.

கிறீஸ் பூதம் நடமாடுவதாக மக்களை அச்சமடைய வைத்து அந்த வேளையில் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

நாட்டின் சிவில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குப் பொலிஸாரே பொறுப்பு. தென்மராட்சி பிரதேசம் விஸ்தீரணம் கொண்ட பிரதேசமாகும். இங்கு அறுபது கிராம அலுவலர் பிரிவுகள் உள்ள போதிலும் நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன.

ஒவ்வொரு கிராமத்திலும் இடம்பெறும் குற்றச் செயல்களைத் தடுக்க பொலிஸார் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் இதனை மேற்கொள்வதில் நெருக்கடி நிலை உள்ளது.

கிராமங்கள் தோறும் சிவில் பாதுகாப்புக் குழுக்களைத் தெரிவு செய்வதன் மூலம் குற்றச் செயல்களைப் பெருமளவில் குறைக்க முடியும்.

அதற்கு அந்தப் பிரிவு மக்களின் ஒத்துழைப்பை பொலிஸார் முழுமையாக எதிர் பார்க்கின்றனர்.

இவ்வாறு சாவகச்சேரி நகர சபை கேட்போர் கூடத்தில் இடம் பெற்ற சிவில் பாதுகாப்புக் குழு அமைப்பது தொடர்பான விழிப் புணர்வுக் கூட்டத்தில் யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நெவில் பத்மதேவ தெரிவித்தார்.

இதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிராமத்தில் வதியும் மக்கள் ஒருவருடன் ஒருவர் அன்னியோன்யமாக பழகுபவர்கள். இதனால் அந்தக் கிராமத்துக்கு வரும் புதியவர்களை இனங் கண்டு கொள்ள வாய்ப்பு உள்ளது. அண்மையில் நடைபெறும் குற்றச் செயல்கள் ஏனைய மாவட்டங்களிலிருந்து வருவோரால் மேற்கொள்ளப் படுவதாக முறைப்பாடுகள் தெரிவிக்கப்படுகின்றன.

கிராம மட்டத்தில் தெரிவு செய்யப்படும் சிவில் பாதுகாப்புக்குழுவினர் கிராமத்துக்கு வரும் புதியவர்களை சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடுபவர்களை இனங்கண்டு பொலிஸாருக்கு அறிவித்தால் பொலிஸார் அந்த இடத்துக்கு வந்து உடன் நடவடிக்கைகளை மேற்கொள்வர்.

சிவில் பாதுகாப்பு குழுவில் இடம்பெறுவோர் பொலிஸாருடன் இணைந்து ரோந்து நடவடிக்கைகளிலும் ஈடுபடலாம். குழுவில் அங்கத்தவர்களுக்கு விசேட அடையாள அட்டைகள் வழங்கப்படும். இந்தக் குழு உறுப்பினர்கள் பொலிஸாருக்கும் பொது மக்களுக்குமிடையில் ஓர் இணைப்புப் பாலமாக செயற்பட்டு அந்தந்தப் பகுதிகளில் ஏற்படும் குற்றச் செயல்களைத் தடுக்கலாம்.

அண்மைக் கால நிகழ்வுகள் இந்த மக்களின் மனோநிலையில் பாதிப்பை மேலும் அதிகரிக்கச் செய்து விடும். இவ்வாறான பாதிப்புகளை ஏற்படுத்த வென ஒரு சாரார் முயன்று வருகின்றனர். இந்த நோக்கை நிறைவேற்ற முடியாமல் தடுக்க அனைத்து மக்களும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும். - என்றார். (ம-207)

# எழுத்தாளர்களின் ஒவ்வொரு படைப்பும் சமூகப் பிரச்சினைகளை வெளிக்காட்டும்

## ஓய்வு நிலை உத்தியோகத்தர் உரை

யாழ்ப்பாணம், செப்.02

எழுத்தாளர்களின் ஒவ்வொரு படைப்புகளும் பிரசுரிக்கப்படுவதன் மூலம் எழுத் தாளர் மேலும் ஊக்குவிக்கப் படுவார்கள். அத்துடன் சமூகத்தில் வெளிக்கொணரப்படாத பல்வேறு பிரச்சினைகளை தெரியப்படுத்த முடியும்.

இவ்வாறு தெரிவித்தார் ஓய்வுநிலை உத்தியோகத்தர் வே.சிவராசா.

யாழ். வலய முறைசாரக் கல்விப் பணிப்பாளர் மு.இராசநாயகம் தலைமையில் அண்மையில் யாழ். ஆரியகுளம் உயர் கலைக் கல்லூரியில் நடைபெற்ற "புலமைத்தத்துவ மரபில் பேராசிரியர் சிவத்தம்பியின் பங்கும் பணியும்" எனும் தலைப்பில் உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது தெரிவித்ததாவது:

தமிழ்த்தேசியம் என்பதில் பேராசிரியர் சிவத்தம்பி தெளிவாக இருந்து செயற்பட்டார். ஓர் இனத்துக்கு உரிய தனித்துவம் என்னும் அடிப்படையில் நியாயம் கிடைக்க வேண்டும் என்றே பேராசிரியர் சிந்தித்தார்.

இவரின் எழுத்துக்கள் அதிகம் அவ்வாறான கருத்துக்களையே முன்வைத்து இருந்தன.

இவரின் இவ்வாறான கருத்துக்கள் யாவும் பத்திரிகைகளில் குறையாகவே பிரசுரிக்கப்பட்டு இருந்தன.

இதனைப் போல் சமூகத்தின் கருத்துக்களை முன் வைக்கும் எழுத்தாளர்களின் படைப்புகள் சரியாக பத்திரிகை களில் பிரசுரிக்கப்படவேண்டும்.

இது ஓர் எழுத்துச் சுதந்திரத்தையும் மக்களின் பிரதிபலிப்பையும் எடுத்துக் காட்டும்.- என்றார். (ம-160-313)

# விளையாட்டு விதிமுறைகளை மீறி போட்டிகள் நடத்தப்படமாட்டாது

## ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகத் தலைவர்

யாழ்ப்பாணம், செப். 02

விளையாட்டு விதிமுறைகளை மீறி போட்டிகளை நடத்த நாம் தயாராக இல்லை என்று தெரிவித்துள்ளார் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத் தலைவர் சண் தயாளன்.

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்திய மட்டுப் படுத்திய ஓவர்களுக்கான கிரிக்கெட் போட்டியின் பரிசளிப்பு நிகழ்வுகள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் தலைமை உரை நிகழ்த்தியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

பாரபட்சம் பாராது விதி முறைக்கு அமைவாகவே போட்டிகளை நாம் நடத்தி வருகின்றோம்.

சில அணிகள் போட்டிகளைக் குழப்பும் விதமாகவே செயற்பட்டு வருகின்றன. இவ்வாறான அணிகளை எமது போட்டிகளில் உள்வாங்குவதில்லை. நாம் எந்தவொரு கழகத்துக்கும் எதிரானவர்களும் அல்ல. பழிவாங்கும் எண்ணம் கொண்டவர்களும் அல்ல. விளையாட்டு ஒழுக்கம் நேர்மை மிக்கதாகும். அதனை அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும் என்றே வேண்டி நிற்கின்றோம்.

அண்மையில் இசுறுபாய வில் இடம்பெற்ற கூட்டத்தின் அறிக்கையில் ஏனையோருடம் ஒன்றில் விளையாட்டின் முக்கியத்துவமும் சுகா தார செயல்பாடுகள் சம்பந்தமாக வும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

கழகங்களிடையே இன்று மத்தியஸ்தர்களின் தீர்ப்பை மதிக்கும் தன்மை குறைவடைந்து செல்கின்றது.

இத்தகைய நிலை மைகளில் கழகங்கள் மாற்றத்தைக் கொண்டு வரவேண்டும். மத்தியஸ்தர்களின் தீர்ப்புகளை மதிக்க வேண்டும்.- என்றார். (ம-86)

# இளைஞர் விருது போட்டிகள்

யாழ்ப்பாணம், செப்.02

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ். மாவட்ட அலுவலகத்தால் 2011 ஆம் ஆண்டுக்கான மாவட்ட மட்ட இளைஞர் விருதுப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இந்தப் போட்டிகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். சன்மார்க்க மகாவித்தியாலய மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளன.

போட்டிக்கு விண்ணப்பித்தவர்ளுக்கான கடிதங்கள் தபாலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் அழைப்புக் கடிதங்கள் கிடைக்கப்பெறாதவர்கள் நேரடியாக வருகைதர முடியும் என்றும் மன்ற உதவி இயக்குநர் ரி.ஈஸ்வரராஜா தெரிவித்துள்ளார். (ம)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், செப்.2

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தின்வருடாந்த பெருந்திருவிழாவின் 5 ஆம் நாள்திருவிழா வில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் விசேட சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

இதில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் 'செஞ்சொற்புனை மாலை' எனும் தலைப்பில் சொற்பொழிவை நிகழ்த்தவுள்ளார். (ம-313)

# இடமாற்றங்கள்

யாழ்ப்பாணம், செப்.2

மக்கள் வங்கியின் வல்வெட்டித்துறைக் கிளைமுகாமையாளர், பருத்தித்துறைக் கிளை முகாமையாளர் ஆகியோர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

வங்கியின் வல்வெட்டித் துறைக் கிளை முகாமையாளர் பி.கிருஷ்ணானந்தன் பருத்தித்துறைக் கிளைக்கும் பருத்தித்துறைக் கிளை முகாமையாளர் மு. சிவநேசன் பிராந்திய அலுவலகத்துக்கும் இடமாற்றம் பெற்றுள்ளனர்.

வல்வெட்டித்துறைக் கிளையில் பிரதி முகாமையாளராகக் கடமையாற்றிய திருமதி றொசட் மெலானி தவநாயகம் இங்கு முகாமையாளராகப் பதவி உயர்வு பெறுகிறார்.

எதிர்வரும் 5 ஆம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் இது அமையவுள்ளது. (ம)

# புதிய நியமனம்

யாழ்ப்பாணம், செப்.2

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளராக திருமதி நளாயினி இன்பராஜ் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

வடமாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தின் உதவிச் செயலாளராக பதில் கடமையாற்றி வந்த திருமதி நளாயினி இன்பராஜ் நேற்று முதல் வடமாகாண சமூக சேவைகள் திணைக்கப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (ம-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களை உலுக்கும் கிறீஸ் பூத நாடகம்

கோப்பாய் சண்முகம்
கதையோடு செய்தி

விடுதலைப் புலிகள் ஆரம்பித்த யுத்தத்தில் இருந்து மூன்று தசாப்த காலம் எங்கட தமிழ்ச் சனம் ஆமிக்காரனிட்டை வாங்கின அடி இன்னும் குறைவில்லாமல் தொடர்ந்த வண்ணமே இருக்குது பாருங்கோ. ஆமிக்காரனும் தமிழ் மக்களை அடக்கி ஆள வேண்டும் என்று நினைக்கிறான். அதுவும் முடியாமல் போகத்தான் எங்கட சனத்துக்கு உந்த அடி அடிக்கிறான். இதை யார் கேட்க முடியும். தமிழ் மக்களுக்கு ஓர் அரசு இல்லாத போது மாற்றான் அரசான சிங்கள அரசால் என்றைக்குமே தமிழ் மக்களுக்குப் பிரச்சினைதான். அதுதான் இப்பொழுது கிளம்பி இருக்கும் கிறீஸ் பூதம் பாருங்கோ. வடக்கு, கிழக்கு பரந்து எல்லா இடமும் கிறீஸ் பூத விவகாரம் தொடர்ந்த வண்ணம் இருக்குது கிறீஸ்பூதம் ஆமிப் பூதந்தான் என்று நேரடியாகக் கண்ட சனம் சொல்லுது. அப்படியென்றால் தங்குதடையின்றி தாராளமாக நடக்கும் தானே. தடக்கி விழுகிற இடமெல்லாம் ஆமிக்காரன் நிக்கேக்க இதை யார் செய்ய முடியும். கிறீஸ் பூதம் நடமாடுது என்று எங்கட சனம் அலேட்டானால் காணும், உடனே அந்தப் பகுதிக்கு குவிந்து வரும் ஆமிக்காரன்கள் கிறீஸ் பூதங்களை சனத்திடம் இருந்து காப்பாற்றவல்லவோ வாறாங்கள்! கிறீஸ் பூதத்தைப் பிடித்தால் அடிக்க வேண்டாம் தங்களிடம் ஒப்படைக்குமாறு சனத்தை ஆமிக்காரன் மிரட்டி வருகிறான்.

கிறீஸ் பூதத்தை சனம் பிடித்தால் ஏதாவது சாட்டுச் சொல்லி சனத்திடம் இருந்து கிறீஸ் பூதத்தை ஆமிக்காரன்கள் காப்பாற்றி விடுகிறான்கள் எல்லோ. பிறகு எப்படி இந்த கிறீஸ் பூத விவகாரத்தை இல்லாமல் செய்ய முடியும். கடந்த வாரம் திங்கட்கிழமை 22 ஆம் திகதி இரவு 11 மணி இருக்கும் நித்திரையில் இருந்தேன். எனது போன் அடித்துக் கொண்டிருந்தது. நித்திரையில் இருந்த நான் எழும்ப முடியாமல் அலுப்பில் விழித்துவிட்டு மீண்டும் படுத்துவிட்டேன். எனது கான்போன் நிற்காமல் தொடர்ந்து அடித்துக் கொண்டிருந்தது. யாரடா இந்த நேரத்தில் எனக்குப் போன் எடுப்பது என்று தெரியாமல் சலிப்போடு ஒருவாறு எழும்பி எனது கான்போன் வைத்திருக்கும் மேசைக்கு அருகில் சென்று போனை எடுத்துப் பார்த்தேன். எனது நண்பன் டொமினிக். போனினை ஒன் பண்ணினேன். ஹலோ... சண்முகம் நான்தான்டா டொமினிக் என்றான். ஓ.. தெரியும் என்ன சொல்லன் என்றேன். கிறீஸ் பூதம் வந்து சனம் துரத்திக் கொண்டு போனதால ஆமிக்காரன் எல்லோருக்கும் அடிக்கிறான். என்ன நடந்தது என்று நான் கேட்க சிறிது நேரம் அமைதியானவன் மீண்டும் கதைக்க ஆரம்பித்தான். இரவு 9 மணி இருக்கும் கிறீஸ் மனிதன் அங்குமிங்கும் நடமாட ஆரம்பித்தான். இதனைப் பார்த்துக் கொண்டு நிண்ட சனம் கிறீஸ் மனிதன் நிற்கிறான் என்ற செய்தியை எல்லோருக்கும் தெரியப்படுத்தினார்கள். அவ்வளவுதான் சனம் எல்லாம் கிறீஸ் மனிதனை துரத்த ஆரம்பித்ததுகள். கிறீஸ் பூதமும் ஓட ஆரம்பித்தது. நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்துக்குள் நுழைந்து விட்டது கிறீஸ் பூதம். பள்ளிக்கூடத்தை வளைத்துக் கொண்டு நின்ற சனம் அங்குமிங்கும் ஓடிஓடி தேடிப்பார்த்துக் கொண்டு நிற்க பாடசாலைக்குள் ஒழிந்திருந்த கிறீஸ் பூதம் மதிலால் ஏறி விழுந்து மீண்டும் ஓட ஆரம்பித்தான். சனம் விட்டுக் கலைத்தது. நீல ரீசேட்டும், நீல ரைற் சூட்டும் சப்பாத்தும் போட்டிருந்த ஒருவன் கிறீஸ் பூதமாக ஓடி பக்கத்தில் உள்ள 'காம்'புக்குள்ளே ஒழிந்துவிட்டான். எங்கட சனம் விடுமோ ஆமிக்காரனின் 'காம்'புக்குள்ளேயும் போய் விட்டுதுகள். ஆமிக்காரன் அவனை உள்ளே மறைத்து வைத்துக் கொண்டு அங்கு துரத்திச் சென்ற ஊர் மக்களை திரும்பிப் போகும்படி மிரட்டினான். சனம் 'காம்'புக்குள்ளே மறைந்திருக்கும் அவனை வெளியே கொண்டு வாருங்கள் என்று கத்தினதுகள். ஆமிக்காரனோ மீண்டும் மீண்டும் சனத்தை வெளியே போகும்படி மிரட்டினான். சனம் போகாமல் அங்கேயே நின்றதால் மேல் வெடி வைத்து சனத்தைத் துரத்த வெளிக்கிட்டான். சனம் ஆமிக்காரனின் மேல் வெடிக்கும் பயப்படாமல் அங்கேயே நின்றது. அந்தக் காம்பில் பதுங்கி இருந்தவனை ஆமிக்காரன்கள் காப்பாற்றி ஒரு இராணுவ வாகனத்தில் ஏற்றிச் சென்றனர். அந்த வாகனத்தை துரத்திய போதும் அந்த வாகனத்தில் இருந்து ஹயஸ் வாகனத்துக்கு மாற்றி அவனை ஏற்றிச் சென்றுவிட்டனர். அதன் பின் இங்கே நின்ற சனம் அல் லோல கல்லோலப்பட்டது. ஆமிக்காரன்கள் றக்கிலும் பொலிஸ்காரன்கள் ஜீப்பிலும் வந்து இறங்கினாங்கள் அவ்வளவுதாண்டா. அங்கு நின்ற சனத்துக்கு விழுந்தது மரண அடி. சனம் எல்லாம் தலை தெறிக்க சிதறி அடித்துக் கொண்டு ஓட ஆரம்பித்தது. ஓடித் தங்களுடைய வீடுகளுக்குப் போய் கதவைச் சாத்திக் கொண்டதுகள். நானும் வீட்டுக்கு ஓடி வந்திட்டன். ஒவ்வொரு வீடுகளுக்குள்ளும் ஆமி போறது சனத்தின்ர குழறல் சத்தத்தில் தெரிகிறது. என்னடா என்ன நடக்குது உங்கே என்றேன். ஆமிக்காரன்கள் பொம்பிளைகளையும் அடிக்கிறான்றா என்றவன் ஆமிக்காரன் பக்கத்து வீட்டுக் கதவை உடைக்கிறான் என்று சொன்ன ஒரு செக்கனில் அவனது போன் திடீரெனக் கட் ஆகிறது. மீண்டும் அவனுக்குப் போன் எடுத்தேன். தொடர்பு கொள்ள முடியவில்லை. மீண்டும் படுக்கை அறைக்குப் போனேன். இரவு 12 மணி இருக்கும். ஆனால் நித்திரை வரவில்லை. விடியும் மட்டும் விழித்துக் கொண்டு இருந்தேன். காலை 6மணிக்கு மீண்டும் எனது போன் அடிக்கிறது. அவன்தான். உடனே 'ஒன்' பண்ணிக் கதைக்க ஆரம்பித்தேன். எங்கட வீட்டிலேயும் ஆமிக்காரன் வந்திட்டான்ரா. பக்கத்து வீட்டிலே கதவு உடைக்கிற சத்தம் கேட்டு எங்களுடைய வீட்டுக்குப் பின் பக்கமாக 4,5 வீடு தள்ளிப்போய் ஒழிந்து இருந்து விட்டு இப்பதான் வந்தனான். எனது வீட்டுக் கதவு, அலுமாரி எல்லாம் உடைத்துப் போட்டிருக்குதடா. பிறகு எடுக்கிறன் என்று சொல்லி விட்டுப் போனை கட் பண்ணிவிட்டான். அவனது போன் கோல் மீண்டும் முற்பகல் 10 மணிக்கு வருகிறது. டேய் சனங்களை ஆமிக்காரன் ஆண், பெண் என்று பாராமல் அடித்துள்ளான். கனபேரை அடித்து இழுத்துக் கொண்டு போய்விட்டான். எல்லோரையும் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி விட்டுத்தான் உன்னுடன் கதைக்கிறன் என்றவன் கை, கால் எழாமல் நடக்க முடியாத ஒருவருக்கும், இரண்டு கண்ணும் தெரியாத ஒருவனுக்கும் அடித்திருக்கிறான்களடா. வந்து பாரடா. அதுமட்டுமல்ல பலபேரை நிர்வாணப்படுத்தி விட்டும் அடித்திருக்கிறான். முள்ளிவாய்க்கால்தான் நினைவுக்கு வருகிறது. பல பெண்களுக்கு என்ன நடந்தது என்று வெளியே சொல்ல வெக்கப்படுகிறார்கள். நாசமாய்ப் போவார் அக்கா, தங்கச்சியு டன் பிறக்கவில்லை போலும் என்று சொன்னவன் பிறகு எடுக்கிறன் என்று சொல்லி விட்டுப் போனைத் துண்டித்துவிட்டான்.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சமய சந்நிதிகளில்

நவாலி, செப்.2

ஆனைக்கோட்டை ஸ்ரீ வரதவிக்ன விநாயகர் சம்பந்தப்பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா நாளை சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் இந்தத் திருவிழாவில் எதிர்வரும் 11 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.(ம-100)

* * *

நவாலி, செப்.2

நவாலி அந்திரான் முருகமூர்த்தி ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா நாளை சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும். எதிர்வரும் 10 ஆம் திகதி சப்பறத் திருவிழாவும் 11 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் 12 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ம-100)

* * *

காரைநகர், செப்.2

காரைநகர் புதுவீதி கிழவன்காடு கந்தசுவாமி ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. திருவிழாக் காலங்களில் தினமும் பகல் விசேட அபிசேக ஆராதனைகளும் மாலை 6 மணிமுதல் விசேட பூஜை மற்றும் வசந்தமண்டபப் பூசையை அடுத்து சுவாமி திரு வீதியுலா வருதலும் இடம்பெற்று வருகின்றது.

இந்தத் திருவிழாக்களை சிவஸ்ரீ ஆ.சங்கர நாராயண சிவாச்சாரியார் தலைமையேற்று நடத்தி வருகின்றார். (ம-250)

## கரவெட்டி மத்தியஸ்தர் சபை ஞாயிறு அமர்வு பிற்போடப்பட்டது

வடமராட்சி, செப்.2

கரவெட்டிப் பிரதேச மத்தியஸ்தர் சபையின் அமர்வுகள் தவிர்க்க முடியாத காரணத்தால் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறமாட்டாது என்ற மத்தியஸ்தர் சபையின் தலைவர் சி.நற்குணசிங்கம் அறிவித்துள்ளார்.

மத்தியஸ்தர் உறுப்பினர்கள் பயிற்சி வகுப்புகளுக்கு செல்லவுள்ளதால் இந்த அமர்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். இந்த மத்தியஸ்தர் சபையின் அமர்வுகள் யாவும் எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அமர்வுகளின் போது எடுத்துக் கொள்ளப்படும் என்று மேலும் தெரிவித்துள்ளார். (எ-236)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 16 07 1930

இறப்பு 12 09 2010

### அமரர் சின்னப்பு வெள்ளைக்குட்டி

அன்புக்கும் பாசத்துக்கும் பண்புக்கும்
உறைவிடமாய் வாழ்ந்த எம் குலவிளக்கே
எமைவிட்டு எங்கு சென்றீர் தேடுகின்றோம்
ஆண்டொன்று போனாலும் இவ் அண்டம்
உள்ளவரை வாழும் உங்கள் நினைவுகள்........

அண்ணாசிலையடி,
கரணவாய்.

குடும்பத்தினர்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

"கடந்த 03.08.2011 அன்று இறைபதமெய்திய எமது சங்க உறுப்பினர் முருகேசு அருட்செல்வம் அவர்களின் தாயார் அமரர் முருகேசு தில்லைநாயகம் அவர்களின் 31 ஆம் நாள் நினைவஞ்சலி இன்று (02.09.2011) வெள்ளிக்கிழமை நடைபெற இருக்கின்றது. அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்."

வடபிராந்திய ஊழியர் தொழிற்சங்கம்,
தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, யாழ்ப்பாணம்.

திருமண வைபவங்களுக்கான
கார் வாடகைக்கு உண்டு



A/C + Non A/C
தொடர்பு : 0776544520
(முற்பதிவுகள் மட்டும்)

வீடு வாடகைக்கு தேவை

திருநெல்வேலிக்கும் யாழ். நகருக்கும் இடையில் பிரதான வீதியில் வாகனத் தரிப்பிட வசதியுடன் கூடிய வீடு வாடகைக்கு உடனடியாகத் தேவைப்படுகின்றது. தோ.பே: 0774109151 T.ஜிபால்

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த (04.08.2011) வியாழக்கிழமை
சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

### திருமதி குமரேசு அமராவதி (சின்னம்மா)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று [01.09.2011] வியாழக்கிழமை காலை 8 மணியளவில் புங்குடுதீவு புனித தீர்த்தக்கரையில் இடம் பெற்றன. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை [03.09.2011] சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறவுள்ளன. அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

10 ஆம் வட்டாரம், புங்குடுதீவு.

குடும்பத்தினர்.

## மூன்றாம் ஆண்டு நினைவினிலே...



### திருமதி கோசலாராணி திரிலோகஈஸ்வரா

திதி: பூர்வபக்க பஞ்சமி (02.09.2011)

மலர்வு:
12.08.1950

உதிர்வு:
19.09.2008

மூன்றாண்டென்ன மூவாயிரம் ஆண்டானாலும்
ஆறாது உங்கள் நினைவலைகள்
நினைவுகள்தான் எம்மிடம்
நித்திலத்தில் ஆண்டவனின் சந்நிதானத்திலிருந்து
மைந்தனின் திருமணம் கண்டிருப்பாய்
அறுகரிசியும் தூவி ஆசீர்வதித்திருப்பாய்
ஆறாத்துயிலில் கலந்திருக்கும் உங்களுக்கு
கண்ணீர்த் துளிகளினாலே ஆராதனைகள்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இல.24, புறாடி ஒழுங்கை,
அரியாலை, யாழ்ப்பாணம்.

கணவர், மகன்,
மருமகள், உறவினர்கள்.

NIBM
BUILDING COMPETENCIES

அரச சான்றிதழுடனான
கணினி
முகாமைத்துவ
ஆங்கில
சிங்கள
கற்கை நெறிகள்

அடுத்த பிரிவுகள்
ஆரம்பம் 11.09.2011

After A/L

பல்கலைக்கழக மானியங்கள்
ஆணைக்குழுவின் (UGC)
அங்கீகாரம் பெற்ற

தேசிய வியாபார
முகாமை நிறுவனம்



077 071 6974
021 222 0360

இல. 40 கல்லூரி வீதி
(யாழ். இந்துக்கல்லூரி மைதானம் முன்பாக)
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பக் கல்வியை புகட்டுவதில் முன்னுதாரணமாக திகழும் மானிப்பாய் சோதி வேம்படி பாடசாலை




மானிப்பாய் நகரின் ஆரம்பக்கல்வி மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்கு சிறந்ததொரு பாடசாலையாக விளங்குவது யாழ். மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாசாலை. மானிப்பாய் நகரின் மையத்தில் சோதி வேம்படி வீதியில் அமைந்துள்ள இந்தப் பாடசாலை 1900 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் எஸ்.தம்பிப் பிள்ளை என்பரால் ஸ்தாபிக்கப்பட்டது.

மானிப்பாய் நகரில் அதிகமான பெரிய பாடசாலைகள் இருந்தபோதும் பிள்ளைகளின் ஆரம்பக்கல்வி இந்தப் பாடசாலையிலேயே ஆரம்பிக்கப்பட வேண்டுமென இந்தப்பகுதி மக்கள் விரும்பினார்கள்.

பிள்ளைகளின் ஆரம்பக்கல்வியே அவர்களின் மேலதிக கற்றல் நடவடிக்கைகளை மேன்மையடையச் செய்கின்றது.இதன் அடிப்படையில் ஆரம்பக்கல்வியை சிறார்கள் சிறந்த முறையில் பெற்றுக் கொள்வதற்கு இந்தப் பாடசாலை முன்னுதாரணமாக விளங்குகின்றது. மானிப்பாய்க் கிராமத்தில் அதிகளவான கல்விமான்களை உருவாக்கிய பெருமை இந்தப் பாடசாலையையே சாரும்.

1900 ஆம் ஆண்டு பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட போது பாடசாலையின் முதல் அதிபராக எஸ்.வைத்திலிங்கம் கடமையாற்றினார். இவர் அதிபராகப் பொறுப்பேற்றுக் கொண்டபோது 32 மாணவர்கள் இந்தப் பாடசாலையில் அனுமதி பெற்றுக் கல்வி பயின்றார்கள்.

ஆண்களும்,பெண்களும் இணைந்த கலவன் பாடசாலையாக விளங்கும் இந்தப் பாடசாலை மானிப்பாய் நகரின் பிரதான வீதியில் அமைந்திருப்பதால் அதிகமானவர்கள் தமது பிள்ளைகளை இந்தப் பாடசாலையிலேயே சேர்க்க விரும்பினார்கள். மாணவர்களின் எண்ணிக்கைகள் குறைவாக இருந்தபோதும் அதிபரதும், ஆசிரியர்களினதும் சிறந்த வழி காட்டல்கள் பாடசாலையை மென்மேலும் தரமுயர்த்த ஊன்றுகோலாக இருந்தன.

சண்டிலிப்பாய்க் கல்விக்கோட்டத்திலேயே புலமைப் பரிசில் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெறுகின்ற பாடசாலையாக இந்தப் பாடசாலை விளங்குவது இந்தப் பாடசாலையின் வளர்ச்சியை எடுத்துக்காட்டுகின்றது. 2000 ஆம் ஆண்டு 172 மாணவர்கள் இந்தப் பாடசாலையில் கல்வி பயின்றார்கள். சிறிய பாடசாலையாக இருந்தாலும் இந்தப் பாடசாலையில் கற்றல் நடவடிக்கைகளும் இணைப் பாடவிதான செற்பாடுகளும் மேலோங்கிக் காணப்படுவதால் அதிகமான பெற்றோர்கள் இந்தப் பாடசாலையைத் தமது பிள்ளைகளின் கற்றல் நடவடிக்கைகளுக்கு ஏற்ற பாடசாலையாகத் தேர்ந் தெடுத்தார்கள்.

சோதி வேம்படிப் பாடசாலை புலமைப் பரிசில் பரீட்சைக்குப் பெயர் போன பாடசாலையாக விளங்குவதே மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிப்புக்குக் காரணமாக அமைகின்றது. மானிப்பாய்ப் பிரதேசம் மட்டும் அல்லாமல் சண்டிலிப்பாய், நவாலி, ஆனைக்கோட்டை, சுதுமலை, சங்கானை, உடுவில், சங்குவேலி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த சிறார்களும் இந்தப் பாடசாலையிலேயே கல்வி பயின்று வருகின்றார்கள்.

2000 ஆம் ஆண்டு 172 மாணவர்கள் கற்றபோது 7 ஆசிரியர்கள் கடமையில் இருந்தார்கள். மாணவர் தொகைக்கேற்ப 26 மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய போது 03 மாணவர்கள் புலமைபரிசில் பரீட்சையில் சித்தியடைந்தார்கள்.இந்தப் பாடசாலையில் இருந்து தரம்-06 இற்காக வெளியேறும் மாணவர்கள் பூரணமான எழுத்தறிவுடன் வெளியேறி ஏனைய உயர்தரப் பாடசாலைகளில் தமது கற்றலைத் தொடர்கிறார்கள்.

தரம் 01 முதல் தரம்-05 வரையான இந்தப் பாடசாலையில் தரம்-05 இற்கான முழுமையான கற்றல்களை தரம்-01, தரம்-02, தரம்-03, தரம்-04 இலேயே. வழங்கி சிறந்த மாணவர்களை உருவாக்கிய உரிமை பாடசாலைச் சமூகத்தையே சாரும். பாடசாலை நேரம் மட்டுமல்லாது மேலதிக நேரங்களையும் பயன்படுத்தி மாணவர்களின் கற்றலுக்கு சிறந்த ஊக்கங்களை அதிபரும் ஆசிரியர்களும் வழங்கி வருகின்றார்கள்.

2001 ஆம் ஆண்டு 186 மாணவர்களின் தொகை அதிகரித்தது. இதன் போது 33 மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றினார்கள். அவர்களில் 11 மாணவர்கள் கூடுதலான சித்திகளைப் பெற்று பாடசாலை சமூகத்திற்கே பெருமை தேடிக் கொடுத்தார்கள்.

இந்த அதிகரிப்பான சித்தி அனைவரது கவனத்தையும் திசை திருப்பியது. ஏழை மாணவர்களில் இருந்து வசதி படைத்தவர்கள் வரை மேற்படி பாடசாலையில் அனுமதி பெறுவதற்குப் போட்டி போட்டார்கள். இங்கு அனுமதிப் பெறுவதற்கு அதிகமானோர் விரும்பினாலும் பாடசாலையின் வளப்பற்றாக்குறையால் 200 மேற்பட்ட மாணவர்கள் இந்தப் பாடசாலையில் கல்வி கற்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது.

2002 ஆம் ஆண்டு 181 மாணவர்களும், 2003 ஆம் ஆண்டு 192 மாணவர்களும், 2004 ஆம் ஆண்டு 183 மாணவர்களும் என மாணவர்களின் தொகை அதிகரித்துக்கொண்டே சென்றது. 2004 ஆம் ஆண்டு மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பைக் கருத்தில் கொண்டு பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் ஒத்துழைப்புடன் தி.அருட்பிரகாச பிள்ளை என்பவரால் பாடசாலை முற்று முழுதாக இடிக்கப்பட்டு புதிய தோற்றத்துடன் இரண்டு மாடிக் கட்டடம் கொண்டதாக பாட சாலை அமைக்கப் பட்டது.

பாடசாலையின் கட்டட வளர்ச்சிக்கு மானிப்பாய் பிரதேசத்தை சேர்ந்த அதிகமான சமூக சேவையாளர்கள் ஈடுபாடு காட்டினார்கள்.

2004 ஆம் ஆண்டு அ.நடராஜா அதிபராக இருந்த காலத்தில் சிறந்த வளத்துடன் கூடிய பாடசாலையாக யாழ்.மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாலயம் திகழ்ந்தது.

2004 ஆம் ஆண்டு 40 மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தேற்றினார்கள். இந்தப் பரீட்சையில் 12 மாணவர்கள் சித்தியடைந்தார்கள். 2008 ஆம் ஆண்டு தற்போதைய பாடசாலையின் அதிபராக இருக்கும் திருமதி சத்தியகுமாரி சிவக்குமார் பாடசாலையின் அதிபராகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

திருமதி சத்தியகுமாரி சிவக்குமார் பாடசாலையின் அதிபராகப் பொறுப்பேற்றுக் கொண்டபோது 172 மாணவர்கள் இந்தப் பாடசாலையில் கல்வி கற்று வந்தார்கள். நிரந்தரமான ஏழு ஆசிரியர்கள் தமது சேவையை இந்தப் பாடசாலைக்கு வழங்கி வருகின்றனர்கள். அந்த வரிசையில் திருமதி கணேசலிங்கம், திருமதி.செல்வக்குமாரி சுப்பிரமணியம், திருமதி புஸ்பவதி முத்துலிங்கம், திருமதிகமலாதேவி சத்தியசீலன், திருமதி நந்தராஜா விஜயகுமார், திருமதி தர்சினி ஸ்ரீ ரங்கநாதன், திருமதி ரெஜினா மேரி ஆகியோர் இந்தப் பாடசாலையில் ஆசிரியர்களாகவும் கடமையாற்றி வருகின்றார்கள்.

இந்த ஆசிரியர்களினதும் அதிபரினதும் ஒன்றிணைந்த செயற்பாட்டால் மழலைக் குடும்பமாக காட்சி தருகின்றது மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாலயம். இந்தப் பாடசாலையின் வளர்ச்சியில் அக்கறை கொண்ட மானிப்பாயைச் சேர்ந்த வர்த்தக நிறுவனங்கள் பலவும் உதவிகளை வழங்கின. மின் காற்றாடி, அலுமாரி ஏனைய பாடசாலைக்குத் தேவையான அடிப்படைப் பாவனைப் பொருள்களை அன்பளிப்பாக வழங்கிய பெருமை மானிப்பாய் வர்த்தக நிறுவனங்களையே சாரும்.

**நிஸா**

தற்போதைய நவீன சூழ்நிலைக்கேற்ப ஆரம்பத்திலேயே மாணவர்கள் கணினி அறிவைப் பெறவேண்டும். எனும் நோக்கில் கணினிகள் பாடசாலைக்கு வழங்கப்பட்டது.இதன் மூலம் கணினிக் கல்வியை மாணவர்களுக்கு உரிய முறையில் ஆசிரியர் வழங்கி வருகின்றார்கள்.

(தொடரும்)


## கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில் விசேட அறிவித்தல்

கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயிலதும் மற்றும் அங்கு எழுந்தருளி இருக்கும் மூர்த்திகளினது பெயர்களில் எழுதப்பட்ட ஆதனங் களினதும் புதிய குத்தகைப் பதிவு சம்பந்த மானது.

மேற்படி ஆலயத்துக்குச் சொந்தமான வயல், தோட்டக் காணிகளை குத்தகைக்கு செய்பவர்களின் குத்தகைகள் அனைத்தும் 28.02.2011 ஆம் திகதியுடன் முடிவடைந்தபடியால் நாளை (03.09.2011) சனிக்கிழமை காலை 8 மணிக்கு மேற்படி ஆலய கோபுர வாசலில் குத்தகை எழுதப்படும். 2011 ஆம் ஆண்டின் புதிய குத்தகைக்கு அமைவாக கைதடி கமநல சேவை நிலையத்தின் நெற்காணி இடாப்பில் பதிவு செய்து உரமானியமும் வழங்கு வார்கள். எனவே மேற்படி ஆலயத்துக்கு சொந்தமான சகல காணிகளையும் குத்தகைக்குச் செய்வோர் தவறாது குறிப்பிட்ட திகதியில் பதிவு செய்து கொள்ளவும்.

**நம்பிக்கைப் பொறுப்பாளர் பரிபாலனசபை,**
**கைதடி வீரகத்திப் பிள்ளையார்**
**முதலாய கோயில்கள், கைதடி.**
**செயலாளர்.**





# திருமண அழைப்பு



அன்புடையீர்!

நிகழும் சுபமங்களகரமான கர வருஷம் ஆவணித்திங்கள் 16 ஆம் நாள் இன்று (02.09.2011) வெள்ளிக்கிழமை முற்பகல் 09.14 மணி தொடக்கம் 10.26 மணிவரையுள்ள துலாலக்கினமும் பூர்வ பஞ்சமித் திதியும், பிராம்ய யோகமும் கௌலவ கரணமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்,

திரு.திருமதி வ.துரைராசா பரமேஸ்வரி
தம்பதிகளின் கனிஷ்ட புத்திரன்
**தவசீலன் (தவம்)** அவர்களுக்கு



திரு.திருமதி செ.ஜெகநாதன் தவமணிதேவி
தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரி
**கார்த்திகா** அவர்களை

எல்லாம் வல்ல இறைவன் திருவருள் துணைகொண்டு கோப்பாய் கந்தசுவாமி கோயிலில் திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்புபசாரம்: மணமகன் இல்லத்தில் 03.09.2011 சனிக்கிழமை பி.ப.3 மணி
மணமகள் இல்லத்தில் 04.09.2011 ஞாயிற்றுக்கிழமை பி.ப.3 மணி
தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்:

திரு.திருமதி வ.துரைராசா குடும்பம்
வரவேற்பாளர்கள்: திரு.திருமதி வாமதேவன் குடும்பம்,
திரு.திருமதி சசிகுமார் குடும்பம்.
காரைக்காட்டு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

திரு.திருமதி செ.ஜெகநாதன் குடும்பம்
வரவேற்பாளர்: திரு.திருமதி.சி.கணபாலன் குடும்பம்
மானிப்பாய் வீதி, கோப்பாய் [illegible]
நி.முகவரி: விமனகாமம், தெல்லிப்பழை

(இருவீட்டார் அழைப்பு)



## வருடாந்தப் பொதுச் சபைக்கூட்டம் 2011
### பழைய மாணவர் சங்கம்
### மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை

காலம் : 04.09.2011 ஞாயிறு மு.ப 10 மணி
இடம் : கல்லூரி அழகரத்தினம் மண்டபம்
தலைவர் : ம.யேசுரத்தினம்

தயவு செய்து எல்லா பழைய மாணவர்களும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

ம.யேசுரத்தினம்,
தலைவர்.

அ.மு.அருணாசலம்,
பதில் செயலாளர்.

(7481)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் சாராம்சம் அடுத்த வருடம் ஐ.நா.மனித உரிமை பேரவைக்கு

கொழும்பு, செப். 2

அடுத்த வருடம் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவை அமர்வுகளின் போதே நல்லிணக்க ஆணைக் குழுவின் இறுதி அறிக்கையின் சாராம்சம் தொடர்பாக விளக்கமளிக்கப்படும் என வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையின் சாராம்சம் தொடர்பில் அதற்கு முன்னர் விளக்கமளிக்கப்படமாட்டாது என்றும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கைகள் எதுவும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் சமர்ப்பிக்கப்படமாட்டாது. அறிக்கையின் உள்ளடக்கம் குறித்து தெளிவுபடுத்தப்படும் எனவும் வெளிவிவகார அமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முரண்பாடற்ற முறையில் இரு தரப் பினருக்கும் இடையில் .இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையுடன் கருத்து முரண்பாடு அற்ற வகையில் உறவுகளைத் தொடரக்கூடிய பொறிமுறையொன்றை உருவாக்குவது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாகத் வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (ச)



தற்போது ஏற்பட்டுள்ள கடும் வரட்சி காரணமாக கொத்மலை நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் குறைவடைந்துள்ளது. இதனால் எதிர்வரும் நாள்களில் மின்சாரத்தைப் பெறுவதில் நெருக்கடி நிலைமை ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது (ச)

# காலி-அளுத்கம ரயில் சேவை நேற்று முதல் இடைநிறுத்தம்

காலி, செப்.02

காலிக்கும் அளுத்கமக்கும் இடையிலான ரயில் சேவை நேற்று முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

ரயில் பிரயாணிகளின் வசதிக்காக இருபது இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும் என்று இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் எம்.பீ.பந்துசேன தெரிவித்துள்ளார்.

தேவையேற்படின் பஸ்களின் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

காலிக்கும் அம்பலாங்கொடைக்கும் இடையில் மேலதிக பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. கொழும்பில் உள்ள அரச நிறுவனங்களில் பணிபுரியும் அரச ஊழியர்களுக்கு விசேட பஸ் சேவைகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்கள் விடுத்த வேண்டுகோளுக்கமைய விசேட பஸ்சேவைகள் வழங்கப்பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

காலி-அளுத்கம அதிவேகப் பாதையின் அபிவிருத்திக்கான இரண்டாம் கட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டதையடுத்தே இந்த வீதி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# வேலைவாய்ப்புப் பெறுவோருக்கான கொரிய மொழிப் பரீட்சை ஒத்திவைப்பு

தென்கொரியாவில் வேலைவாய்ப்புப் பெற விரும்பும் இலங்கையர்களுக்கான கொரிய மொழிப்பரீட்சை எதிர்வரும் ஒக்ரோபர் 10ஆம், 11ஆம் திகதிகளுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் ஒக்ரோபர் 8ஆம், 9ஆம் திகதிகளில் இந்தப்பரீட்சையை நடத்துவதற்கு ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்தது.

எனினும் உள்ளூராட்சித் தேர்தல் ஒக்ரோபர் 8ஆம் திகதி நடைபெறவுள்ளதால் பரீட்சைத் தினங்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன எனப் பணியகம் தெரிவித்துள்ளது.

சகல பரீட்சார்த்திகளுக்கும் பரீட்சை நடைபெறும் தினம், பரீட்சை மண்டபம், நேரம் ஆகிய விவரங்கள் ஊடகங்களின் வாயிலாக அறிவிக்கப்படும்.

இந்தப் பரீட்சைக்கு 50ஆயிரத்து 730பேர் தோற்றவுள்ளனர்.கொழும்பில் இதனை நடத்த சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்று பணியகம் தெரிவித்துள்ளது.

அதேவேளை கொரியாவில் பணி புரிந்து விட்டுத் திரும்பியவர்கள் சங்கமொன்றை உருவாக்கியுள்ளனர்.


கொரியாவில் இவர்கள் பெற்ற பயிற்சிகள், அனுபவங்கள் ஆகியவற்றை இந்த நாட்டின் அபிவிருத்திப் பணிகளுக்குப் பயன்படுத்திக் கொள்ள இந்தச் சங்கம் வழிவகுக்கும் என்று வெளிநாட்டு வேலை வாய்ப்பு அபிவிருத்தி அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார். (ச-5)

# கொழும்புத் துறைமுகத்தில் இரண்டு சர்வதேச கப்பல்கள் தடுத்து வைப்பு

கொழும்பு,செப்.2

கொழும்பு துறைமுகத்தில் இரண்டு சர்வதேச வர்த்தக கப்பல்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. இந்த இரண்டு கப்பல்களும் பனாமா மற்றும் வியட்நாம் நாடுகளுக்கு சொந்தமானவை என்று தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு எட்மிரல் நீதிமன்றத்தின் உத்தரவிற்கு அமையவே இந்தக் கப்பல்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள தாக வர்த்தக கப்பல் பணிப்பாளர் ஷாந்த வீரகோன் தெரிவித்துள்ளார்.சில பொருள்களுக்குப் பணம் செலுத்தாமை மற்றும் வர்த்தக பிரச்சினை காரணமாக இந்தக் கப்பல்களை தடுத்து வைக்க நேரிட்டதாக வர்த்தக கப்பல் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். இந்த இரு கப்பல்களும் தற்போது கொழும்புத்துறை முகத்தில் நங்கூரமிடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (ச)




**தவறிவிட்டது**

இணுவில் மேற்கு, இணுவிலைச் சேர்ந்த விருத்தாசலம் லவன் என்பவரது தேசிய அடையாள அட்டை (770282381V) காப்புறுதி அனுமதிப் பத்திரம், வரிப் பத்திரம், சாரதி அனுமதிப் பத்திரம் என்பன கடந்த 20.08.2011 அன்று பருத்தித்துறைக்கும் இணுவிலுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

T.P:0774286052

**தவறிவிட்டது**

நெல்லியான் வீதி,சுழிபுரத்தைச் சேர்ந்த இராமராசா கண்ணதாசன் என்பவருடைய தே.அ.அ (862534182V) கடவுச் சீட்டு-N2712743, காப்புறுதிப்பத்திரம், மற்றும் மோட்டார் சைக்கிளுக்குரிய ஆவணங்கள் என்பன யாழ்.நகருக்குள் தவறிவிட்டன.

கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்து உதவவும்.

T.P-0773352207, 0773366834


**வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம்**

காலம் : 11.09.2011 ஞாயிற்றுக்கிழமை மு.ப.10மணி
இடம் : வேலணை மத்திய கல்லூரி மண்டபம்
தலைவர் : திரு.பொ.அருணகிரிநாதன்

அன்றைய தினம் புதிய அங்கத்துவத்துக்கு விண்ணப்பிப்பவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

கா.பாலகிருஷ்ணன்,
செயலாளர்.

**மணிவிழா நாயகிக்கு மனமார வாழ்த்துக்கள்**



**தர்மகுலசிங்கம் அன்னமுத்து**

நூலகர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை

திறமையும் கருணையும்
தீவிர உழைப்பும் அறுபதின் நிறைவும்
ஆகிய எங்கள் மணிவிழா நாயகி
நிறைவுடன் வாழி

பெரியபள்ளை, பளை.

கேதீஸ்வரன்
குடும்பம்.

# பொலிஸார் போல் நடித்து கொள்ளை

பேருவளை, செப். 2

எல்பிட்டிய நவதகல பகுதியிலுள்ள வர்த்தகர் ஒருவரின் வீட்டில் 8லட்சத்து50ஆயிரம் ரூபா பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. நான்கு பேர் கொண்ட கொள்ளைக் கோஷ்டியினரே பொலிஸார் போல் நடித்து இந்தத் துணிகரக் கொள்ளையை மேற்கொண்டு தப்பிச் சென்றுள்ளனர். தாம் கொழும்பு தெற்கு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் என்று தெரிவித்து வீட்டில் ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளதை சோதனை செய்யவே வந்ததாகக் கூறிக் கொள்ளையை மேற்கொண்டுள்ளனர்.

இந்தக் கொள்ளைச் சம்பவம் தொடர்பாக எல்பிட்டிய பொலிஸார் விசாரணையை மேற்கொண்டுள்ளனர்.

## வீட்டில் திருட்டு

வீட்டு உரிமையாளர் இல்லாத சமயத்தைப் பயன்படுத்தி மஹவில பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் 14ஆயிரம் ரூபா பணம், ஒரு லட்சத்து 60ஆயிரம் ரூபா பெறுமதியான நகை, வீட்டு உபகரணங்கள் ஆகியவை திருடப் பட்டுள்ளன. இந்தச் சம்பவம் தொடர்பில்பொலிஸார்விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மரண தண்டனைக் கைதிகளின் கருணை மனுக்கள்

# ஐந்து வருடங்களின் பின்தான் ஜனாதிபதிக்கு கிடைத்தனவாம்!

டில்லி, செப்.2

முருகன், பேரறிவாளன், சாந்தன் ஆகியோருக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையைக் குறைக்குமாறு அனுப்பப்பட்ட கருணை மனுக்கள், 5 வருடங்களின் பின்னர்தான் ஜனாதிபதி செயலகத்தைச் சென்றடைந்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த 2000 ஆம் ஆண்டு ஏப்ரல் 25 ஆம் திகதி, ஜனாதிபதிக்கான கருணை மனுக்கள் அனுப்பப்பட்டுள்ளன. எனினும், ஜனாதிபதி அலுவலகத்திடம் 2005ஆம் ஆண்டு ஜூன் மாதம் 22ஆம் திகதியே கையளிக்கப்பட்டுள்ளன.

அப்போது கூட அவை பரிசீலிக்கப்படாது, இந்த வருடம் ஓகஸ்ட் மாதம் 11ஆம் திகதியே அந்தக்கருணை மனுக்கள் ஜனாதிபதியினால் நிராகரிக்கப்பட்டுள்ளன. இந்திய அரசியல் சாசனத்தின் 21 ஆவது அதிகாரப் பிரிவை மீறுவதாக இந்தச்செயல் இருக்கிறது என்றும், மேற்படி அதிகாரப்பிரிவின் கீழ் ஒரு மனு விசாரணைக்கு வந்து இரண்டு வருடங்களுக்குள் அது தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமெனவும் கோரியே தற்போது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தின் ராஷ்டிராதிபவனால் கடந்த டிசெம்பர் மாதம் வெளியிடப்பட்ட ஆவணத்தின்படி, மூவரின் கருணை மனுக்கள் கிடைக்கப்பெற்ற ஆண்டாக 2005 ஆம் ஆண்டு ஜூன் 22 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டிருப்பதாகத் தகவல்கள் கூறுகின்றன.

இந்திய நாடாளுமன்றம் மீதான தாக்குதல் மரண தண்டனையை எதிர்நோக்கியிருந்த



அப்சல் குருவின் கருணை மனுக்கள், இந்த வருடம் ஓகஸ்ட் 10 ஆம் திகதி ஜனாதிபதியால் நிராகரிக்கப்பட்டுள்ளன. அதற்கு அடுத்த நாளான ஓகஸ்ட் 11 ஆம் திகதி, சாந்தன், முருகன், பேறிவாளன் ஆகியோரது மனுக்கள் ஜனாதிபதியால் நிராகரிக்கப்பட்டுள்ளன எனவும் ஆவணப் பதிவுத் தகவல்கள் கூறுகின்றன. (வ)

### கருணை மனுவின் பரிசீலனை குறித்து

# இந்திய அரசமைப்புச் சட்டத்தில் ஜனாதிபதிக்கு காலக்கெடு விதிக்கவில்லை

டில்லி, செப்.2

மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களின் கருணை மனுக்களை பரிசீலிக்க ஜனாதிபதி முடிவெடுப்பதற்கு இந்திய அரசமைப்புச் சட்டம் எந்த காலக் கெடுவையும் நிர்ணயிக்கவில்லை. எனவே மத்திய அரசு, சென்னை உயர் நீதிமன்றத்தில் பதில் அளிக்கலாம் என்று மத்திய உள்துறை அமைச்சுத் தெரிவித்துள் ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ராஜிவ் கொலை வழக்கில், கருணை மனு நிராகரிக்கப்பட்ட குற்றவாளிகளான பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகிய மூவரும், சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தனர். அதில் தமது கருணை மனு மீது முடிவு எடுக்க ஜனாதிபதிக்கு 11 ஆண்டுக்காலம் எடுத்துக் கொண்டதை குறிப்பிட்டுள்ளனர்.

இதுகுறித்து விளக்கம் அளிக்கும்படி சென்னை உயர் நீதிமன்றம் மத்திய உள்துறை அமைச்சகத்துக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

இதுகுறித்து மத்திய அதிகாரிகள் சிலர் கூறுகையில்,

இதுபோன்று மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒருவரின் கருணை மனு மீது ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பதற்கான கால வரையறை எதுவும் இந்திய அரசமைப்பில் குறிப்பிடப்படவில்லை. அதனால் மனு தாரர்களின் வாதம் செல்லுபடியாகாது. இதை, மத்திய அரசு, சென்னை உயர் நீதிமன்றத்தில் குறிப்பிட வாய்ப்பிருக்கிறது' என்று தெரிவித்தனர். (வ)

# ராஜீவ் கொலைக் குற்றவாளிகளின் மரண தண்டனையை நிறைவேற்றுக!

### பா.ஜ.க. கருத்து

டில்லி, செப்.2

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகிய மூவருக்கும் விதிக்கப்பட்ட மரண தண்டனையை நிறைவேற்ற வேண்டும் என்று பாரதீய ஜனதாக் கட்சித் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அந்தக் கட்சிச் செய்தி தொடர்பாளர் ரவிசங்கர் பிரசாத் கூறுகையில்:

நாட்டின் இறையாண்மையைக் குறைக்கும் எவராக இருந் தாலும் அவர்களுக்குத் தண் டனை வழங்கப்பபட வேண் டும். மேல் நீதிமன்றம் மூலம் குற்றம் நிரூபிக்கப்பட்டு, ஜனாதி பதி கருணை மனுவை நிராகரிப்புச் செய்த பின்னர் தண்டனை நிறைவேற்றாமல் தடுக்க முயற்சிக்கக் கூடாது என்றும் அவர் கூறியுள்ளார். (வ)

# விரைவில் சக்திவாய்ந்த செயற்கைக்கோள்

பெங்களூர், செப்.2

இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகமான இஸ்ரோ, புதிய தொழில்நுட்பத்திலான மிகவும் சக்தி வாய்ந்த தொலைத் தொடர்பு செயற்கைக்கோள் தயாரிக்கும் திட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக இஸ்ரோ தலைவர் கே.ராதாகிருஷ்ணன் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில்:

இந்த வகையிலான விண்வெளி ஓடம், அதிக அளவிலான சக்தியுடன், கூடுதல் எண்ணிக்கையிலான டிரான்ஸ் பாண்டர்களை அதே செயற்கைக் கோளில் வைத்துக் கையாளும் திறனுடன் வடிவமைக்கப்படும் என்றார் அவர். மேலும் அடுத்துவரும் தொடங்கும் எதிர்வரும் ஐந்தாண்டு திட்டத்தில், இது முக்கிய இடம்பெறும் என்று தெரிவித்தார். (வ)



ராஜீவ்காந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோரை விடுதலை செய்யக்கோரி காஞ்சிபுரத்தில் தீக்குளித்து இறந்த மக்கள் மன்றம் அமைப்பைச் சேர்ந்த இளம் பெண் செங்கொடியின் இறுதிக்கிரியை நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதன்போது அவரது உருவச் சிலையை தொல். திருமாவளவன் அனைத்து தலைவர்களின் முன்னிலையில் திறந்து வைத்து உரை நிகழ்த்துகிறார்.

# இந்தியாவில் இலங்கைத் தமிழர் முகாம்களில் பாதுகாப்பு தீவிரம்

இந்தியாவில் இலங்கைத் தமிழர்கள் தங்கியிருக்கும் அகதி முகாம்களில் தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள்மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ராஜீவ் காந்தி படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று கைதிகளுக்கு மரண தண்டனை நிறைவேற்றுவது தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சை காரணமாக பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப் படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை இலங்கைத் தமிழர்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் கூடுதலான பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளதாக கேரள மாநில பொலிஸார் அறிவித்துள்ளனர்.

இலங்கைத் தமிழர்களின் நடவடிக்கைகள் தீவிரமாகக் கண்காணிக்கப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது. இதுவரையில் எந்தவிதமான அசம்பாவிதங்களும் இடம்பெறவில்லை என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

# 7 கோடி தமிழர்களின் உணர்வுகள் டில்லியைக் கட்டுப்படுத்தாதெனில் தமிழகத்தை டில்லியால் கட்டுப்படுத்த முடியாது - அரிமாவளவன் தெரிவிப்பு

ஏழு கோடி தமிழர்களின் உணர்வுகள் டில்லியைக் கட்டுப்படுத்தாது எனில் டில்லியும் இனிமேல் தமிழ்நாட்டைக் கட்டுப்படுத்தாது என்று தமிழர் களத்தின் பொதுச் செயலாளர் அரிமாவளவன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்ட அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

இந்திய மாநிலங்களின் கூட்டாட்சிதான் இந்தியா. இந்தியாவுக்குள் இருக்கும் தமிழ்த் தேசிய இனத்தின் ஒருமித்த குரலைத் தான் தமிழ்நாடு சட்டமன்றம் பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோரின் தண்டனைக் குறைப்பு பற்றிய தீர்மானத்தில் வெளிப்படுத்தியது.

ஆனால் மத்திய சட்ட அமைச்சர் சல்மான் குர்ஷித், மேற் கண்ட தீர்மானம் எங்களைக் கட்டுப்படுத்தாது என்று சொல்வது மக்களின் குரல் எங்களைக் கட்டுப்படுத்தாது நாம் தான் தோன்றித்தனமாகத் தான் செயற்படுவோம் என்றே பொருள்படுகிறது.

தமிழக மக்கள் என்றைக்கும் நீதிக்குப் புறம்பாக செயற்படுகிறவர்கள் அல்லர். நாம் தப்பானவர்களுக்காக கையேந்தி யாரிடமும் பிச்சை கேட்கவில்லை. எந்த வகையிலும் வன்முறையை நாடுகிறவர்கள் தமிழர்கள் அல்லர்.

3 லட்சம் ஈழத் தமிழர்களை இலங்கை இந்தியக் கூட்டுப் படைகள் கொலை செய்தனர், இந்திய அமைதிப்படை இலங்கையில் ஆயிரக்கணக்கான தமிழர்களை அழித்தொழித்தனர், சிங்கள இனவெறிப்படைகள் 550 இற்கும் மேற்பட்ட தமிழ் மீனவர்களைக் கொலை செய்தனர்.

இவற்றைத் தடுக்க இந்தியப் படைகள் திராணியற்றிருக்கும்போதும் தமிழர்கள் தமிழ்நாட்டில் வசிக்கிற சிங்களவரையோ தெலுங்கர், மலையாளிகள்போன்ற பிற இனத்தவரையோ கைநீட்டிக்கூட அடித்ததில்லை.

இதையே ஒரு சாட்டாக வைத்துக் கொண்டு தமிழின எதிரிகள் தமிழரின் தலையில் தொடர்ந்து ஏறி மேய்வது தற்போது வரம்பு மீறிவிட்டது.

21 ஆண்டுகள் சிறையில் தவித்த மூன்று அப்பாவித் தமிழர்கள் இந்தக் கொலையோடு தொடர்பு இல்லாதவர்கள் என்றும் தொடர்புடையதாகக் கருதப்படும் சிலர் இன்றும் தலைவர்கள்போல உலா வருவதும் யாவரும் அறிந்ததே!

இருப்பினும் இந்த மூவரையும் தூக்கிலிட்டே தீரவேண்டும் என்று காங்கிரசுக் கட்சியும் அதன் எடுபிடிகளும் மூர்க்கத்தனத்தோடு மோதும்போதுகூட தமிழினம் இன்னும் அறப் போராட்டங்களையே நடத்திக் கொண்டிருக்கிறது.

இந்தவேளையில் ஒட்டு மொத்தத் தமிழகத்தின் குரலை எதிரொலிப்பதாக தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தை மிக எளிதாகவும் இழிவாகவும் கருதிக் கொண்டு அது எங்களைக் கட்டுப்படுத்தாது என்று டில்லி அரசு சொல்லுமானால் அது இந்தியா என்கிற கோட்பாட்டை, ஒற்றுமையை, ஒருமைப்பாட்டைச் சிதைப்பதுவேயாகும்.

அதை இனி வரவேற்பது தவிர எமக்கு வேறு வழியில்லை. ஏழு கோடி தமிழர்களின் உணர்வும் கொந்தளிப்பும் கோரிக்கையும் உங்களைக் கட்டுப்படுத்தாது என்றால் இனி உங்களது அதிகாரமும், ஆளுமையும், அரசும் எங்களையும் கட்டுப்படுத்தாது.

எப்படியான ஒரு இறையாண்மையுடன் நீங்கள் வாழ்கிறீர்களோ அதுபோன்றே தமிழ்த் தேசிய இனமும் தன் இறையாண்மையுடன் இனி வாழத் துடிக்கும் என்று குறிப்பிட்டுள்ளார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சக்திமயம்

## சிறுப்பிட்டி வல்லையப்புலம்

# திருவருள்மிகு ஸ்ரீ கருணாகடாஷி மனோன்மணி அம்பாள் தேவஸ்தானம்

# மகா கும்பாபிஷேகம் - 02.09.2011



அருள் வழங்கும் சிறுப்பிட்டி மத்தியின் திலகமென விளங்கும்
அருள் நல்கும் சக்தியனைத்தும் அகத்தே கொண்டிலங்கும்
அருள் பெருக வோங்கும் மகா கும்பாபிஷேகம் அதனில் கலந்து
அருள் பெற்றே என்றும் சக்தியோடு சக்தியாய் சைவராய் வாழ் வீருயர்ந்து.

**சுபநேரம் காலை 6.05 தொடக்கம் 7.10 மணி**

### நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குரு முதல்வர் சோமசுந்தர பரமாசாரிய சுவாமி அவர்களின் ஆசியுரை



சக்தியின்றி சிவமில்லை. சக்தி வழிபாட்டுத்தலம் ஒவ்வொரு ஊருக்கும் ஒவ்வொன்று காணப்பட வேண்டும். அந்தவகையில் வாழை, வெங்காயம், நெல்வயல்கள், கற்றோர்கள், பண்பாளர்கள் வாழ்கின்ற சிறுப்பிட்டிப் பதியின் மத்தியில் எல்லாம் வல்ல அன்னை மனோன்மணி அம்பாள் பன்னெடுங்காலம் அருள்பாலித்து வருகின்றாள். பழைய ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்து மஹா கும்பாபிஷேகம் காண்பது ஊருக்குச் சிறப்பானதாகும். திருப்பணிகளை மேற்கொண்ட பரிபாலன சபையினர், உதவிய அம்பிகை அடியார்கள் யாவர்க்கும் மனோன்மணி அம்பாளின் திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

### ஆலய பரிபாலன சபைத் தலைவர் கந்தையா ஸ்ரீஸ்கந்தராசா அவர்களின் வாழ்த்துரை



சிறுப்பிட்டிக் கிராமம் சைவத் தமிழர்கள் செறிந்து வாழும் பிரதேசமாகும். இங்கு விநாயகர், சிவன், முத்துமாரி, துர்க்கை, வைரவர், பூதவராயர் என எல்லாத் தெய்வங்களும் வழிபடப்பட்டு வருகின்றமை சிறப்புடையதாகும். மத்திய திலகமாக வல்லையப்புலத்தில் பல காலமாக அன்னை மனோன்மணி அம்பாள் ஆலயம் சிறப்புப்பெற்று வந்துள்ளது. பல ஆண்டுகளுக்கு முன்பு பழுதடைந்த ஆலயத்தை ஊர் மக்கள், வெளிநாடுகளில் வாழும் நம்மூர் அடியவர்கள் ஆகியோருடைய பங்களிப்புடன் பெரும் திருப்பணி வேலைகள் நடைபெற்று இன்று மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறுகின்றது. எல்லோரினதும் ஒத்துழைப்பும் சிறப்பாக பரிபாலன சபை அங்கத்தினரது ஒத்துழைப்பு, தொழிலாளர்களின் அர்ப்பணிப்புடன் கூடிய வேலை, சிவாச்சாரியார்களின் அரவணைப்பு என்பனவற்றால் எமது மனோன்மணி அம்பாள் ஆலயம் இத்துணை சிறப்புப் பெற்று மகா கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. எல்லோருக்கும் அம்பாள் திருவருள் கிடைக்கப்பெற அருள்வழி நின்று வாழ்த்துகின்றேன்.

## அம்பிகை மலரடி வாழியவே!

கருணைக் கடாட்ஷ மனோன்மணி தாயின்
பெருகிடு கருணை வாழியவே!
உருகிடும் அன்பரின் உளம் நிறை
அருளும் பெருகியே என்றும் வாழியவே!
வயல் வெளி தோட்டமும் வளம் தரும் பயிர்களும்
உயரியமரு தந்து உறைபவளே!
ஆன்மிகம் வளர அனைவரும் வாழ
தேன்தரு சுவையாய் அம்பிகை மலரடி வாழியவே!

செ.விஸ்வலிங்கம்
(புத்தூர் விஸ்வம்) - செயலாளர்.

## அம்பாள் சுகமளிப்பாள்

சாந்த முகமும் சந்தோஷப் புன்னகையும்
சப்த வரங்களையும் அருள்வாள்
காந்த மொழியும் காலிக்கும் வாழ்வையும்
கை கூப்பக் கரம் தருவாள்
சோர்ந்தபோதும் துவளாமல் மீண்டிட
சிறுப்பிட்டி அம்பாள் சுகமளிப்பாள்
நேர்ந்து நீ எது செய்தாலும் நினது
நம்பிக்கை ஒருபோதும் வீண் போகாது
தோய்ந்து ஒருமுறை சுற்றி வந்தால் உன்
துயரத்துக்கு ஒரு விடிவு தெரியும்
தேர்ந்து ஒரு காரியம் வென்றிடத்
தெரிந்து தேவியைப் போற்று
கூர்ந்து உன் வாழ்வினைக் கவனி - அங்கே
குல தெய்வம் மனோன்மணி உள்ளாள்
தீர்ந்து போகும் வில்லங்கம் யாவுமே
தேவி மனோன்மணியைப் போற்றுவோம்.

கே.எஸ்.சிவஞானராஜா
கொக்குவில்.

### வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் மருதலிங்கம் பிரதீபன் அவர்களின் வாழ்த்துரை



வலிகாமம் கிழக்கின், ஊர்கள் ஒவ்வொன்றுமே பெரிய நிலப் பரப்பைக் கொண்டு காணப்படுகின்றன. சைவத் தமிழ் பண்பாட்டை மட்டுமே போற்றிக் கடைப்பிடிக்கின்ற மக்கள் வாழும் இடம் சிறுப்பிட்டிக் கிராமம் ஆகும். அங்கு மத்தியில் அருட்பெரும் சக்தியாக, மிகப்பழைய வரலாற்றுப் புகழ் கொண்ட வல்லையப்புலம் மனோன்மணி அம்பாளுக்கு மகாகும்பாபிஷேகம் நடைபெறுவது மகிமை வாய்ந்ததாகும். மக்களின் இன்னல்கள் தீர்த்து அருள்பாலிக்கும் அன்னையை வணங்கி எல்லோரும் இன்புற்று வாழ்வாங்கு வாழ வாழ்த்துக்களைப் தெரிவித்துக் கொள்கிறேன்.

### சர்வபோதகாச்சார்யர் பிரம்மஸ்ரீ ஆ.சந்திரசேகரக் குருக்கள் அவர்களின் ஆசியுரை



"நமோ தேவ்யை மஹா தேவ்யை
சிவாயை சததம் நமஹ"

அன்னை பராசக்தி, சிவகாமி, இராஜேஸ்வரி, கரு ணாகடாட்சி என்னும் பல நாமங்களால் மனோன்மணி ஸ்வரூபமாக வல்லையப் புலம்என்னும்திவ்ய க்ஷேத்திரத்தில் அருளாட்சி செய்து வரும் சர்வலோக நாயகிக்கு பெருஞ் சாந்தி யென்னும் புனராவர்த்தன சம்புரோக்ஷண அஷ்டபந்தன நவகுண்டபக்ஷமஹா கும்பாபிஷேக வைப வம் நடைபெறுகிறது. அன்னையின் அற்புதங்கள் அளப் பரிது. இயற்கையாலும் மனிதராலும் ஏற்பட்ட நெருக்க டிகளிலிருந்து மக்களைக் காத்து கம்பீரமாக இருந்து அருளாட்சி செய்து வருவது இந்த மக்களின் தவப்பேறு.

கும்பாபிஷேகப் பெருஞ்சாந்தி என்பது பிராயச்சித்தம். இது மனம் வாக்கு காயங்களினால் அறியாது செய்த குற்றங்களை நீக்குவது. பெறற்கரிய மனுடம்பை தந்தருளிய எம் பிராட்டியை சிவாகம முறைப்படி சென்று வழிபாடு செய்தல் வேண்டும். இவ்வாறு வழிபடும் பொழுது புத்தி பூர்வமாகவும் அபுத்தி பூர்வமாகவும் ஏற்படும் பிழைகளை மகோற்சவ தரிசனத்தால் நீக் கலாம். உற்சவ காலத்தில் ஏற்பட்ட பிழை களை கும்பாபிஷக தரிசனத்தில் நீக்கலாம் ஆகவே வேறு எந்த வகையாலும் தீர்க்க முடி யாத சிவ அபராதம் தீர்க்கப்படுகின்றமையால் கும்பாபிஷேகத்தைப் பெருஞ்சாந்தி என்று சைவ நூலுணர்ந்த பெரியோர்கள் கூறுகின்றனர்.

அம்பிகைக்கு இந்தப் பெருஞ்சாந்தி வைபவம் நடைபெற திருப்பணிகள் ஆரம்பித்த நேரத்தில் மிக சொற்ப பணத்துடன் ஆரம்பிக்கப்பெற்றது. கும்பாபிஷேகம் நடப்பதில் பலருக்கும் சந்தேகங்களும் கூட உண்டாகின. அம்பாள் திருவருள் எல்லோரது உள்ளத்திலும் திருப்பணிகளுக்கு பணம் கொடுக்க வேண் டும். திருக்கோயில் அழகான சித்திர வேலைப்பாடுடன் அமைய வேண்டும். அதில் அன்னையர் பெருங்காட்சியைக் கண்டு களிக்க வேண்டும் என்ற உந்து சக்தியை உண்டாக்கினாள். அதன் பயனாக உள்ளூரிலும் அன்னிய தேசத்தில் வாழும் அன்னையின் அடியார்களும் அள்ளி வழங்கிய பல லட்சம் ரூபா செலவில் திரிதள சுந்தர விமான ஸ்தூபியும் சக்தியின் பலவித பேதங்கள் அமைந்த சுதைகளும் கண்கவர புதிதாக அமைக்கப்பட்ட உன்னத மஹா நாசியுடைய வசந்த மண்டபமும், மணிக்கோபுரமும் மிளிர மகாகும்பாபிஷேகத்தை காண பெரும் புண்ணியஞ் செய்துள்ளார்.

அந்தரங்க சுத்தியுடன் மனம், வாக்கு, காயங்களால் இந்தப் பதி புண்ணியத்தில் உழைத்த மக்களுக்கு அம்பிகையின் அருளால் சகல சௌபாக்கியங்களும் உண்டாக ஆசி நல்கி இறைவியை இறைஞ்சி நிற்கின்றேன்.

சர்வே ஜனாஹ சுகினோ பவந்து.

### ஆலயப் பரிபாலன சபை பொருளாளர் சுப்பிரமணியம் கனகராசா அவர்களின் வாழ்த்துரை



சிறுப்பிட்டி மனோன்மணி அம்பாள் ஆலயம் இன்று மகா கும்பாபிஷேக விழாக் காணுகின்றது.

ஆலயத்தின் திருப்பணிகள் யாவும் இனிது நிறைவுபெற்று கும்பாபிஷேகக் கிரியைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் இந்த ஆலயம் சிறப்புறப் பணியாற்றிய நிர்வாக உறுப்பினர்கள், அடியவர்கள் யாவருக்கும் பாராட்டுக்களைத் தெரிவிப்பதுடன் மேலும் திருப்பணிகளும் விழாக்களும் சிறப்பெய்த எமது நல்லாசிகளைத் தெரிவிக்கின்றேன்,

**விளம்பர அனுசரணையாளர்:**

| | | |
|---|---|---|
| முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்<br>சிறுப்பிட்டி வடக்கு | பிள்ளையார் ஸ்ரோர்ஸ்<br>சிறுப்பிட்டி மத்தி<br>உரிமையாளர்:வி.சக்திகிருஸ்ணன் | ஐங்கரன் ஸ்ரோர்ஸ் & போட்டோ<br>சிறுப்பிட்டி வடக்கு<br>உரிமையாளர்: ந.அஞ்சனன் |
| நிஷாந் ரயர் வேக்சொப்<br>சிறுப்பிட்டி வடக்கு<br>உரிமையாளர்: பா.நிஷாந்தன் | ரகுபதி ஹோட்டல்<br>சிறுப்பிட்டி வடக்கு<br>உரிமையாளர்: சி.தபேஸ்ராஜா | எரிபொருள் நிலையம்<br>சிறுப்பிட்டி தெற்கு<br>உரிமையாளர்: நா.விஸ்வலிங்கம் |
| முருகன் ஸ்ரோர்ஸ்<br>சிறுப்பிட்டி தெற்கு<br>உரிமையாளர்: பொ.கனகலிங்கம் | பாரதி கல்வி நிலையம்<br>சிறுப்பிட்டி வடக்கு<br>நிர்வாகி: வை.நிஷாந்தன் | குமரன் அரைக்கும் ஆலை<br>சிறுப்பிட்டி<br>உரிமையாளர்: ஸ்ரீகாந்தன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுதம் ஏந்திய 20 ஆயிரம் மக்கள் தயார் எந்தநேரத்திலும் தாக்குதல் நடத்துவர்

## கடாபி மகனின் புதிய சூளுரை


திரிபோலி,செப்.2

தங்களிடம் இன்னமும் 20,000 ஆயுதமேந்திய பொது மக்கள் இருப்பதாகவும், தமது நகரத்தை பாதுகாத்துக் கொள்வதற்காக அவர்கள் ஆயுத மேந்தியிருப்ப தாகவும், எந்நேரமும், எப்படிப் பட்ட தாக்குதலையும் அவர்கள் நடத்தக் கூடுமென வும் லிபிய அதிபர் மும்மர் கடாபியின் மகன், சைஃப் அல் இஸ்லாம் சூளுரைத் துள்ளார்.

திரிபோலிக்கு வெளியிலி ருந்து வானலை ஒன்றுக்கு வழங் கிய செவ்வியில் இவ்வாறு தெரிவித்த அவர் தனது தந்தை (கேணல் கடாபி) நலமாக இருப்ப தாகவும் தெரிவித்துள்ளார்.

லிபியாவின் எதிர்காலம் தொடர்பில் பிரான்ஸ் அதிபர் நிகோலஸ் சர்கோசி, பரிஸில் ஒழுங்கு செய்த அவசர கூட் டத்தில் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன், அமெரிக்க இராஜாங்க செயலர் ஹிலாரி கிளிண்டன், ஐ.நா செயலாளர் பான் கீ மூன் ஆகியோர் கலந்து கொண் டுள்ள நிலையில் கடாபியின் மகன்இவ்வாறு சூளுரைத்துள்ளார்.

கடாபியின் மற்றுமொரு மகன், முன்னதாக விடுத்த அறிவிப் பில், யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்து, கிளர்ச்சிப் படைகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தயார் என அறி வித்திருந்தார். எனினும் இந்த அறிவிப்பு வெளியாகி சில மணி நேரங்களில் சைஃப் இந்தப் புதிய அறிவித்தலை விடுத் துள்ளார். முன்னதாக எதிர்வரும்



சனிக்கிழமைக்குள் லிபிய அரச படையினர் சரணடைய வேண்டு மெனக் கிளர்ச்சி படைகள் காலக் கெடு விதித்திருந்தன.

எனினும் சைஃப் அல் இஸ் லாம் விடுத்துள்ள எச்சரிக்கை யில் தங்களிடம் இன்னமும் 20,000 ஆயுதமேந்திய பொது மக்கள் இருப்பதாகவும், தமது நகரத்தை பாதுகாத்துக் கொள் வதற்காக அவர்கள் ஆயுத மேந்தி யிருப்பதாகவும், எந்நேரமும், எப்படிப்பட்ட தாக்குதலையும் அவர்கள் நடத்தக் கூடுமென வும் அவர் எச்சரித்துள்ளார்.

## ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடந்து 70 வயது முதியவர் சாதனை படைத்தார்

லண்டன்,செப்.2

ஆங்கிலக்கால்வாயை 18மணிநேரத்தில் நீந்திக்கடந்து கின்னஸ் சாதனை படைத்தார் 70 வயது முதியவர். இதன் மூலம் ஆங்கிலக் கால் வாயை நீந்திக் கடந்த இரண்டாவது முதியவர் என்ற பெருமையினைப் பெற்றுள்ளார். உலகின் கடல் வழி வர்த்தகத்திற்காக மிகவும் வசதியான கால்வாய் ஆங்கிலக் கால்வாய் ஆகும். அட்லாண்டிக் கடற்பகுதியின் வடக்கே அமைந்துள்ளது. இங்கிலாந்தின் தெற்குப் பகுதி, பிரான்சின் வடக்குப்பகுதியினை இணைக்கிறது.

இந்தக் கால்வாயை இங்கிலாந்தின் அரண்மனையில் நீண்ட வருடங்க ளாக விசுவாசியாகப் பணியாற்றி வரும் ரோஜர்ஆல்சோப் (70) என்பவர் 18 மணிநேரத்துக்குள் நீந்திக் கடந்து சாதனை படைத் துள்ளார்.

முன்னதாக கெண்ட் மாகாணத்தில் டோவர் நகரில் உள்ள ஷேக்ஸ் பியர் கடற்கரைப் பகுதியிலிருந்து நேற்றுமுன்தினம் தனது நீச்சல் பயணத்தை தொடக்கினார். மொத்தம் 21 கடல் மைல்கள் நீந்தி 17 மணிநேரம் 51 நிமிடங்களில் பிரான்ஸ் நாட்டு கடல் எல்லையை அடைந்து சாதனை படைத்துள்ளார். இது ஒரு கின்னஸ் சாதனை எனவும் குறிப்பிடப்பட்டப்படுகிறது. முன்னதாக அமெரிக்க விமானப் படையில் கப்டனாகப் பணியாற்றி ஓய்வுபெற்ற 70 வயதுடைய ஜியார்ஜ் புருன்ஸ்டட் என்பவர், கடந்த 2004ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம், ஆங்கிலக் கால்வாயை 15 மணி நேரம் 59 நிமிடங்களில் 21 கடல்மைல்கள் வரை நீந்தி சாதனை படைத்தார். இந்த சாதனையை தற்போது ரோஜர் ஆல்சோப்பால் முறியடிக்க இயலவில்லை. எனினும் ஆங்கிலக் கால்வாயை நீந்தி கடந்த இரண்டாவது முதியவர் என்ற பெருமையினைப் பெற்றுள்ளார்.

## ஆயுதங்களை ஒப்படைப்பதற்கு நேபாள மாவோயிஸ்ட் கட்சி சம்மதம்

அரசின் சிறப்புக்குழுவிடம் ஆயுதங்களை ஒப் படைக்கத் தயாராக இருப்பதாக நேபாள மாவோ யிஸ்ட் கட்சி தெரிவித்துள்ளது. நேபாள ஆட்சி யில் மாவோயிஸ்ட்டுக்களின் கை ஓங்கியுள்ளதை அடுத்து இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

அந்நாட்டில் ஆயுதம் ஏந்திப் போராடி வந்த மாவோ யிஸ்ட்டுக்கள் அமைதி வழிக்குத் திரும்புவோம் எனக்கூறி தேர்தலில் வெற்றி பெற்றனர். எனி னும் ஆயதங்களை அவர்கள் ஒப்படைக்கவில்லை. அவர்களிடம் 7 படைப் பிரிவாக ஆயுதப் பயிற்சி பெற்ற 19,200 வீரர்கள் உள்ளனர். தற்போது அமைதி முயற்சியாக ஆயுதங்களைக் கைவி டத் தயாராக இருப்பதாக மாவோயிஸ்ட்டுக்கள் அறிவித்தனர். இதன்படி மாவோயிஸ்ட் தலை வர்கள் தங்கள் பாதுகாப்புக்காக மாவோயிஸ்ட் படையினரை விலக்கி, பொலிஸ் பாதுகாப்பை ஏற்றுக் கொண்டனர். இதனையடுத்து ஆயுதங் களை ஒப்படைக்கவும் முன்வந்துள்ளனர்.



சீனாவின் பீஜிங் நகரில் உள்ள அதிபர் மாளிகையில் பிலிப் பைன்ஸ் அதிபர் பென்க்னோ அகியுனோ(இடது) அந்நாட்டு அதிபர் ஹூ ஜின்டோவை(வலது) சந்தித்து சீனாவின் சுற்றுலாத் துறை குறித்துப் பேசினார்.

## செசன்யாவில் தற்கொலைத் தாக்குதல்; 8பேர் சாவு

செசன்யாவில் நேற்று முன்தினம் நடை பெற்ற இருவேறு தற்கொலைப்படைத் தாக்குதலில் 8 பேர் இறந்தனர். 22 பேர் காயமடைந்தனர்.

செசன்ய தலைநகர் குரோஸ்னியில் சந்தேகத் துக்குரிய நபர் ஒருவரின் வாகனத்தை பொலி ஸார் சோதனை செய்தபோது முதல் வெடி குண்டுத் தாக்குதல் நடந்துள்ளது. அதைத் தொடர்ந்து இரண்டாவது வெடிகுண்டுத் தாக்குதல் உட னடியாக நடந்தது. இந்த இருதாக்குதல்களிலும் பொலிஸார் உள்பட 8 பேர் உயிரிழந்ததாக செசன்ய அதிபர் ரம்ஸான் கதிரோவ் தெரிவித்துள்ளார்.

2000 ஆம் ஆண்டில் இவர்களது சண்டை முடிவுக்கு வந்தாலும் சில தீவிரவாதக் குழுக்கள் இது போன்ற தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடு பட்டு வ்ருகின்றன. அத்துடன் நாட்டை இஸ்லா மிய நாடாக அறிவிக்கும் முயற்சியிலும் அவர் கள் ஈடுபட்டு வருகின்றனர்.

# சிம்பாப்வேயில் ஒளிந்திருக்கிறார் கடாபி

## இங்கிலாந்து ஊடகங்கள் தகவல்

லிபிய அதிபர் கடாபி சிம் பாப்வேயில் ஒளிந்திருக்கக் கூடும் என்று இங்கிலாந்து ஊடகங்கள் செய்தி வெளி யிட்டுள்ளன.

இது குறித்து இங்கிலாந் தைச் சேர்ந்த நாளி தழான டெய்லி மெயிலில் வெளியி டப்பட்டுள்ள செய்தியில் கூறி யிருப்பதாவது,

கடாபி சிம்பாப்வே அதிபர் ராபர்ட் முகாபேக்கு சொந்த மான ஜெட் விமானத்தில் கடந்த வாரம் சிம்பாப்வேயில் வந்து இறங்கினார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் முகாபேயின் செய்தித் தொடர் பாளர் ஜார்ஜ் சரம்பா இதை மறுத்துள்ளார். கடாபியைப் பார்த்தால், என் சார்பில் நலம் விசாரியுங்கள் என்றும் அவர் கூறினார்.

ஒரு வேளை கடாபி சிம் பாப்வேயில் தஞ்சம் புக அனு மதி கேட்டால் கொடுக்கப் படுமா? என்றதற்கு சரம்பர பதில் அளிக்க வில்லை. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம், கடாபி சிம் பாப்வேயில் தான் பதுங்கி இருக்க வேண்டும் என்று ஏராளமா னோர் கருதுகின்றனர்.

அவர் கடந்த புதன்கிழ மையே ஹராரே வந்துவிட்ட தாகவும் கூறப்படுகிறது. கடந்த புதன்கிழமை ஹராரேவில் மின் வெட்டு ஏற்பட்டது. அது கடாபி வருவதை யாரும் தெரிந்து கொள்ளாமல் இருப்பதற்காகத் தான் என்று சிலர் கருதுகின் றனர்.

முகாபேயின் அரசியல் எதிரி கள் கடாபி சிம்பாப்வேயில் வந்திறங்கியதைப் பார்த்ததாக டெய்லி மெயில் செய்தி வெளி யிட்டுள்ளது. கடாபியுடன் அவ ரது மகன் சைப அல் இஸ்லா மும் தப்பித்திருக்க வேண்டும் என்றும் கூறப்படுகிறது.

கடாபியின் இன்னொரு மகனான கமிஸ் போராட்டத் தில் கொல்லப்பட்டிருக்கலாம் என்று புரட்சிக்காரர்கள் தெரி வித்து வருகின்றமை குறிப் பிடத்தக்கது.

## 6 பெண்களைத் தெரிவு செய்ய அல்குவைதா தீவிரம்

மெல்போர்ன், செப்.1

பல நாட்டின் ரகசியங்களை அம்பலப்படுத்தும் விக்கி லீக்ஸ் இணையத்தளம், இப் போது அல்குவைதா தீவிரவாத அமைப்பு 6 பெண்களைத் தேர்வு செய்யப்போவதாகத் தகவல் வெளியிட்டுள்ளது. இவர்களில் 4 பேர் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்தவர்கள். ஒருவர் பிரிட் டன், மற்றொருவர் பிலிப்ப னோவைச் சேர்ந்தவர் என தகவல் வெளியிட்டுள்ளது.

## ஒரே நாளில் 72 கைதிகளுக்கு மரணதண்டனை

### சிரிய சட்டத்துறைத் தலைவர் தகவல்

சிரியாவில் ஒரே நாளில் 72 கைதிகளுக்கு மரண தண்டனை அளிக்கப்பட்டதாக சிரியாவின் தலைமை சட்டத்துறைத் தலைவர் அட்னன் முகமது பகோர் கூறியுள்ளார் .

சிரியாவில் புரட்சிப் படையினர் அட்னனை கடத்திச் சென்று விட்டதாக திங்கட்கிழமை அந்த நாட்டின் அரசு செய்தி நிறுவனம் தெரிவித்து இருந்தது. அவர் மத்திய நகரமான ஹமாவில் இருந்து பணிக்குச் சென்று கொண்டிருந்த போது கர்னாஸ என்ற கிராமத் தில் வைத்து புரட்சிப்டையினரால் கடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டது.

இந்த நிலையில் அட்னன் பகோர் வீடியோவில் பேசுகையில் ஹமா மத்திய சிறையில் ஜீலை 31 ஆம் திகதி 72 கைதிகள் கொல் லப்பட்டதையும் அவர்களில் அமைதி வழிப் போராட்டக்காரர் களும் இருந்தனர் என்றும் தெரிவித்தார். பொதுப் பூங்காக்களில் உள்ள கல்லறைகளில் 420 உடல்கள் புதைக்கப்பட்டு உள்ளன. அமைதி போராட்டக்காரர்கள் 10 ஆயிரம் பேர் சிறையில் உள்ளனனர். 320 கைதிகள் சித்திரவதை தாங்காமல் மரணம் அடைந்துள்ளனர் என்றும் அவர் வேதனையுடன் குறிப்பிட்டார்.

## திரிபோலியின் தியாகிகள் சதுக்கத்தில் 'ஈத்' பெருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடினர் லிபிய மக்கள்

லிபியத் தலைநகர் திரி போலியில் உள்ள 'தியாகிகள் சதுக் கத்தில்' நேற்றுமுன்தினம் அந் நாட்டு மக்கள் கூடி, 'ஈத் பெரு நாளை' மகிழ்ச்சியுடன் கொண்டா டினர். கடந்த 41 ஆண்டுக்கால அடக்குமுறை ஆட்சி ஒழிந்த தால், இந்தப் பெருநாள் மேலும், மகிழ்ச்சி அளித்ததாக விழாவில் கலந்து கொண்ட மக்கள் தெரி வித்தனர்.

கடந்த 41 ஆண்டுகளில் இந்த நாள் தான் மிகவும் மகிழ்ச்சிகர மான நாள். அடக்குமுறை ஆட்சி ஒழிந்ததை சந்தோஷமாகக் கொண் டாடுவதற்காக இங்கு வந்துள் ளோம்'என்றனர்.

இதற்கிடையில், இடைக் கால அரசின் நான்கு நாள் கெடுவை கடாபி நிராகரித்துள் ளார். இந்தநிலையில், தலை மறைவாக உள்ள கடாபியின் செய்தித் தொடர்பாளர் மூசா இப்ராகிம் விடுத்த அறிக்கை யில்,''இறையாண்மை உள்ள ஒரு நாடு, ஆயுதக் கும்பல் ஒன் றின் கெடுவை ஏற்காது. இடைக் கால அரசு அமைப்பது குறித்து, கடாபி தன் மகன் மூலம் பேச்சு நடத்தத் தயாராக உள்ளார்' என்று தெரிவித்துள்ளார்.

லிபியாவில் அமைதியை நிலைநாட்ட, ஐ.நா., தனது அமைதிப் படையைக் கொண்டு வருவது குறித்து, ஐ.நா.வுக் கான லிபிய துணைத் தூதர் இப்ராகிம் டப்பாசி கூறுகை யில், 'லிபியாவில் நடப்பது உள்நாட்டுச் சண்டையோ, இரு பிரிவினருக்கிடையிலான மோதலோ அல்ல. சர்வாதிகாரத் துக்கு எதிராக மக்கள் தொடுத் துள்ள போர். அதனால் லிபியா விவகாரம் சிறப்பு வாய்ந்த தனியான விவகாரம். இங்கு ஐ.நா. உள்ளிட்ட எந்த ஒரு அன் னியப் படைகளையும் நாங்கள் அனுமதிக்க மாட்டோம்'என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்த்திக் அதிரடி, மணிவண்ணன் துல்லிய பந்து வீச்சு; முக்கோணக்கிண்ணம் ஜொலிஸ்ரார் வசமானது

யாழ்ப்பாணம்,செப்.2

கார்த்திக்கின் அதிரடி ஆட்டம் மணிவண்ணனின் துல்லியமான பந்துவீச்சு இரண்டும் கைகொடுக்க முக்கோண தொடர் வெற்றிக்கிண்ணம் ஜொலிஸ்ரார் வசமானது.

யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் நடத்திய முக்கோண தொடர் வெற்றிக் கிண்ணத்துக்கான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் யாழ். சென்றல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். சென்றல் விளையாட்டுக்கழக அணியினர் 36 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 133 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் கலிஸ்ரன் 27, றஜீவ்குமார் 25, சுதர்சன் 19 ஓட்டங்களைத் தமது அணி சார்பாகப் பெற்றனர்.



மணிவண்ணன்



கார்த்திக்

பந்து வீச்சில் ஜொலிஸ்ரார் அணி வீரர்களான மணிவண்ணன் 7.2 ஓவர்கள் பந்து வீசி 27 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களையும் பகீதரன் 9 ஓவர்கள் பந்து வீசி 18 ஓட்டங்களுக்கு 2 விக் கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

134 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணியினர் 16 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 134 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதில் கார்த்திக் 62 ஓட்டங்களையும் மதுஷன் 31 , கிசோபன் 29 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் யாழ். சென்றல் விளையாட்டுக்கழக அணி சார்பாக விமலகாந் 4 ஓவர்கள் பந்து வீசி 42 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் சுவதீஸ் 5 ஓவர்கள் பந்துவீசி 25 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் யசிந்தன் 4 ஓவர்கள் பந்து வீசி 28 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் 7 விக்கெட்டால் யாழ். சென்றல் விளையாட்டுக் கழகத்தை வெற்றிகொண்டது. இறுதியாட்டத்தில் சிறந்த வீரனாக ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணித் தலைவர் மணிவண்ணன் தெரிவு செய்யப்பட்டார்.

சிறந்த ஆட்டத் தொடர் நாயகனாக யாழ். சென்றல் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த றஜீவ்குமார் தெரிவு செய்யப்பட்டார்.

நடைபெற்று முடிந்த ஆட்டங்களில் சிறந்த வீரர்களாக யாழ். பல்கலைக்கழக அணி வீரன் ஜெயந்தன், ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி வீரன் கார்த்திக், யாழ். சென்றல் விளையாட்டுக்கழக அணி வீரன் றஜீவ்குமார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டு விருது வழங்கப்பட்டது.

பிரதம விருந்தினராக கொமர்ஷல் வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் எஸ்.பி.றஜீவன் கலந்து கொண்டார். (ம-23)

## ஹொக்கிச் சுற்றின் காலிறுதி ஆட்டம்

யாழ்ப்பாணம், செப்.2

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவை நடத்தும் விளையாட்டுக் கழகம், பாடசாலைகளுக்கு இடையிலான ஹொக்கி சுற்றுப் போட்டித் தொடரின் கால் இறுதியாட்டங்கள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை யாழ். பல்கலைக் கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளன.

காலை 7 மணியளவில் இடம்பெறும் முதலாவது கால் இறுதியாட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரியை எதிர்த்து சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.


மாலை 4 மணிக்கு இடம் பெறும் இரண்டாவது கால் இறுதியாட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக அணியை எதிர்த்து யூனியன் கல்லூரி அணி மோதவுள்ளது. (ம-23)

## வடமாகாண விளையாட்டில் வென்ற கிளிநொச்சி வீரர்கள்

விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட வடமாகாண விளையாட்டு விழாவில் கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து பங்குபற்றி வெற்றியீட்டியவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:

பெருமாள்தேவி - 42 கிலோமீற்றர் மரதன் ஓட்டம் முதலாமிடம், ஊர் கடந்து ஓடுதல் முதலாமிடம், 10 ஆயிரம் மீற்றர் ஓட்டம் இரண்டாமிடம், 5 ஆயிரம் மீற்றர் ஓட்டம் இரண்டாமிடம்.

வி.லோகதரன்- ஊர் கடந்து ஓடுதல் 2 ஆம் இடம், எஸ். துசிந்தா - முப்பாய்ச்சல் இரண்டாமிடம், 400 மீற்றர் ஓட்டத்தில் மூன்றாமிடம், ரி.நிதர்சன் - ஈட்டி எறிதல் மூன்றாமிடம், கே.லக்கிரன்- தட்டெறிதல் மூன்றாமிடம், எஸ். சர்மிளா- உயரம் பாய்தல் மூன்றாமிடம். (ம-23)



கிறீன் பீல்ட் சனசமூக நிலைய மண்டபத்தில் ஆசிரியர் அன்ரோடினேஸ் கராத்தே பயிற்சிகளைக் கடந்த புதன்கிழமை வழங் கினார். மண்ணிறப் பட்டி, கறுப்பு நிறப் பட்டி கராத்தே வீரர்களுக்கான ஒரு நாள் பயிற்சி முகாமில் பங்கு கொண்ட கராத்தே வீரர்கள், பயிற்றுநர் ஆசிரியருடன் உள்ளனர். (ம-23)

## கிரிக்கெட் சுற்றில் நாளை மோதும் அணிகள்

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையால் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையே நடத்தப்படும் மட்டுப்படுத்தப்பட்ட 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் நாளை சனிக்கிழமை யாழ். பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து கழுகுகள் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது? (ம-23)

## யாழ்.மாவட்ட ரீதியில் 30 பந்துப் பரிமாற்ற கிரிக்கெட்

யாழ்ப்பாணம், செப்.2

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தின் வெள்ளி விழாவை முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியில் 30 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

முதல் நாள் ஆட்டத்தில் பங்கு கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

*காலை 8.30 மணி- ஸ்ரான்லி விளையாட்டுக் கழகம் எதிர் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழக 'ஏ' பிரிவு.

*நண்பகல் ஒரு மணி- ஸ்கந்தஸ்ரார் விளையாட்டுக் கழகம் எதிர் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழக 'பி'பிரிவு. (ம-23)

## தேசிய மட்ட தடகளப் போட்டிகள் பங்குகொள்ளும் வீரருக்கு பயிற்சி

யாழ்ப்பாணம், செப்.2

தியகமவில் அமைந்துள்ள மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு மைதானத்தில் எதிர்வரும் 8,9,10 ஆம் திகதிகளில் 37 ஆவது தேசிய மட்ட தடகளப் போட்டிகள் இடம் பெறவுள்ளன.

இந்தப் போட்டிகளில் பங்கு கொள்ளவிருக்கும் வட மாகாண அஞ்சல் ஓட்ட வீர, வீராங்கனைகளுக்கான இரு நாள் பயிற்சி முகாம் கடந்த புதன்கிழமையும் வியாழக்கிழமையும் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், யாழ். மாவட்டங்களைச் சேர்ந்த 30 இற்கும் மேற்பட்ட அஞ்சல் ஓட்ட வீர, வீராங்கனைகள் பங்கு கொண்டனர்.



இவர்களுக்கான பயிற்சியை கிளிநொச்சி மாவட்ட மெய்வன்மைப் பயிற்றுவிப்பாளர் என். முகுந்தன் வவுனியா மாவட்ட மெய்வன்மை பயிற்றுநர் க.விஜிதரன், யாழ்.மாவட்ட மெய்வன்மை பயிற்றுநர் எஸ். மோகனதாஸ் ஆகியோர் வழங்கினர். (ம-23)

## உருத்திரபுரம் உழவர் ஒன்றிய வி.கவின் விலகல் முறையிலான உதைபந்தாட்டம்

கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையே உருத்திரபுரம் உழவர் ஒன்றியத்தால் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி நடத்தப்படவுள்ளது.

உருத்திரபுரம் உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழகம் நடத்தும் 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான இந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் நாளை சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

மீள்குடியமர்ந்த பின்னர் மீள்புனரமைப்பு செய்யப்பட்ட உருத்திரபுரம் உழவர் ஒன்றிய விளையாட்டு மைதானத்தில் போட்டிகள் இடம்பெறவுள்ளன. காலை தொடக்கம் மாலை வரை போட்டிகள் இடம்பெறவுள்ளன.

முதல்நாள் ஆட்டத்தில் பங்குகொள்ளவுள்ள் விளையாட்டுக் கழகங்களின் விவரங்கள் வருமாறு:

* காலை 7.30 மணி- பரந்தன் மத்திய விளையாட்டுக் கழகம் எதிர் திருநகர் விளையாட்டுக்கழகம்.

* காலை 9 மணி- நண்பர்கள் விளையாட்டுக்கழகம் எதிர் உருத்திரபுரம் நண்பர்கள் விளையாட்டுக்கழகம்.

* முற்பகல் 10.30 மணி- பிறைக்சன் விளையாட்டுக்கழகம் எதிர் இளந்தளிர் விளையாட்டுக்கழகம்.


* பிற்பகல் 2 மணி - செந்தாரகை விளையாட்டுக்கழகம் எதிர் இளைஞர் வட்டம் விளையாட்டுக்கழகம்.


* பிற்பகல் 3.30 மணி- ஜெகமீட்பர் விளையாட்டுக்கழகம் எதிர் இளம்பறவை விளையாட்டுக்கழகம். (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் நிரூபிக்கும் இலங்கை அணி!

"முதல் இன்னிங்ஸில் 105 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது"





முதலாவது இன்னிங்ஸில் இலங்கை அணி 105 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்து ஆஸ்திரேலிய அணியிடம் அடி பணிந்தது. தனது இரண்டாவது இன்னிங்ஸை நேற்று ஆரம்பித்த ஆஸி. அணி ஆட்டநேர முடிவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 115 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டுள்ளது. உஸ்மான் 2 ஓட்டங்களுடனும், ஜோன்ஸன் 3 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். பந்து வீச்சில் இலங்கை அணி சார்பாக ஹேரத் 3 விக்கெட்டுக்களை சரித்தார்.

இலங்கை அணிக்கும், ஆஸ்திரேலிய அணிக்குமிடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டம் காலியில் நேற்று முன்தினம் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸி. அணி முதலில் துடுப்பெடுத்தாடுவதாக அறிவித்தது.

அதன்படி துடுப்பெடுத்தாடிய ஆஸி. அணி தனது முதலாவது இன்னிங்ஸிற்காக 273 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. அந்த அணி சார்பில் மைக்கல் ஹஸி 95 ஓட்டங்களையும், பொன்டிங் 44 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றுக் கொடுத்தனர். ஏனையோர் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினர். பந்து வீச்சில் இலங்கை அணி சார்பில் ஹேரத் 54 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும், லக்மல் 55 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும், ரன்டீவ் 2 விக்கெட்டுக்களையும், வெலகெதர, டில்ஷான் தலா ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் தனது முதலாவது இன்னிங்ஸை நேற்றுக் காலை ஆரம்பித்த இலங்கை அணி தனது விக்கெட்டுக்களை சீரான இடைவெளியில் இழந்தது. ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்கள் மட்டுமே இரட்டை இலக்க ஓட்டங்களை எட்டினர்.


ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக பரணவிதாரன - டில்ஷான் களமிறங்கினர். டில்ஷான் 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறி இலங்கையின் சரிவை ஆரம்பித்து வைத்தார். சங்ககார 10 ஓட்டங்களுடனும், மஹேல 11 ஓட்டங்களுடன் ரன் அவுட் மூலமும் ஆட்டமிழந்து வெளியேறினர். 44 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை இழந்தது இலங்கை அணி. சமரவீர - பரணவிதாரன இருவரும் இணைந்து அணியை மீட்கப் போராடினர். 4 ஆவது விக்கெட்டுக்காக 43 ஓட்டங்களைப் பகிர்ந்த நிலையில் சமரவீரவின் விக்கெட் வீழ்த்தப்பட்டது.



சமரவீர 26 ஓட்டங்களுடன் வொட்ஸனின் பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேற அதே ஓவரின் இறுதிப் பந்தில் பிரசன்ன ஜெயவர்தன ஓட்டமெதனையும் பெறாத நிலையில் ஆட்டமிழந்து வெளியேறினார். இலங்கை அணி 88 ஓட்டங்களைப் பெற்ற போது பரணவிதாரன 29 ஓட்டங்களுடன் 6 ஆவது விக்கெட்டாக வீழ்த்தப்பட்டார்.

பின்வரிசையில் மத்தியூஸ் 5 ஓட்டங்களையும், ரன்டீவ் 9 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க இலங்கை அணி 50 ஓவர்களில் 105 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. ஆஸி சார்பில் பந்து வீச்சில், முதலாவது அறிமுக டெஸ்ட் ஆட்டத்தில் விளையாடும் சுழல் பந்து வீச்சாளர் நதன் லயோன் 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். வொட்ஸன் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

168 ஓட்டங்கள் முன்னிலையுடன் நேற்றைய தினம் தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய ஆஸி. அணிக்கு, இலங்கை அணி ஆரம்பத்திலேயே அதிர்ச்சி கொடுத்தது. இரண்டாவது இன்னிங்ஸின் முதலாவது பந்தினை வெலகெதர வீச, வொட்ஸன் ஆட்டமிழந்து வெளியேறினார். தொடர்ந்து லக்மலின் பந்து வீச்சில் பொன்டிங் 4 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து வெளியேறினர். மூன்றாவது விக்கெட்டுக்காக அணித்தலைவர் கிளார்க்குடன், ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஹியூயெஸ் இணைந்து சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினர். 56 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்த நிலையில் ஹியூயெஸ் 28 ஓட்டங்களுடன் டில்ஷானின் பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார். முதலாவது இன்னிங்ஸில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய மைக்கல் ஹஸியுடன், கிளார்க் இணைந்து 4 ஆவது விக்கெட்டுக்காக சிறப்பாக ஆடினர். சிறப்பாக துடுப்பெடுத்தாடிய கிளார்க் டெஸ்ட் அரங்கில் தனது 21 ஆவது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார். இறுதியில் 80 பந்துகளில் 7 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக 60 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். கிளார்க் ஆட்டமிழந்த அடுத்த பந்து வீச்சிலேயே ஹஸியும் 15 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். தொடர்ந்து நுழைந்த ஹடின் ஓட்டமெதனையும் பெறாத நிலையில் ஹேரத்தின் பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார்.



## நாங்களும் சளைத்தவர்களில்லை!

"ஆஸி அணி இரண்டாவது இன்னிங்ஸில் 6 விக்கெட் இழப்புக்கு 115 ஓட்டங்களைப் பெற்றுள்ளது."

இறுதியில் நேற்றைய ஆட்டம் முடிவடையும்போது ஆஸி. அணி தனது இரண்டாவது இன்னிங்ஸிற்காக 33.5 ஓவர்களில் 115 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களை இழந்துள்ளது. உஸ்மான் 2 ஓட்டங்களுடனும், ஜோன்ஸன் 3 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். பந்து வீச்சில் இலங்கை அணி சார்பாக ஹேரத் 3 விக்கெட்டுக்களையும், வெலகெதர, லக்மல், டில்ஷான் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இலங்கை அணியைவிட ஆஸி. அணி 283 ஓட்டங்கள் முன்னிலை பெற்றுள்ளது. இன்று ஆட்டத்தின் மூன்றாவது நாளாகும். (15)

# தோல்வியே நிரந்தரமோ?

"டெஸ்ட் தொடரையும், தரவரிசையில் முதலிடத்தையும் இழந்து தவிக்கும் இந்திய அணிக்கு ரி-20 ஆட்டத்திலும் ஆப்பு வைத்தது இங்கிலாந்து"

இங்கிலாந்து மண்ணில், டோனி தலைமையிலான இந்திய அணி மீண்டும் ஒரு தோல்வியை தழுவியுள்ளது. டெஸ்ட் தொடரை தொடர்ந்து, 'ரி-20' ஆட்டத்திலும் தோல்வி அடைந்தது.

அபாரமாக ஆடிய இங்கிலாந்து அணி 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் அசத்தல் வெற்றி பெற்றது.

இந்தியா, இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஒரே ஒரு 'ரி-20' ஆட்டம் மான்செஸ்டர் நகரில் நேற்று முன்தினம் நடந்தது. இந்திய அணியில், சிரேஷ்ட வீரர் டிராவிட் மற்றும் அஜின்கியா ரகானே அறிமுக வீரர்களாக களமிறங்கினர். இங்கிலாந்து அணியில், அலெக்ஸ் ஹேல்ஸ் மற்றும் ஜோஸ் பட்லர் புதுமுக வீரர்களாக விளையாடினர்.



நாணய சுழற்சியில் வென்ற இந்திய அணித் தலைவர் டோனி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு பார்த்திவ் படேல், அஜின்கியா ரகானே ஜோடி நல்ல ஆரம்பத்தை அளித்தது. முதல் விக்கெட்டுக்கு 39 ஓட்டங்கள் குவித்த போது, பார்த்திவ் (10) ஆட்டமிழந்தார். பின்னர் டிராவிட்டுடன் இணைந்த ரகானே அதிரடியாக அரைசதம் அடித்தார். சமித் படேல் வீசிய ஆட்டத்தின் 11 ஆவது ஓவரில் 'ஹற்றிக் சிக்சர்' விளாசிய டிராவிட் (31) ஆறுதல் அளித்தார். இந்த ஜோடி, 2 ஆவது விக்கெட்டுக்கு 65 ஓட்டங்கள் சேர்த்தது. அபாரமாக ஆடிய ரகானே, 39 பந்தில் 8 பவுண்டரிகள் உட்பட 61 ஓட்டங்கள் எடுத்தார்.

தொடர்ந்து களமிறங்கிய விராத் ஹோக்லி (4), ரோகித் சர்மா (1), டோனி (8), அஷ்வின் (4) சொற்ப ஓட்டங்களில் வெளியேறினர். பொறுப்பாக ஆடிய சுரேஷ் ரெய்னா (33), பிரஸ்னன் வீசிய ஆட்டத்தின் 17 ஆவது ஓவரில் இரண்டு சிக்ஸர்கள் அடித்து ஆறுதல் அளித்தார். பிரவீண்குமார் (1), முனாப் பட்டேல் (0) ஏமாற்ற, இந்திய அணி 19.4 ஓவர்களில் 165 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. இங்கிலாந்து சார்பில் டெர்ன்பக் 4, பிராட் 2, பிரஸ்னன், சுவான், போபரா தலா ஒரு விக்கெட்டை கைப்பற்றினர்.

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய இங்கிலாந்து அணிக்கு முதல் ஓவரிலேயே அதிர்ச்சி காத்திருந்தது. பிரவீண்குமார் வேகத்தில் அறிமுக வீரர் ஹேல்ஸ் ஆட்டமிழந்தார். பின்னர் இணைந்த கீஸ்வெட்டர், கெவின் பீற்றர்சன் ஜோடி பொறுப்பாக ஆடியது. இரண்டாவது விக்கெட்டுக்கு 58 ஓட்டங்கள் சேர்த்த போது, கீஸ்வெட்டர் (18), முனாப் வேகத்தில் வெளியேறினார். அபாரமாக ஆடிய பீட்டர்சன் (33), ஹோக்லி பந்தில் ஆட்டமிழந்தார்.

பின்னர் இணைந்த இயன் மோர்கன், ரவி போபரா ஜோடி அபார ஆட்டத்தை வெளிப்படுத்தியது. இந்த ஜோடி, 4 ஆவது விக்கெட்டுக்கு 73 ஓட்டங்கள் சேர்த்த போது, மோர்கன் (49) அரைசத வாய்ப்பை இழந்தார். அடுத்து இணைந்த ரவி போபரா, சமித் படேல் ஜோடி ஆட்டத்தை கையில் எடுத்துக் கொண்டது. இறுதி ஓவரில் 10 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில், சமித் படேல் 'ஹற்றிக்' பவுண்டரி அடித்து வெற்றிக்கு வித்திட்டார். இங்கிலாந்து அணி 19.3 ஓவரில் 4 விக்கெட்டுக்களுக்கு 169 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. போபரா (31), சமித் படேல் (25) ஆட்டமிழக்காமல் இருந்தனர். இந்தியா சார்பில் முனாப் படேல் 2, பிரவீண், ஹோக்லி தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர். ஆட்டநாயகன் விருதை இங்கிலாந்தின் டெர்ன்பக் பெற்றார். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கிளி. அருள்மிகு கந்தசுவாமி ஆலய மஹோற்சவம்

மேற்படி ஆலயத்தின் மஹோற்சவம் 03.09.2011 சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் 11 நாள் திருவிழா நடைபெற திருவருள் கூடியுள்ளது.


- 03.09.2011 சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றம்
- 10.09.2011 சனிக்கிழமை சப்பறத் திருவிழா
- 11.09.2011 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த் திருவிழா
- 12.09.2011 திங்கட்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தத் திருவிழா
- 13.09.2011 செவ்வாய்க்கிழமை பூங்காவனத்திருவிழா

காலை எம்பெருமானுக்கு 1008 சங்காபிஷேகமும் மாலை திருக்கல்யாண திருவிழாவுடன் திருவிழா நிறைவுபெறும் என்பதை அறியத்தருவதோடு இந்த மஹோற்சவ விழாவுக்கு அடியார்கள் எல்லோரும் சமுகம் தந்து எம்பெருமான் கருணையைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: திருவிழா 11 நாளும் அன்னதான ஒழுங்கும் செய்துள்ளோம்.

தொ.பே. : 0770878634

தேவஸ்தான பரிபாலன சபையினரும் உபயகாரர்களும்



## மதுரா அழகுக்கலைப் பயிற்சி நிலையம்

(கோப்பாய் நாவலர் பாடசாலை அருகில்)

புதிய பிரிவுகள் ஆரம்பம் 04.09.2011
பிரிவு -1 முற்பகல் 10.00 மணி
பிரிவு - 2 பிற்பகல் 3.00 மணி

அழகுக்கலைப் பயிற்சி (டிப்ளோமா) தையல், கேக்ஜசிங், சாறிவேக்ஸ் ஆகிய பயிற்சிகள் நடைபெறுகின்றன. பயிற்சியில் இணைய விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

ஓடர்களும் ஏற்றுக்கொள்ளப்படும். (மேக்கப், பேசியல், கேக்ஜசிங்)

தொடர்புகளுக்கு: 0213214013
மதுரா அழகுக்கலைப் பயிற்சி நிலையம் (பழைய வீதி, கோப்பாய்)

## காணி விற்பனைக்கு

நல்லூர் கோயிலுக்கு அருகில் செட்டித்தெருவில் இரண்டு பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0777847907, 0772078469

## மரண அறிவித்தல்கள்

### கனகலிங்கம் இராசாத்தியம்மா



கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் சங்குவேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கனகலிங்கம் இராசாத்தியம்மா நேற்று (01.09.2011) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா-சிவக்கொழுந்து தம்பதிகளின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னையா-அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் இராசமலர் (உப அஞ்சல் அதிபர் சங்குவேலி) றஞ்சிதமலர், இந்திரமலர் (ஆசிரியை பண்டத்தரிப்பு, பிரான்பற்றுக் கலைமகள் வித்தியாசாலை) ஆகியோரின் பாசமிகு தாயும் கணபதிப்பிள்ளை ஜெயதாசின் அன்பு மாமியும் சபித்தா (முன்பள்ளி ஆசிரியை, உடுவில் இந்து இளைஞர் மன் றம்), விருஷிகா, ஹர்ஜன், அலெக்ஷா, நிந்துகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் புவனேஸ்வரி, துரைசிங்கம், முத்துலிங்கம், பரராஜசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.09.2011) வெள்ளிக்கிழமை பி.ப. 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சங்குவேலி வடக்கு, மானிப்பாய்.*

*தகவல்:* குடும்பத்தினர்.

### ஆறுமுகம் சிவபாக்கியம்



இடைப்பிட்டி காரைநகரைச் சேர்ந்த ஆறுமுகம் சிவபாக்கியம் நேற்று (01.09.2011) வியாழக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் கோணமலை அம்பலவாணர் ஆறுமுகத்தின் அன்பு மனைவியாவார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இடைப்பிட்டி காரைநகர்.*

*தகவல்:* ஆ.சுப்பிரமணியம் (மகன்).

## நான் ஓர் ...

*(14 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

அமைப்பினர் அதனைத் தவறாகப் பயன்படுத்தினார்கள்.

**1987இல் நீங்கள் தேசிய அரசியலுக்குள் நுழைந்தீர்கள். பின்னர் சந்திரிகாவுடன் இணைந்தீர்கள். வந்தவழியைத் திரும்பிப் பார்க்கும்போது, உங்கள் முடிவு குறித்துத் திருப்திப்படுகிறீர்களா?**

ஆம்! சர்வநிச்சயமாக. இந்தத் தடவை தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இனவாதப் பிரசாரத்தில் ஈடுபட்டது - சங்கிலியன் புத்தா. தமிழ் ஊடகத்துறையினர் கற்பனாவாதங்களுக்கு அதிகம் இடம்கொடுத்தார்கள். ஒன்றிணைந்த சிறிலங்காவுக்காக நான் என்றும் உறுதியாக நிற்கிறேன்; அவர்கள் அதற்குச் சவால் விடுகிறார்கள்.

**அரசியல் தீர்வு ஒன்றை எட்டுவதற்கு 6 மாத காலம் மட்டும் போதும் என்று நீங்கள் கருதுகிறீர்களா?**

ஆம்! இது மற்றொரு பொன்னான வாய்ப்பு; அதனை இழந்துவிடாதீர்கள் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு நான் சொல்லி இருக்கிறேன். நடைமுறைச் சாத்தியமான ஒரு தீர்வை நாம் முன்வைக்க வேண்டும்; அப்படியே அரசு ஏமாற்றினால் அரசு இப்படித்தான் நடந்துகொள்கிறது என்று வெளி உலகுக்கும் மக்களுக்கும் வெளிப்படுத்துவோம் என்று சொல்லி இருக்கிறேன்.

**அவர்களின் பதில் என்ன?**

அவர்களுக்குப் பிரச்சினைகள் தீரவேண்டாம். வன்னிப் போரின் போதுகூட நான் அவர்களிடம் சொன்னேன், ''இப்போது கிழக்குப் போய்விட்டது; அழிவுகளில் இருந்து வடக்கையாவது மீட்க வேண்டும். நீங்கள் ஜனாதிபதியிடம் பேசுங்கள். நான் அதற்கான கூட்டத்தை ஏற்பாடு செய்து தருகிறேன். எல்லோருமாகப் பிரச்சினையைத் தீர்க்க முனையலாம்'' என்று சொன்னேன். அவர்கள் எல்லாவற்றுக்கும் ''ஓம்! ஓம்!'' என்று போட்டு அதனைக் கைவிட்டார்கள். இப்போது அவர்கள் முதலைக் கண்ணீர் வடிக்கிறார்கள்.

**புலிகளுடன் பேசாமல் போரை எப்படி முடிவுக்குக் கொண்டு வந்திருக்க முடியும்?**

நான் அவர்களிடம் (கூட்டமைப்புக்கு) புலிகளையும் அழைத்து வாருங்கள் என்றுதான் சொன்னேன். கூட்டமைப்புத்தான் புலிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தியது. ஜனாதிபதியாக வந்தபோது, தான் புலிகளுடன் பேசத் தயாராக இருக்கிறார் என்று மஹிந்த ராஜபக்ஷ அறிவித்திருந்தார். ஒவ்வொரு ஜனாதிபதிகளும் பிரச்சினையைத் தீர்க்க முயற்சி செய்திருக்கிறார்கள். யார் அவர்களுக்குச் சந்தர்ப்பத்தை வழங்காமல் விட்டவர்கள்? கூட்டமைப்பினரும் புலிகளும் தான்.

**தமிழ் ஆயுதக் குழுக்களின் பயணத்தில் தற்போதும் உயிருடன் இருக்கும் ஒரே தலைவர் நீங்கள்தான். கடந்த கால நினைவுகளுடன், தமிழ் ஆயுதப் போராட்ட வரலாற்றைத் திரும்பிப் பார்க்கும்போது எப்படியிருக்கிறது?**

ஆமாம்! ஆமாம்! சிலசமயங்களில், பழையவற்றை நினைத்துப் பார்க்கும்போது நான் மட்டுமே உயிருடன் இருக்கிறேன் என்பது ஆச்சரியமளிக்கிறது.

**எப்படி நீங்கள் மட்டும் வாழ முடிந்தது?**

தமிழில் ஒரு பழமொழி இருக்கிறது, பாம்பின் கால் பாம்பறியும் என்று. இது என்னுடைய இடம், இங்கேதான் நான் படுத்து எழும்பினேன். இது ஒரு பதுங்கு குழி என்று மக்கள் சொல்லக்கூடும். நீங்களே பாருங்கள் இது ஒரு பதுங்கு குழியா? நான் விழிப்பாக இருந்ததனால் நான் வாழ்கிறேன். என்னைச் சுற்றி இருந்தவர்களும் உசாராக இருந்தார்கள். நான் எப்போதும் புலிகளுக்கு ஒருபடி முன்னே இருந்தேன்.

## விற்பனைக்கு

தச்சுவேலை இயந்திரம் விற்பனைக்குண்டு. நிலை, யன்னல், வளைவுகள் (ஆச்), செடிப்பலகை முதலியன வெட்டலாம்.

தொடர்புகளுக்கு: 0771319151

## SPOKEN ENGLISH WITH DIPLOMA CERTIFICATE

புதிய பிரிவு ஆரம்பம் : 05.09.2011 திங்கள்

A/L எழுதிய மாணவர்கள், பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்கள் பட்டதாரிகள் கலந்துகொள்ளலாம்

வார வகுப்பு - 1 மாதம் | சனி, ஞாயிறு வகுப்பு - 3 மாதம்

MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505

## கோழிக்குஞ்சு விநியோகம்

02.09.2011 இல் விநியோகிக்க இருந்த பை ரகா புறொயிலர் குஞ்சுகள் 06.09.2011 இலும் NEEL FARM சிவப்பு பேட்டு குஞ்சுகள் 07.09.2011 இலும் [illegible]

T.P 0772336834 [illegible]

## After A/L >>Be a Degree Holder in Medical Field

Learn SLMCouncil Approved Pharmacy Pro.

நீங்கள் வேறு உயர் படிப்புக்களை மேற்கொள்பவராயினும் அரச/தனியார் தொழில் புரிபவராயினும்.மேலதிக நிரந்தர வருமானத்துக்காக கல்வித்தகமையையும் பெற...

## HND in Pharmacy

Want a Government Job,Or Work in UK ?
Be a world Recognized Degree Holder !

மருத்துவக்கல்வியின் முன்னோடிகளிடமிருந்து மருந்தாளர் பயிற்சி நெறி-02 - 17/09/2011

Lectures by MBBS Doctors
Guidance from Qualified Pharmacists
Internship Arrangements Free of Charge

**Application Closing Date : 15/09/2010**

Mode of Study : Part Time/Week end Classes
Entry Requirements: Pass in Chemistry in G.C.E A/L(3 s)

Come directly for details
Call for appointments only :0777302882

## Knowledge Universe

Malaysian College of Business and IT

Tel: 0777302882 |# 75,Temple Road,Jaffna | www.kugroup.info

இல 75,கோவில் வீதி,யாழ்ப்பாணம்.(லாவா வைத்தியசாலை மேல்மாடி)

## மரண அறிவித்தல்

### அருளப்பு தார்சியஸ் (அழகு)

(உரிமையாளர் - அழகு சைக்கிள் கடை )



யாழ்ப்பாணம் 33/14 அடப்பன் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அருளப்பு தார்சியஸ் நேற்று (01.09.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருளப்பு தம்பதியரின் அன்பு மகனும், லூர்த்தம்மாவின் அன்புக் கணவரும், சுனித்தா, சுகனியா, அனுசா, தனா, அன்ரனிதாஸ், அலன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், அன்ரன், மெக்சி, பானுசுரன், சுஜீவன் ஆகியோரின் மாமனும், அபிஷேக், ஷெரின், தன்சயன், புளோசா, கிளாரா, சாறா, ஆகாஷ், கவிநயா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய அறிவித்தல் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*33/14 அடப்பன் வீதி, யாழ்ப்பாணம்.*

*தகவல்:* குடும்பத்தினர்.



''மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்''

### கோப்பாய் பழைய வீதி, நாச்சிமார் கோயில்.

வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டு நடத்தப்படும் சமய அறிவுப் போட்டி 2011

### போட்டி விதிகள்

01.இந்தப்போட்டியில் அனைவரும் பங்கு பற்றலாம்.
02.பாடசாலை மாணவராயின் தங்கள் விடைத்தாள்களில் தங்கள் பாடசாலைப் பெயரையும் குறிப்பிடவும்.
03.போட்டியில் வெற்றி பெறுவோருக்கு முதல் மூன்று பரிசில்களைத் தவிர மேலும் பத்து ஆறுதல் பரிசில்கள் வழங்கப்படும்.
04.போட்டி முடிவுத்திகதி: 05.09.2011 திங்கட்கிழமை.
05.விடைகள் "சமய அறிவுப் போட்டி விடைகள்" என கடித உறையின் மேல் பக்கத்தில் குறிப்பிட்டு நாச்சிமார் கோயில், பழைய வீதி, கோப்பாய் என்னும் முகவரிக்கு நேரிலோ தபாலிலோ அனுப்பி வைக்கலாம்.
06. போட்டி அமைப்பாளர்களின் தீர்ப்பே முடிவானது.
07.வெற்றி பெற்றோருக்கான பரிசில்கள் ஆலயத்தின் பூங்காவனத் திருவிழாவன்றுவழங்கப்படும்.
08.வினாத்தாள்கள் பெறவிரும்புவோர் பிரதி ஒன்றுக்கு ரூபா: 15 செலுத்தி நேரிலோ தபால் மூலமோ பெற்றுக் கொள்ளலாம்.

வலி.கிழக்கு சைவ சமய அருள்நெறி மன்றம்,
வீரபத்திர கோயிலடி, கோப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருமாறு:-

அரசு, அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டுவிட்டது என ஆடம்பரமாக அறிவித்தது. அதன் பயன் மக்களுக்கு சென்றடைய முன்னர் அவசரகாலச் சட்டத்திலுள்ள விதிமுறைகளை பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் புகுத்தியுள்ளது என நாம் அறிந்துள்ளோம்.

அரசின் இந்த நடவடிக்கையானது அநீதியான விடய மாகும். தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக அரசுக்கு உண்மையாகவே கரிசனை இல்லை. அதனால்தான் பயங்கரவாத தடைச்சட்டத்தில் புதிய ஒழுங்குவிதிகளை புகுத்தியுள்ளது. அவர்களைத் தொடர்ந்து சிறை வைக்க முனைகிறது.

வடக்கு - கிழக்கில் இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியமர்த்துகின்றோம் என மார்தட்டும் அரசு, தொடர்ந்தும் அதிஉயர் பாதுகாப்பு வலயங்களை தக்கவைத்துக்கொண்டால் அப்பிரதேசங்களிலிருந்து இடம்பெயர்ந்த மக்களை எங்கு மீள்குடியமர்த்துவது என நாம் கேட்கின்றோம்?

அவசரகாலச் சட்டத்தை நீக்கியதன் பின்னர் அரசு முன்னெடுக் கும் நடவடிக்கைகளானது உண்மையாகவே அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டுள்ளதா என எம்மை சிந்திக்க வைக்கின்றது - என்றார். (த-சி)

## பலாலி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் நிறைவடைந்தபின்னர் விசேட விமான சேவைகளை ஆரம்பிக்க அரசு எதிர்பார்த்துள்ளது.

பலாலி விமான நிலையத்தின் விஸ்தரிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று வெளியான தகவல்கள் தொடர்பாக யாழ். கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த் ஹத்துருசிங்கவிடம் கேட்டபோது, "நாட்டில் யுத்தம் நிறை வடைந்துள்ளது. அபிவிருத்தியை நோக்கி நாம் பயணிக்கின்றோம். நாட்டின் அபிவிருத்தி கருதியே விமான நிலையம் விஸ்தரிக்கப் படுகின்றது - என்றார்.


**காணி விற்பனைக்கு**

மீசாலை மடத்தடி வீதியில் ஐயா கடையிலிருந் து ஏறத்தாழ 200m தூரத்தில் நிலப்பரப்பு 10 விஸ்தீரணம் கொண்ட காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0776090931, 0773238033


# மரண அறிவித்தல்கள்

## நடேசன் தணிகைநாயகி



வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், புத்தூர் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட நடேசன் தணிகைநாயகி நேற்று 01.09.2011 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - மற்றும் பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இளைய தம்பி - முத்தாச்சி தம்பதியரின் மருமகளும், நடேசனின் அன்பு மனைவியும், சந்திரலேகா, நந்தகுமார் (யாழ். இடைக்காடு மகாவித்தியாலயம், ஊழியர்), கௌசல்யா (ஆசிரியை,வவுனியா தவசியாகுளம் அ.த.க பாடசாலை, ) கோணேஸ்வரி (ஆசிரியை,யாழ். மண்டைதீவு மகாவித்தியாலயம்), உதயகுமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும், நாகராஜா (குவைத்), காந்தரூபன் (தபாலகம்- மானிப்பாய்), குணவதி ஆகியோரின் அன்பு மாமியும், கீர்த்தனா, தனுஷாந், வேணுஷன், சதுர்சன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.09.2011) பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சிறுப்பிட்டி கிந்துசிட்டி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

தகவல்:
குடும்பத்தினர்,
இ.நடேசன்

## திருமதி பழினியாண்டி ஆச்சாரி சிவகாமி



கொழும்பைப் பிறப்பிடமாகவும் 185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பழனியாண்டி சிவகாமி நேற்று 01.09.2011 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மந்திரம் ஆச்சாரி - கமலாஆச்சி தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான பத்மநாதன்ஆச்சாரி - ராமலெட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், ராமலெட்சுமி, சித்திரா, காலஞ்சென்ற விஸ்வநாதன் மற்றும் பார்த்தீபன் ஆகியோரின் பாசமிகு தாயும், மோகன் ஆச்சாரி, பாலஆச்சாரியின் மாமியும், அபிராமி, சங்கரி, கஜானன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.09.2011) வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

185, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## அவசர காலச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தது. இதன் பிரதிபலனாக இன்று அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டுள்ளது. ஆனால், ஜனநாயகத்துக்காக அவசரகாலச் சட்டத்தை உண்மையாக அரசு நீக்கியுள்ளதா என்ற சந்தேகம் எமக்கு ஏற்பட்டுள்ளது.

கடந்த ஓகஸ்ட் 6ஆம் திகதி அனைத்து மாவட்டங்களிலும், எச்சந்தர்ப்பத்திலும் முப்படையினரை கடமையில் ஈடுபடுத்தும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்படவுள்ளது என அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலொன்று விடுக்கப்பட்டது. அதன் ஊடாக பொலிஸ் அதிகாரம் இராணுவத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

கருணா, கே.பி., ஜோர்ஜ் மாஸ்டர், தயா மாஸ்டர் ஆகிய முக்கிய புலி உறுப் பினர்களுக்கு அரச பதவிகளை வழங்கி, அவர்களை பாதுகாத்து வருகிறது அரசு. ஆனால், அவர்களுக் குக் கீழ் இருந்தவர்களை எவ்வித விசாரணைகளின்றி சிறைகளில் நீண்ட காலமாக அரசு அடைத்து வைத்துள்ளது. இது அநீதி யாகும். தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவேண்டும்.

தமிழ் அரசியல் கைதிகளை தொடர்ந்து தடுப்பில் வைப்பதற்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவதற்கும் பயங்கரவாத தடைச் சட்டம் அமுல் படுத்தப்பட வில்லை. இச்சட்டத்தின்கீழ் நீதிமன்றத் தில் சோதனை செய்யும் அனுமதியைப் பெறாமல் சோதனைகளை மேற்கொள்ளவும், சிவிலியன்களைக் கைது செய்யவும், வழக்கு இன்றி 18 மாதங்களுக்குத் தடுப்பில் வைக்கவும், பொலிஸார் மீதான தாக்குதல், போராட்டங்களில் ஈடுபடுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவும் இச்சட்டம் அமுல்படுத்தப் படவுள்ளது.

மக்களின் தொடர் போராட்டங்களில் அவசரகாலச் சட்டத்தை அரசு நீக்கியது. ஆனால், அதற்குப் பதிலாக மிகவும் பயங்கரமான சட்டத்தை அரசு அமுல் படுத்தியுள்ளது. பொலிஸாரின் நட வடிக்கை பொறுப்புகளை அரசு இராணுவத்துக்கு ஒப்படைத்துள்ளது. - என்றார். (த-சி)

## போர்க்குற்றச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யொன்றை ஐரோப்பிய நாடுகளில் வாழும் சிங்கள மக்களைக் கொண்டு நடத்துவதற்கு அரச ஆதரவாளர்கள் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

எதிர்வரும் 13ஆம் திகதி ஜெனிவா ஐ.நா. தலைமையகக் கட்டடத்தின் முன் கூடுமாறு ஐரோப்பிய நாடுகளில் வாழும் சிங்கள மக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது. இதற்காக ஏற்படும் செலவுகளை ஐரோப்பிய நாடுகளில் வாழும் பெரும்பான்மை இன தனவந்தர் கள் மற்றும் இலங்கையில் உள்ள சிங்கள வர்த்தகர்கள் ஏற்றிருப்பதாகத் தெரிகிறது. எனினும் இதன் பின்புலத்தில் இலங்கைத் தூதரகங்களின் செயற்பாடு உள்ளது என்று நம்பத்தகுந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான குற்றச்சாட்டுகளை எதிர்த்து இவர்கள் பெரும் பேரணியொன்றை நடத்தவும் திட்டமிட்டுள்ளனர் எனத் தெரிகிறது. இதேவேளை, ஜெனிவாவில் எதிர்வரும் 19ஆம் திகதி மாபெரும் ஆர்ப்பாட்டமொன்றை நடத்துவதற்கு புலம் பெயர் தமிழர்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். ஐ.நா. மனித உரிமை அமர்வில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என வலியுறுத்தி நடைபெறும் இந்த ஆர்ப்பாட்டத்தில் பெருந்திரளானோர் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப் படுகிறது.


**PERSONAL CLASS**
364, Stanly Rd.
JAFFNA
(Near- DMI)

G.A.Q, B.A-I,
B.A FINAL
தமிழ் -
K.தர்மராஜா
Pol.sci-புவனதாஸ்
அனைத்துப் பிரிவு வகுப்பு
தளும் நாளை ஆரம்பம்
03.09.2011 (சனி)

**ஸ்கூலர் வாகனம் தேவை**

நல்ல நிலையில் உள்ள ஸ்கூலர் வாகனம் விற்பனைக்குத் தேவை. விற்பனை செய்ய உள்ளவர் கீழ் உள்ள இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

T.P- 0759575703

**OMNI வான் விற்பனைக்கு**

புதிய மாருதி சுசுக்கி OMNI வான் கம்பனியின் புதிய விலையிலும் பார்க்க குறைவாக கம்பனியின் பழைய விலைக்கு உங்கள் பெயரில் முதற்பதிவாக செய்து தரப்படும். முற்றிலும் புதிய நிலையில் உள்ளது.

தொடர்பு- 0750738989


## பதற்றந்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாட்டியுள்ளனர்.

குடாநாட்டில் தற்போது திட்டமிட்டு உருவாக்கப்பட்டுள்ள அசாதாரண நிலை குறித்துக் கவலை வெளியிட்டுள்ள அவர்கள் இவ்வாறான சம்பவங்கள் மேலும் தொடர்ந்தால் நிலைமை கட்டுக்கடங்காமல் எல்லை மீறக் கூடிய சாத்தியங்கள் உள்ளதாகவும் எச்சரித்துள்ளனர்.

உரிய தரப்பினர் இந்தப் பதற்ற நிலையை நீக்கி இயல்பு நிலையை ஏற்படுத்தாவிட்டால் அது அவர்களுக்கே பாதகமான நிலையை ஏற்படுத்தும் எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாகக் குடாநாட்டின் பல இடங்களிலும் சந்தேகத்துக்கு இடமானவர்களின் நடமாட்டங்கள் தொடர்ந்த வண்ணமுள்ளன. இவர்கள் இரவில் வீடுகளுக்குள் புகுந்து மக்களை அச்சுறுத்துவதும் மக்கள் திரண்டு அவர்களைக் கலைத்துச் சென்றால் ஓடித்தப்புவதும் சகஜமாகிவிட்டது. மக்களால் விரட்டிச் செல்லப்படுபவர்கள் பிடிபடும் போது உடனடியாக அந்த இடத்துக்கு வரும் இராணுவத்தினர் இந்த நபர்களைப் பாதுகாப்பதுடன் விரட்டிப் பிடித்த மக்களை கண்டபடி தாக்கும் சம்பவங்களும் தொடர்கின்றன.

இந்தச் செயற்பாடுகள் நாளுக்கு நாள் அதிகரிக்கின்றனவே தவிர குறைந்த பாடில்லை. இதனால் குடாநாட்டு மக்கள் இரவில் தூக்கமின்றி அச்சத்துடன் பொழுதைக் கழிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

இதனால் குடாநாட்டில் மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் படையினர் - பொதுமக்கள் இடையேயான உறவில் பெரும் விரிசல் நிலை ஏற்பட்டுள்ளது. காரணம் பொலிஸார் மற்றும் படையினரின் ஆசீர் வாதத்துடனேயே இந்த சந்தேகத்துக் இடமானவர்களின் நடமாட்டம் இடம்பெறுவதாக மக்கள் கருதுகிறார்கள். படைத்தரப்பினர் இதனைக் கட்டுப்படுத்த முனையாதமையும் அவர்கள் மீதான சந்தேகம் வலுக்கக் காரணமாகின்றது.

எனவே இந்தச் சந்தேகத்துக் இடமானவர்களின் நடமாட்டம் உடன் கட்டுப்படுத்த வேண்டும் என்பதையே மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

இந்த விடயத்தில் படையினரும் பொலிஸாரும் உடனடியாக இதயசுத்தியுடன் செயற்பட்டுக் குடாநாட்டு மக்கள் இயல்பு நிலையுடன் வாழ வழி வகுக்க வேண்டும். தவறினால் அவை பின்னர் வேண்டத்தகாத விளைவுகளை உண்டுபண்ணக் கூடும். மக்களின் மனங்களை வெல்லப் படையினரும் பொலிஸாரும் உடனடியாக இதனைக் கட்டுப்படுத்தும் செயற்பாட்டில் இறங்கவேண்டும். பொதுமக்களைத் தாக்கும் செயற்பாடுகளைக் கைவிட்டு அவர்களுடன் நல்லுறவைப் பேணி சேவையாற்ற வேண்டும் என்று தெரிவித்தனர். (த-323)

## மன்னாரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாயார் அவரை பார்ப்பதற்காக கடைக்குச்சென்றிருந்த போது கடைக்குள்ளேயே கனகரத்தினம் மகேந்திரன் இரத்த வெள்ளத்தில் இறந்து கிடப்பதை கண்டு கத்தி சத்தம் போட அயலில் உள்ளவர்கள் அவ்விடத்தில் குவிந்தனர்.

இதனைத்தொடர்ந்து விடத்தல் தீவு பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டதைத் தொடர்ந்து விடத்தல் தீவு பொலிஸார் சம் பவ இடத்துக்கு வந்து விசாரனைகளை மேற்கொண்டனர்.

அதன் பின் மன்னார் பதில் நீதிவான் எம்.எம். சபூர்தின் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டார்.

இதன் போது கொலையாளி கடைக்குப் பின்புறமாக வந்து தகரத்தினை கிளித்துக் கொண்டு உள்ளே நுழைந்து சென்று கொலை செய்துள்ளமை விசாரணைகளின் போதும் தடயங்களின் போதும் தெரிய வந்தது.

(த-323)


**அப்பன் மோட்டார் சைக்கிள் வேக்ஸ்**

* மோட்டார் சைக்கிள் திருத்தல்
* சேவிஸ் செய்தல்
* மோட்டார் சைக்கிள் பாட்ஸ் விற்பனை போன்ற சேவைகளை இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்பு:- உப்பு மடம் சந்தியில் இயங்கும் எமது நிறுவனம் தற்போது கீழுள்ள முகவரியில் இயங்குகின்றது என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

பொற்பதி,
காளிகோயில் வீதி,
கோண்டாவில்.

**தவறிவிட்டது**

திருலோகநாதன் நெமேந்திரா ஆகிய எனது NIC இல. (890323570V), லைசன்ஸ், இன் சுரன்ஸ்Tax, ATM அடங்கிய பேர்ஸ் யாழ்ப்பாணம் கல்லுண் டாய் வெளிக்கும் மூளாய்க்கு மிடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் இல.310A ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள சிறிசக்தி வணிக நிலையத்தில் அல்லது 0772208338 என்ற தொலைபேசிக்கு தொடர்பு கொண்டு தந்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.

அனேகர் வாழ்வில் நம்பமுடியாத அதிசயங்களை வழங்கிவரும்

**சோ.கூ.றே. மணிமேர்க்கஸ் பெட்டகம்**

* சங்கடங்கள் விலகுகின்றன...
* துன்பங்கள் துரத்தப்படுகின்றன...
* பிரச்சினைகள் பின்வாங்குகின்றன...

செல்வம், ஞானம், அதிர்ஷ்டம், புகழ் கிடைக்கின்றன.

விலை ரூபா 5100/=

விரைவில் அற்புதமான மாற்றங்கள் உங்கள் வாழ்வில் அதிசயமாக நிகழ்வதை நீங்களே உணர்வீர்கள்.

உங்கள் இருப்பிடங்களுக்கு தரவிருப்பதற்கு அழையுங்கள் 0771399950.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று மாலை இடம்பெற்றது.

இதில் வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன் உட்பட சுகாதாரத்துறை சார்ந்த அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

இதில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் வருமாறு:

டெங்குநோயின் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் எதிர்வரும் 5 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் ஒருவார காலத்துக்கு டெங்கு கட்டுப்பாட்டு வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஒருவார காலத்தினுள் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்த வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு ஏதுவாக வடமாகாணத்தின் ஏனைய மாவட்டங்களில் இருந்தும் அதிகாரிகள் வரவழைக்கப்பட உள்ளதுடன் வாகனங்கள், மருந்து விசிறும் உபகரணங்கள் என்பனவும் பெறப் பட்டுள்ளன. அத்துடன் அந்த நடவடிக்கைகளை அரச சார்பற்ற நிறுவனங்களுடனும், பொலிஸாருடனும் இணைந்து மேற்கொள்ளத் தீர்மானிக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. யாழ்.மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட சகல பிரதேசங்களிலும் காலை மற்றும் மாலை இரு வேளைகளிலும் புகையூட்டல் நடவடிக் கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. ஏனைய பிரதேசங்களில் தொடர்ந்து டெங்கு நோயாளர்கள் இணங்காணப்பட்ட இடங்கள் மற்றும் டெங்கு பரவக் கூடிய இடங்கள் அனைத்திலும் புகையூட்டல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வுப் பிரசார நடவடிக்கைகள் சகல மட்டத்திலும் மேற்கொள்ளப்படவுள்ளன. அத்துடன் வீடுகள், திணைக்களங்கள், கட்டடங்கள் தோறும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு டெங்குபரவக் கூடிய சூழ்நிலை காணப்படும் இடங்களில் சிவப்பு 'ஸ்ரிக்கர்' ஒட்டும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் படவுள்ளன. டெங்குபரவும் வகையில் காணப்படும் இடங்களின் உரிமை யாளர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கலும் செய்யப்படவுள்ளது. டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் வகையில் 24 மணிநேரமும் இயங்கக் கூடியவகையில் குழு ஒன்று அமைக்கப்படவுள்ளது. (த-15-4)

"கல்வி இயலிலே காவியம் படைப்போம்"
A/L 2012, A/L 2013
கலை, வர்த்தக பிரிவு
ஆரம்பம்: 03-09-2011 சனி 8.00மணி
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

சிங்களம்
புதிய பிரிவுகள் ஆரம்பம் 03.09.2011 சனியன்று [காலை 6.30- 10.30 மாலை 4 - 7 [01 மணித்தியால வகுப்புக்கள்] மிகவும் இலகுவான முறையில் சிங்களம் பேச, எழுத வாசிக்க [சனி, ஞாயிறு மற்றும் கிழமை நாள்களில் வகுப்புகள் நடைபெறும்.
ஸ்ரீ மாஸ்டர்
ஸ்ரீ இரண்டாம் மொழி கல்வி நிறுவகம்
இல 41, றக்காலேன், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
தொ.பே.0777033729
G.C.E O/L [இரண்டாம் மொழி சிங்களம்] பரீட்சைக்கு தோற்ற உள்ளவர்களுக்கான Paper Class 11.09.2011 ஞாயிறு தொடக்கம் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் மு.ப 11.30 - பி.ப ஒரு மணிவரை நடைபெறும். எவரும் பங்கு கொள்ளலாம்.

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
A/L எழுதிய மாணவர்கள், பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்களுக்கான
சனி, ஞாயிறு மற்றும் வாரநாட்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம் - 05.09.2011
வார வகுப்பு ( திங்கள், புதன், வெள்ளி ) - 1 மாதம்
பிரிவு 1 : காலை 8.00 - 9.30 பிரிவு 2 : காலை 9.30 - 11.00
பிரிவு 3 : மாலை 3.00 - 4.30 பிரிவு 4 : மாலை 4.30 - 6.00
சனி, ஞாயிறு வகுப்பு - 3 மாதம்
பிரிவு 1 : காலை 8.00 - 10.00 பிரிவு 2 : காலை 10.00 - 12.00
பிரிவு 3 : மாலை 2.00 - 4.00 பிரிவு 4 : மாலை 4.00 - 6.00
இதுவரை MyWay பயிற்சியினை பூர்த்தி செய்த அனைவருக்கும் 04.09.2011 ஞாயிறுக்கிழமை பயிற்சிப்பூர்த்திக்கான சான்றிதழ் மற்றும் டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படும்
MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505

SAAMSON ENGLISH
3 மாத சனி, ஞாயிறு பயிற்சி நெறி
உலகில் எந்தவொரு குழந்தையும் முதலில் படித்துவிட்டு தன் தாய் மொழியைப் பேசப் பழகுவதில்லை, மாறாக பிறர் பேசுவதை அவதானித்தே அதுபோல தானும் சுயமாக வசனங்களை உருவாக்கி பேசப்பழகுகிறது.
புத்தகத்தைப் படித்தலோ, மனப்பாடம் செய்தலோ அல்லது இலக்கணத்தைக் கற்றலோ ஆங்கிலத்தில் பேசமுடியாத நிலைமையினையே ஏற்படுத்தும். ஒரு மொழி பேசப்படுகின்ற சூழலில் இருந்தால் மட்டுமே உங்களாலும் அந்த மொழியைப் பேசிப் பழக முடியும்.
10 வருடங்களுக்கும் மேலான எமது ஆங்கில மொழிப்பயிற்சி பற்றிய ஆய்வில் மாணவர்களை நேரடியாக ஏனையவர்களுடன் உரையாடற் பயிற்சியில் ஈடுபடுத்துவதன் மூலம் தன்னியல்பாகவே அவர்கள் எந்தவொரு வசனத்தினையும் உருவாக்கி ஏனையவர்களுடன் பேச முடிவதை நாம் நிரூபித்துள்ளோம்! நீங்களும் இந்த 3 மாத பயிறிசியில் இணைய விரும்புகிறீர்களா?
பயிற்சியில் சேர விரும்பும் மாணவர்கள், ஆசிரியர்கள், பட்டதாரிகள், அரச, அரச சார்பற்ற நிறுவனப் பணியாளர்கள், வெளிநாடு செல்ல விரும்புவோர் மற்றும் 14 வயதுக்கு மேற்பட்ட எவரும் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவு செய்ய வேண்டிய இறுதித் திகதி: 06.09.2011
சனி, ஞாயிறு பிரிவுகள்
காலை - 08.09, 09-10, 10-11, 11-12
மாலை - 01-02, 02-03, 03-04, 04-05
(ஒரு பிரிவில் 16 பேருக்கு மட்டுமே அனுமதி)
பயிற்சிக் கட்டணம் 3000.00
SAAMSON ENGLISH 279, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்.
TEL: 0776214567

After A/L? CIMA-UK Per Level Rs.14,400 Engineering-USA 80% off BIT University of Colombo Per year Rs.20,000 Multimedia USA 80% off
இலவச முன் பதிவுகளுக்கு இன்றே உங்கள் <Name>, <Address>, <Course> 772395895 என்ற இலக்கத்துக்கு SMS அனுப்பி காலதாமதத்தை தவிருங்கள்
Government Schol.
MCS 324, Palaly Road, Campus Junction, Jaffna.
Supported By UNDP/JRRP
Diploma Courses.. Free Course fee* MsOffice, AutoCAD, Web Designing *Hardware *Accounting *DTP *English,
USA, UK பல்கலைக்கழகங்களில் Master Degree
Kids Courses
Free Course fee: BCS-UK, IELTS / TOEFL, CISCO-CCNA, Oracle Java, ICDL,

D.C.M
கணக்கீடு - A.P.பபீரதன்(B.B.A Fin.Spl)
A/L - 2013 Sat,Sun 7-8 am Sat,Sun 9-10 am
A/L - 2012 Sat,Sun 8-8 am Sat,Sun 11-12 am
ஆரம்பம் 3 - 9 - 2011 Sat

மலிவு விற்பனை
சிங்கப்பூரில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட குளிர்சாதனப் பெட்டிகள், SONY wega Flat 21", T.Vகள், Box, அம்பிளிபயர், DVD மலிவு விலை யில் விற்பனைக்குண்டு.
தொடர்பு: T.P- 0770440570, 0778449829 இ.மகேஸ்வரன் (அம்மன் கொம்பனி) ஆரம்பப்பா சாலை அருகில் (சீவிப்புளியடி) K.K.S. வீதி இணுவில்.

கணினி விற்பனைக்கு
P(VI)கணினி LCD Monitorமற்றும் அனைத்துப் பொருள்களுடனும் ஒரு வருட உத்தரவாதத்துடன் விற்பனைக்குண்டு.
Internet, Skype, V/call பாவிக்கலாம்.Free 4GB Pen Drive/ Web Camera. 19750/= மட்டுமே.
Sky Computer, 162, Main Street, Jaffna. 0212221417 0750698608

A/L கலை, வர்த்தகப் பிரிவு
TA:S.சிவா
LO:S.துரை
H.C:S.ஜெயக்குமார்
P.S:S.செந்தூரன்
HI:S.S.தாஸ்
GE:S.P.கரன்
AC:S.தவா
EC:P.சண்
B.St.S.பிரதீபன்
A/L 2012, 2013 PAPER CLASS ஆரம்பம்
G.A.Q யாழ்.போதனை.
யூனிவேர்சல் கந்தர்மடம்
தனிப்பாட அனுமதி வழங்கப்படும்.

A/L 2012 LOGIC P.சுமன் நிகழ்தகவு Sat, Sun B I - 8-9 Am B II - 9-10Am NEC

A/L 2012 வரலாறு R.R. ஆனந்தன் இலங்கை வரலாறு பகுதி - I (Sat,Sun-11-12pm) ஆரம்பம் 03.09.2011 சனி 11.00 am NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி,யாழ்.

வேலையாள்கள் தேவை
மேசன், கூலியாள்கள் தேவை.
நேரில் வரவும்.
TILKO JAFFNA CITY HOTEL
70/6, K.K.S. ROAD,
JAFFNA.

யாழ்ப்பாணத்தில் புதிய பிரிவுகள் ஆரம்பம்!!!
Diploma in Mobile Phone Repairing
(Software & Hardware Repairing)
(பல புதிய விடயங்களுடன்)
(With Digital Electronic)
சகலவகையான கைத்தொலைபேசிகளையும் மிகக் குறுகிய காலத்தில் நீங்களே திருத்துவதற்கான தொழில்சார்கற்கை நெறி !!!
வகுப்பு ஆரம்பம் - சனி மற்றும் ஞாயிறு நேரம் காலை 10 மணி
உங்கள் பதிவுகளை உடன் மேற்கொள்ளவும் !!
விபரங்களுக்கு : UNI - ICT CAMPUS
No - 83, Palaly Road,
Kantharmadam, Jaffna.
T.P No : - 021 - 321 - 6433 / 0777 110862

INFORMATION TECHNOLOGY PARK
Jaffna, Sri Lanka.
Under the purview of the
Ministry of Technology and Research
MPCS Building, 127, K.K.S.Road, Jaffna, Sri Lanka.
Office: 021 222 3641 Fax : 021 222 3643
அரச நிறுவனமான தகவல் தொழில் நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
Online Class
Diploma in PC Application & Office Management (MS Office syllabus included)
Workshop Classes
Internet & E-Mail
Adobe Photoshop
Diploma Classes
Diploma in MS Office
Diploma in DTP
Certificate Courses
MS Word, MS Excel
MS Access, Visual Basic
CorelDRAW, PageMaker
சகல கற்கை நெறிகளுக்குமான பதிவுக் கட்டணம் :250/=
விண்ணப்பப்படிவங்களுக்கும், பதிவுகளுக்கும் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.
வார நாள் வகுப்புகள் ஆரம்பம் – 23/09/2011
வார இறுதி வகுப்புகள் ஆரம்பம் – 25/09/2011
-Executive Officer-

# மரண அறிவித்தல்

## சபாபதி நற்குணம்



கோம்பு, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதி நற்குணம் 31.08.2011 புதன்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதி - சிவப்பி தம்பதியரின் மூத்த புதல்வரும், கிருஷ்ணலீலாவின் அன்புக் கணவரும், கோபு, பாபு, தினேஸ், ஆதவன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயகுணரட்ணம், மகாராணி, ரஞ்சிதமலர் (கலா) ஆகியோரின் பாசத்துக்குரிய சகோதரனும், வசந்தினி, யசோதா, ஹம்சிகா ஆகியோரின் மதிப்புக்குரிய மாமனும், மலர், மகாராஜா, யோகலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் அஷ்வினி, ஜவீனா, றவீனா ஆகியோரின் பேரன்புக்குரிய பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.09.2011) சனிக்கிழமை மு.ப 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
மனைவி: கிருஷ்ணலீலா
மகன்மார்: கோபு, பாபு, தினேஸ், ஆதவன்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் ... வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.09.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org